SRI

VAGGEYAKARAKA CHARITRAM

(History of Iyalisai Pulavars)

வாக்கேயகாரர்களின் சரித்திரம்

(IN TAMIL)

Revised & Enlarged Second Edition

Very useful for Libraries & for Govt. Examinations
Lower & Higher Grade in Indian Music.

Published by

KALLIDAIKURICHI
Vainika Vidwan **A. SUNDARAM IYER**

 1956 [Price Rs. 2—0—0

ஸ்ரீ

வாக்கேயகாரர்களின் சரித்திரம்

(இயலிசைப் புலவர்களின் சரித்திரம்)

(இரண்டாம் பதிப்பு)

இந்திய ஸங்கீதம் டெக்னிகல் பரீக்ஷைகளுக்கும்,
உயர்தரப் பள்ளிகளுக்கும் மிக உபயோகமுள்ளது.

ஸங்கீத கலாநிதி முசிரி ஸுப்ரம்மண்யய்யர்
அவர்களுடைய மதிப்புரையுடனும்

P. ஸாம்பமூர்த்தி, B.A., B.L.,
அவர்களுடைய முகவுரையுடனும் கூடினது

இங்ஙனம்
கல்லிடைக்குறிச்சி
வைணிக வித்வான்
A. ஸுந்தரமய்யர்
அவர்களால் பிரசுரம் செய்யப்பட்டது

 1956 [விலை 2—0—0

கர்னாடக வைணிக கான வித்யாலயம்
(ஸ்தாபிதம் 1933)
நெ. 8. நாட்டு சுப்பராய முதலி தெரு,
மயிலாப்பூர், சென்னை—4.

இவ்வித்யாலயத்தில் மாணவ மாணவிகளுக்கு வீணையும், வாய்ப்பாட்டும் கற்பிக்கப்படும், கவர்ன்மெண்டு பரீக்ஷைகளுக்கு அனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் வந்து தெரிந்துகொள்ளவும்.

Books can be had of:-

INDIAN MUSIC PUBLISHING HOUSE

No. 4, Bunder Street (Top floor)

G. T. MADRAS--1

The Alliance Press, Mylapore, Madras-4.

மதிப்புரை

வைணீக வித்வான் ஸ்ரீ A. ஸுந்தரமய்யர் த்ரிமூர்த்தி களில் ஒருவரான தீக்ஷிதரவர்கள் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர். அரிய ஸங்கீத நூல்களைப் பிரசுரித்துள்ளார். எளிய நடையில் எல்லோராலும் ஸுலபமாக கற்றுக் கொள்ள ஸௌகரியமாக யிருக்கின்றன.

ஸங்கீதத்தில் பரமாசார்யர்களாக இருந்த முன்னோர் கள் யார் யார் எவ்வளவு மஹான்கள் நாதப்ரம்மத்தை உபாஸித்து ஸங்கீதத்திற்குத் தொண்டு புரிந்து நமது கர்னாடக ஸங்கீதத்தை இவ்வளவு வ்ருத்தியம்சத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது, அநேகம் வித்யாப் யாஸிகளுக்குத் தெரியாமலிருக்கிறது. இது அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் என்பது யாவராலும் ஒப்புக் கொள்ளத்தக்க விஷயம். இதுவரையில் இத்தகைய மஹான்களின் சுருக்கமான ஜீவிய சரித்திரங்கள் ஆந்த்ர பாஷையிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. அதனால் ஆந்த்ர பாஷை தெரியாதவர்களுக்கு நன்கு தெரிந்துகொள்ள முடியாமலிருந்தது.

"**வாக்கேயகாரர்களின் சரித்திரம்**" (இயலிசைப் புலவர் களின் சரித்திரம்) என்ற நூலை தற்சமயம் ஸ்ரீ ஸுந்தரம் ஐயர் வெளியிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்க விஷயம். ஷ வாக்கேயகாரர்களின் சரித்திரங்கள் சுருக்கமாக இருப்பினும், அவசியமானவையெல்லாம் காணப்படுகின்றன.

ஸங்கீத அப்யாஸிகளுக்கு இவ்வளவு வரை தெரிந்து கொண்டாலே போதும் என்பது எனதபிப்ராயம்.

இன்னும் அநேக முக்கிய நூல்களை பிரசுரம் செய்ய ஊக்கமளிக்க இது காரணமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

Madras,
4—3—'50

Musiri Subramania Iyer,
Principal,
Central College of Karnataka Music.

ஸங்கீத ஸம்ப்ரதாயப்ரதர்ஶினி கிரந்த கர்த்தா



ப்ரம்மஸ்ரீ ஸுப்பராம தீக்ஷிதர் *1839-1906*
எட்டயபுரம் ஆஸ்தான வித்வான்

த்ரிமூர்த்திகளில் ஒருவராகிய ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் தம்பி பேரனும் எட்டயபுரம் ஆஸ்தான வித்துவானுமாகிய ஸ்ரீ ஸுப்பராம தீக்ஷிதர் காலம் சென்றதைப் பற்றிய இரங்கற் பாக்கள். நவம்பர், 25, 1906.

அகவல்

கவிதையு மருஞ்சுவைக் கான நூலும்
புவியினர் வியக்கு மோவிய பொற்பும்
மற்றுள பெருந்தொழில் வகைகளிற் பலவும்
வெற்றி கொண்டிலங்கிய மேன்மையார் பரத
நாட்டிலிந்நாள் அந்நியர் நலிப்ப
ஈட்டிய செல்வ மிறந்தமையானும்
ஆண்டகையொடு புக ழழித்தமை யானும்
மாண்டன பழம்பெரு மாட்சியார் தொழிலெல்லாம்
தேவர்கள் வாழ்ந்த சீர்வளர் பூமியில்
மேவிய குரக்கர் விளங்குதல் போல
நேரிலாப் பெரியோர் நிலவிய நாட்டிற்
சீரில்லாப் புல்லர் செறிந்து நிற்கின்றார்:
இவரிடை,
சுரத்திடை யின்னீர்ச் சுனையது போன்றும்
அரக்கர்தங் குலத்திடை வீடணனாகவும்
சேற்றிடைத் தாமரை செம்மலர் போன்றும்
போற்றுதற்குரிய புனிதவான் குலத்தில்
நாரதமுனிவ னமர்மிசை யருளாற்
பாரத நாட்டிற் பழமாண் புறுகென
மீட்டுமோர் முறையினவன் மேவின னென்ன
நாட்டு நற்சீர்த்தி நலனுயர் பெருமான்
தோமறுசுப்ப ராமனற் பெயரோன்
நாமகள் புளகுற நம்மிடை வாழ்ந்தான்
இன்னான் றனு மெமை யகன்றேகினன்;
என்னே நம்மவ ரியற்றிய பாவம்!
இனி யிவ னனையரை யெந்நாட் காண்போம்?
கனி யறு மரமெனக் கடைநிலை யுற்றோம்
அந்தோ மறலி நம் மமுதினைக் கவர்ந்தான்!
நொந்தோ பயனிலை; நுவலயா துளதே?

விருத்தம்

1. கன்னனொடு கொடை போயிற்றுயர் கம்ப
நாட்டனுடன் கவிதை போயிற்
றுன்னரிய புகழ்ப் பார்த்தனொடு வீரமகன்ற
தெனவுரைப்ப ரான்றோர்;
என்னக நின்றகலாதோன் அருட் சுப்பராம
னெனு மிணையிலா விற்
பன்னனொடு சுவை மிகுந்த பண்வளனு மகன்ற
தெனப் பகரலாமே.

2. கலைவிளக்கே, யிளிசை* யெனுஞ்சிற்றூரிற்
பெருஞ்சோதி கதிக்கத் தோன்று
மலைவிளக்கே, யெம்மனையர் மனவிருளை
மாற்றுதற்கு வந்தஞான நிலை விளக்கே
நினைப்பிரிந்த இசைத் தேவி தெய்யகல நின்றதட்டி
னுலைவிளக்கே யெனத் தளரு மந்தோ!
நீ யகன்ற துய ருரைக்கற் பாற்றோ?

3. மன்னரையும் பொய்ஞ் ஞான மதக்குரவர்
தங்களையும் வணங்கலாதேன்
தன்னனைய புகழுடையாய், நினைக்கண்ட
பொழுது தலை தாழ்ந்துவந்தேன்;
உன்னருமைச் சொற்களையே தெய்விகமா
மெனக் கருதி வந்தேன்; அந்தோ,
இன்னமொருக் காலிளிசை*க் கேகிடி னிவ்
வெளியன் மன மென்படாதோ?

* இளிசை-எட்டயபுரம்

நவம்பர், 25, 1906. சுப்பிரமணிய பாரதி.

ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதரின் புதல்வர்
அம்பி தீக்ஷிதர் (முத்துஸ்வாமி தீக்ஷிதர்)



அநேக க்ரந்தங்களையும் அச்சிடாத அரிய
பல கீர்த்தனங்களையும் சேகரித்துக் கொடுத்த
எட்டயபுரம் ஆஸ்தான வித்வான்
இந்நூலாசிரியரின் குரு

FOREWORD

By

Prof. Sambamurthi, B. A. B. L.

Head of the Department of Indian Music,
University of Madras.

India has produced scholars of eminence in the realm of Musicology. Their works help us to trace the evolution of musical concepts through the ages. India has also produced composers who have bequeathed to us excellent compositions. Books in Tamil giving notes on these illustrious sons of India are almost non-existent. The present book will supply a long-felt want. The author has had the privilege of access to the manuscripts left by Subbarama Dikshitar, the author of **Sangita Sampradaya Pradarsini**. Brief summaries of the topics dealt with in the standard Lakshana Granthas and biographical details concerning musical luminaries are given in the book. This will be of use to teachers and students alike.

MADRAS
7 - 3 - 50

P. SAMBAMURHTI

ஸ்ரீ குருகுஹாய நம:

ஜகத்குருஸ்ரீமச்சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்ராசார்ய ஸ்வாமிகள் அருளிய திவ்ய ஸ்ரீ முகத்துடன் ஆரம்பித்த புஸ்தகங்கள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. ஏற்கனவே மதருஸ் கவர்ன்மெண்டு பரீக்ஷைக் குறிய **லோயர் க்ரேடு புது ஸிலபஸ் ஹயர்க்ரேடு, ஹயர் புது ஸிலபஸ் ஸப்லிமெண்டும்** ஆரம்பப் பாடமான **அப்யாஸகானம்** தீக்ஷித கீர்த்தன மாலா 9 பாகங்களும் வெளிவந்துள்ளன.

இப்போது வாக்கேயகாரர்களின் சரித்திரம் இரண்டாம் பதிப்பு வெளியிட்டிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரியப் படுத்துகிறேன்.

நாதப்ரம்மத்தை உபாஸித்து ஸங்கீதத்திற்குத் தொண்டுபுரிந்த **இயலிசை புலவர்களின்** சரித்திரம் முன்பே ப்ரம்மஸ்ரீ **ஸுப்பராம தீக்ஷிதர்** அவர்களால் தமிழில் எழுதப் பட்டு அதைக் கொடுத்துதவிய எனது பரம குருவான **அம்பி தீக்ஷிதர்** ஞாபகார்த்தமாக இந்நூல் பிரசுரிக்கலானேன். முன்பு எழுதிவைத்த சரித்திரங்களோடு 1950வரை இருந்த பல வித்வான்களுடைய சரித்திரமும் இதில் சேர்ந்துள்ளது.

வித்வான்களுக்கும், வித்யார்த்திகளுக்கும் மிகவும் உபயோகமானது. ஆஸ்தீகர்கள் வாங்கி ஆதரிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்.

மயிலாப்பூர்
8—12—56

கல்லிடைக் குறிச்சி
வைணிக வித்வான் A. **ஸுந்தரமய்யர்**

வாக்கேயகாரர்களின் சரித்திரம்

பொருளடக்கம்





வாக்கேயகாரர்களின் சரித்திரம்

அல்லது

இயலிசைப் புலவர்களின் சரித்திரம்

1. ஸ்ரீ சார்ங்கதேவர்

இந்த சார்ங்கதேவர் காஷ்மீர தேசத்தியர். வர்டிகணர் என்ற ரிஷியின் கோத்திரத்தைச் சேர்ந்த பாஸ்கரர் என்பவருடைய பௌத்திரர். சொட்டல தேவருடைய புத்திரர். இவர் யாதவ வமிசத்தவரும் (தௌலதாபாத்) என்னும் தேவகிரி நகரத்தை சகம் 1132 கி, பி. 1210 முதல் சகம் 1169, கி. பி. 1247 வருஷம் வரையில் அரசாக்ஷி செய்தவருமான சிங்கணராஜாவின் காலத்தில் இருந்தவராகத் தெரிய வருகிறது.

ஆரிய பாஷையிலும், ஸங்கீதத்திலும், மிகச் சாமர்த்யமுள்ள இந்த சார்ங்கதேவர் "அத்யாத்ம விவேகம்" என்ற ஒரு வேதாந்தகிரந்தம் செய்திருக்கிறார்.

இவரால் செய்யப்பட்ட ஸங்கீத ரத்நாகரத்தில் "நிஸ்ஸங்க" (ஸந்தேஹமற்றவர்) என்ற பிருதை வகித்திருப்பதாயும், பரதர், மதங்கர், கீர்த்திதரர், கோஹலர், கம்பளர், அசுவதரர், ஆஞ்ஜநேயர். அபினவகுப்தர், ஸோமேசுரர், முதலியவர்கள் மதங்களை நிருபித்திருப்பதாயும் சொல்லி யிருக்கிறார்.

இந்த ஸங்கீதரத்நாகரத்தில் முதலில் ஸங்கீதப் பிரசம்சை முதலாவதான ஸ்வரகதாத்யாயத்தில் சாரீரஉத்பத்தி, நாதோத்பத்தி, சுருதி, ஜாதி, சுத்தஸ்வர, விக்ருதிஸ்வரங்கள், ஸ்வரங்களில் குலம், ஜாதி, நிறம், த்வீபம், ரிஷி, தேவதை, சந்தசு, ஜாதி சாதாரவர்ணணம், காகல்யந்தரங்களின்பிரயோகங்கள், லக்ஷணம், அறுபத்துமூன்று அலங்காரங்கள், பதிமூன்று விதமான அலங்காரங்கள், ஜாதிகளின் லக்ஷணங்கள், கிரஹம், அம்சம் முதலான லக்ஷணங்கள், கபாலம், கம்பளம், முதலிய அநேக விதமான கீதங்கள், ஆகிய இவைகள் அடங்கி யிருக்கின்றன.

இரண்டாவதான இராகவிபோதாத்யாயத்தில் கிராமராகம், உபராகம், பாஷை, விபாஷை, அந்தரபாஷை, ராகாங்கம், உபாங்கம், பாஷாங்கம், கிரியாங்கம், ஆகிய இவைகளின் லக்ஷணங்கள் அடங்கியிருக்கின்றன.

மூன்ருவதான பிரகீர்ணகாத்யாயத்தில் வாக்கேயகாரர் (இயலிசைப் புலவர்) காந்தர்வர், ஸ்வராதி காயனர், காயனிகள், காயக குணதோஷங்கள், சாரீர லக்ஷணம், சாரீரதோஷம், கமக லக்ஷணம், ஆலாப்தி, காயகப்ருந்தலக்ஷணம், ஆகிய இவைகள் அடங்கி யிருக்கின்றன.

நான்காவதான பிரபந்தாத்யாயத்தில் தாதுக்கள், அங்கங்கள், ஜாதிகள், பிரபந்தங்களின் இரண்டு விதம், சூடை, சாயலாக லக்ஷணம், சூடையென்ற பிரபந்தங்கள், கீதங்களின் குணதோஷங்கள் ஆகிய இவைகள் அடங்கியிருக்கின்றன.

ஐந்தாவதான தாளாத்யாயத்தில் மார்கதாளங் களின் கிரமம், மார்க்கத்தின் எட்டுவிதக் கலைகள் நான்குவித மார்கங்கள், குரு லகுக்களின் பிரமாணம், மாத்ராலக்ஷணம், யதி, லயம், முதலான லக்ஷணங்கள், தேசீ தாளலக்ஷணம், முதலிய இவைகள் அடங்கி இருக்கின்றன.

ஆருவதான வாத்ய அத்யாயத்தில் அநேக வித வாத்யங்களின் லக்ஷணங்கள் அடங்கியிருக்கின்றன.

ஏழாவதான நிருத்யாத்யாயத்தில் நர்த்தன பேதங்கள், பலவித ரஸபாவங்கள், முதலானவைகள் அடங்கியிருக்கின்றன.

இந்த ஸங்கீதரத்நாகரத்திற்கு சில வியாக்யானங்கள் உள. அவற்றில் ஸிம்ஹபூபாலர், கும்பகர்ணர், கல்லிநாதர் ஆகிய இவர்களால் செய்த வடமொழி உரைகள் மூன்றும் கங்காராமன் என்பவரால் செய்த ஹிந்துஸ்தானி உரை ஒன்று. இவற்றில் கல்லிநாதர் செய்த உரை வெகு தேச பிரசித்தியாயிருக்கிறது. இந்த ஸங்கீத ரத்நாகரத்தில் சொல்லப்பட்ட சில பகுதிகள், இக் காலத்து லக்ஷ்ய, லக்ஷணங்களுக்கு ஒவ்வாமையாயிருக்கின்றன என்று, ராமாமாத்யரும், வேங்கடமகியும் கூறியிருக்கிறார்கள். வழக்கத்திலும் அப்படியே இருக்கிறதென்று ஸம்பிரதாயமறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

2. அஹோபலர்

இவர் வடதேசத்து பிராமண குலத்திலுதித்தவர். "ஸங்கீதபாரிஜாதம்" என்னும் நூல் இயற்றியிருக்கிறார். இந்த நூல் ஸங்கீதரத்நாகரம், ஆஞ்ஜனேயர் மதங்களை யனுசரித்துச் செய்திருக்கிறார். லக்ஷண லக்ஷியங்களுடைய இவர் நூல் இக்காலத்து வழக்கத்தை அனுசரித்திருக்கின்றன. இந்த அஹோபல பண்டிதர் 17-வது நூற்றாண்டில் இருந்தவராகத் தெரியவருகிறது. இந்த "ஸங்கீதபாரிஜாதம்" இப்பொழுதும் ப்ரசித்தமாயிருக்கிறது.

3. ராமா மாத்யர்

இவர் தோடரமல்ல குலத்தைச் சேர்ந்த நியோகி பிராமணராகிய திம்மாமாத்யரின் குமாரர். ஆந்திர போஜன் என்று புகழ் படைத்து அநேகதேசத் தரசர்களை வென்று, வித்யாநகரமென்ற விஜயநகர ஸமஸ்தானத்தை அரசாக்ஷி செய்துவந்த கிருஷ்ண தேவராயரின் குமாரத்தியை விவாகம் செய்து கொண்டவரும், கிருஷ்ணதேவராயருக்குப் பின், விஜயநகரத்தை அரசு புரிந்தவருமான ராமதேவ ராயர், தன் சகோதரராகிய வேங்கடாத்ரி ராஜனுடன் சபையில் இந்த ராமாமாத்யரால் செய்யப்பட்ட ஏலே, ராககதம்பம், கத்யப்பிரபந்தம், பஞ்சதாளே சுரம், ஸ்வராங்கம், ஸ்ரீரங்கவிலாசம் முதலிய பிரபந்தங்களை அரங்கேற்றி "அபிநவபரதாசார்யர்', என்ற (பிருதை) பட்டத்தைப் பெற்ருர்.

ராஜனுடைய வேண்டுகோளுக் கிணங்க ராமா மாத்யர் ''ஸ்வரமேளகளாநிதி''யை ராமதேவராயரின் பேரால் சகம் 1472, கி. பி. 1550-ல் ஐந்து பிரகரணங் களாகச் செய்து அரங்கேற்றினுர்.

இந்த ஸ்வரமேளகளாநிதி ஐந்து பிரகரணங் களோடு கூடியது. அவற்றில் முதலாவதான

உபோத்காதப்பிரகரணத்தில் நூலினுட் பொருளடங்கி இருக்கிறது.

இரண்டாவதான ஸ்வரப்பிரகரணத்தில் ஸங்கீதத்தின் பெருமை,காந்தர்வம்,கானம், என்பவைகளின் பேதம், சுருதிகளின் ஸ்தானங்கள், சுத்தஸ்வர விக்ருதி ஸ்வரங்கள், லக்ஷ்ய, லக்ஷண சம்பந்தமான ஸகல ஸ்வரங்களும் அடங்கியிருக்கின்றன.

மூன்ருவதான வீணுப்பிரகரணத்தில் வீணையின் மேளம், சுத்த, விக்ருதிஸ்வரங்களோடு வீணையை மேளம் செய்யும் விதங்களும், முதலில் சுத்தமேள வீணை, இரண்டாவது மத்யமேளவீணை மூன்ருவது அச்யுத ராஜமேள வீணை, ஆகிய இவைகளின் லக்ஷணங்களும் அடங்கியிருக்கின்றன.

நான்காவதான மேளப்பிரகரணத்தில் இருபது மேளங்களும், அந்த 20 மேளத்திலுதித்த ராகங்களும் பக்ஷாந்தரமான 15 மேளங்களும், சாரீரத்துக்கான 20 மேளங்களும், அடங்கியிருக்கின்றன. ஐந்தாவதான ராகப்பிரகரணத்தில் உத்தமம், மத்யமம், அதமம், ஆகிய ராகங்கள் அடங்கியிருக்கின்றன. இவரால் செய்யப்பட்ட மேற்கூறிய பிரபந்தங்களிலொன்ருவது இப்போது காணப்படவில்லை. மேல்கண்ட ஸ்வரமேளகளாநிதி இப்போது ப்ரசித்தத்திலிருக்கின்றது,

4. கல்லிநாதர்

இவர் தோடரமல்ல குலத்தைச் சேர்ந்த லக்ஷ்மணச்சாரியரின் குமாரர். "அபிநவபரதாச்சாரியர்" என்ற பிருது வகித்த "சதுர கல்லி நாதர்."

வித்யாநகரத்தை ஆண்டு வந்த இம்மடி தேவ ராயரின் ஆஸ்தானபண்டிதர். இவர் சகம் 1475 கி. பி. 1553-ல் "ஸங்கீத ரத்நாகரத்திற்கு" கலாநிதி என்னும் வியாக்யானஞ் செய்தவர். இந்த வியாக்யானம் சகல தேசங்களிலும் ப்ரசித்தியடைந்து கொண்டிருக்கிறது.

5. கோவிந்த தீக்ஷிதர்

வித்யாநகரம் என்னும் விஜயநகரத்தை அரசாக்ஷி செய்த ராயர் வமிசத்தவர்களால், ராஜரீகத்தை யடைந்து சகம் 1452- கி. பி. 1530 முதல் சகம் 1592- கி. பி. 1670 வரை தஞ்சாவூர் ஸமஸ்தானத்தை மிகவும் பிரபலமாய் பரிபாலித்து வந்த ரகுநாயக மகாராஜ வமிசத்தில் முதலரசனுகிய செவ்வப்ப நாயக மகாராஜாவானவர் சகம் 1452, கி. பி. 1530 முதல் சகம் 1494, கி. பி. 1572 வரையில் சோழ மண்டலத்தை நீதி தவருமல் பரிபாலித்து வந்தார்.

இதன் விவரம் தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அடுத்த ஸம்ஸப்பிருபள்ளி வாசலிலிருக்கும் ஒரு கற்றூணில் அப் பள்ளிவாசலுக்கு ஏழுவேலி நிலம் தானங் கொடுத்ததாய் எழுதியிருக்கும் தான சாஸனத்தினுல் தெரியவருகிறது,

இந்த செவ்வப்ப நாயகரின் குமாரர் அச்யுதப்ப நாயக மகாராஜாவானவர், கர்னுடக ஸ்மார்த்த பிராமணரும், ஆஸ்வலாயன ஸூத்ரரும். வாசிஷ்ட கோத்திரத்திலுதித்தவரும் காயத்ரீ மந்திரோபாஸனையால் ஸகல சாஸ்திரங்களிலும் வல்லவருமான கோவிந்த தீக்ஷிதரை மந்திரியாகக் கொண்டு சகம் 1499, கி. பி. 1577 முதல் சகம் 1536, கி. பி. 1614 வரையில் சோழமண்டலத்தை ஆண்டு வந்தார்.

ஸ்மிருதியிற் கூறிய உத்தம ச்ரோத்ரீயர்களுக்கு உபயகாவேரீ தீரங்களிலுள்ள புண்யக்ஷேத்திரங்களில் அநேக தானம் செய்து, அநேகர்களுக்கு ஸர்வ மானியங்களும் கொடுத்தார். பஞ்சநத க்ஷேத்திரம் (திருவையாறு) முதல் மாயூரம் வரையிலுமுள்ள காவேரீ தீரங்களில் ஸந்த்யாவந்தன மண்டபங்களும், படித்துறைகளும் கட்டுவிக்கும்படி செய்ததுமல்லாமல் தமது புத்திபலத்தால் விருத்தாசலம் முதல் ராம சேதுவரையிலுள்ள பூமியை அச்யுதநாயக மகாராஜாவால் அரசுபுரியும்படியும் செய்தார். இவருடைய

அனுமதியினுல் திருவையாற்று ஸ்தலபுராணத்தை வட மொழியில் நின்றும் தமிழில் சகம் 1527, கி. பி. 1605-ல் மொழி பெயர்த்ததாக அடியிற்காட்டப்பட்ட ஒரு*கவியால் தெரியவருகிறது.

அச்யுதப்ப நாயகரும் கோவிந்த தீக்ஷிதரும் அரசனும் அமைச்சனு மாயிருந்த போது ஒரு வித்வாஞல் செய்யப்பட்ட ஒரு கவிகாணப்படுகின்றது.

அந்த சுலோகத்தின் கருத்து. அச்யுத, அனந்தா, கோவிந்தா என்னும் மூன்று நாமங்களில் தலையும் கடையுமான பெயர்களை வகித்த அரசனும் அமைச்சனு மாயிருந்த அச்யுத நாயகர், கோவிந்த தீக்ஷிதர், என்ற இவ்விருவரும் சாஸ்திரத்திலும், சஸ்திரத்திலும், யுத்தத்திலும், யாகத்திலும் சமர்த்தர்கள் என்பதுவே யாம்.

இந்த கோவிந்த தீக்ஷிதர் மகானுபாவாளாகிய அப்பய்யதீக்ஷிதரவர்களும் சமகாலத்திலிருந்தவர்கள் என்று அப்பய்யதீக்ஷிதரவர்களின் சரித்திரத்தால் தெரியவருகிறது.

---

*மலிபுனல்சூழ் சோணுடு தஞ்சையிற்காத்திடுமரசர் மதியமைச்ச ஞெலிமறைதேர் கோவிந்த தீக்ஷராயன் றிரு வாக்குடைமையாலே கலியுகத்துச் சகனுண்டு மூவைஞ்ஞாற் றிரு பத்தின்மேற் காணுமேழாயிப் பொலிவருடத்தை யாற் றுப் புராண வடமொழி தமிழாற்புகலுற்றேன்,

அப்பய்யதீக்ஷிதரின் ஜனன காலம் 1476 கி,பி. 1554 முதல் சகம் 1548 கி.பி. 1626 வரை யிருந்திருப்பதாய் தெரிய வருகிறது. கோவிந்த தீக்ஷிதரின் மனைவி நாகாம்பாள் இவர் புத்திரர்களில் மூத்தவர் யஜ்ஞநாராயண தீக்ஷிதர் இளையவர் வேங்கடமகி.

இந்த நாயகராஜ வமிசத்தில் மூன்ருவது அரசனாகிய ரகுநாதநாயகர் ஸகலப்ரக்யாதிகளையும் அடைந்தவர். வித்தைகளில் மிகவல்லவர். பூர்வகாலத்தின் விதிப்படி சகம் 1536, கி.பி. 1614ல் பட்டாபிஷேகராய் கோவிந்த தீக்ஷிதரைக் கொண்டே ராஜ்யகார்யங்களை நடத்தியும் வந்தார். கோவிந்த தீக்ஷிதர் ஸங்கீதத்தில் மிக வல்லவராதலால், மேற்சொன்ன ரகுநாதநாயக மகாராஜாவின் பேரால் "ஸங்கீதஸுதாநிதி" என்ற ஒரு ஸங்கீத லக்ஷண கிரந்தம் செய்திருக்கிருரென்று வேங்கடமகியால் செய்யப்பட்ட சதுர்தண்டிப் பிரகாசிகை வீணைப்பிரகரணத்திலுள்ள சுலோகங்களால் தெரியவருகிறது. இந்த ரகுநாதநாயக மகாராஜன் ஆஸ்தானத்தைச் சேர்ந்த அப்பய்ய தீக்ஷிதர் ரத்னகேட தீக்ஷிதரின் குமாரரான இராஜசூடாமணி தீக்ஷிதர், கோவிந்த தீக்ஷிதரின் குமாரர் யஜ்ஞநராயண தீக்ஷிதர் இவர்கள் முறையே (1) ஸாஹித்ய ரத்நாகரம் (2) ரகுநாதபூப விஜயம் (சம்புகாவ்யம்) (3) ரகுநாத விலாஸ நாடகம், ஆகிய கிரந்தங்களைச் செய்திருக்கிருர்கள்.பாரிஜாதாபஹரண நாடகம் செய்த

குமாரதாதாச்சாரியார், ஆத்ம பரீக்ஷை, தப்தமுத்ராவித்ராவணம் இவைகளைச் செய்த பாஸ்கரதீக்ஷிதர், இந்த ராஜாவின் பேரால் தெலுங்கு பாஷையில் சாரங்கதர சரித்திரம், விஜயவிலாஸம் இவைகளைச் செய்த சேமகூர லக்ஷ்மணாமாத்யர் முதலான பல வித்வான்களை, அபிமானத்தோடு ஆதரித்து வந்தார்.

இந்த மகாராஜாவினால் கும்பகோண க்ஷேத்திரத்தில் ஷோடசலிங்காலயங்களோடு கூடிய மகாமக தடாகத்தை ஜீரணோத்தாரணத்தைச் செய்தும் பண்டிதர்களாகிய சுரோத்ரீயர்களுக்கு சர்வ மானியங்களையும் கோவிந்த தீக்ஷிதர் செய்வித்தார். இவர்செய்த சிலகீதங்கள் இப்பொழுதும் பழக்கத்திலிருக்கிறது.

6. வேங்கடமகி

இவர் கோவிந்ததீக்ஷிதரின் இரண்டாவது புதல்வர். வேங்கடேஶ்வர தீக்ஷிதர் என்ற பெயருடையவர். இவரே வேங்கடமகி. இவர் தமையனாராகிய யஜ்ஞநாராயணதீக்ஷிதரின் மாணாக்கர். இவர் டுப்டீகா வியாக்யானமாகிய வார்த்திகாபரணம் (இது மீமாம்ச சாஸ்திரத்தைச் சொல்வது) செய்தார்.

வடதேசத்திலிருந்து இயலிசைப் புலவர்களில் மாக்ஷிமை யுடையவராகிய தானப்பாச்சாரியாரிடம் தன் தந்தையாரின் உத்திரவினால் இலக்கண

இலக்கியங்களோடு ஸங்கீத சாஸ்திரத்தைத் தெளிவாய்க் கற்றுக் கொண்டு தமது ஆசிரியராகிய தானப்பாச்சாரியார்* பேரால் ஆரபிராகத்தில் "கந்தர்வ ஜனதா" என்னும் கீதத்தை முதன் முதலில் மூன்றுகண்டங்களாய்ச் செய்து தமது தந்தை, தமையன், குரு முதலானவர்களின் முன்னிலையில் பாடி அரங்கேற்றினர்.

அப்பய்ய தீக்ஷிதரவர்களின் சகோதரரான ஆச்சா தீக்ஷிதரவர்களின் பௌத்திரராகிய நீலகண்ட தீக்ஷிதர் வேங்கடேச்வர தீக்ஷிதரின் (வேங்கடமகியின்) சிஷ்யரென்று தம்மால் செய்யப்பட்ட கங்காவதரண காவ்யத்தில் சொல்லி யிருக்கிருர்.

நீலகண்ட தீக்ஷிதர் நீலகண்ட விஜயம் என்னும், கிரந்தம் செய்த காலம். சகம் 1560, கி. பி, 1638 ரகுநாயக மகாராஜனுக்குப் பின் அவர் குமாரரான விஜயராகவ பூபாலன் சகல வித்தையிலும் தேர்ச்சியுள்ளவராய் சோழமண்டலத்தை அரசாக்ஷி செய்து வந்தார். அக்காலத்தில் விஜயராகவமகாராஜாவின் அனுமதியால் வேங்கடமகி "சதுர்தண்டிப் பிரகாசிகை" என்ற ஸங்கீத லக்ஷண கிரந்தத்தைச் செய்தார். இந்நூல் 10 பிரகரணங்களோடு கூடியது.

---

* இந்த தானப்பாச்சாரியர் ஹொன்னய்யரின் குமாரரென்றும், இவருக்கு வேங்கடமந்திரி யென்ற பெயரென்றும் இந்த கீதத்தின் மூன்ருவது கண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அவற்றில் முதலாவது பிரகரணத்தில் வீணைச் குறிய லக்ஷணங்களும்,

இரண்டாவது பிரகரணத்தில் பரதர், மதங்கர் முதலிய முனிவர்களால் சொல்லப்பட்ட சுருதிகள் 22-ம் சுத்தவிக்ருதிஸ்வரங்களும், ஔடவ, ஷாடவ ராகங்களுக்கும் ஏற்படும் விவரங்களும்,

மூன்ருவதான ஸ்வரப்பிரகரணத்தில் சுத்த விக்ருதி ஸ்வரங்கள் கிராமம், மூர்ச்சனைகள் சுத்ததான கூடதானங்கள், அலங்காரங்கள், கமகங்கள், வாதி, ஸம்வாதி, விவாதி, அனுவாதிகள், ஆகிய இவை களின் லக்ஷிய, லக்ஷணங்களும்,

நான்காவதான மேளப் பிரகரணத்தில் பூர்வ மேளங்களாகிய 18 மேளங்களும் ஒவ்வொரு மேளங் களுக்கும் 22 சுருதிகளின் நிரூபணங்களும். சுத்த விக்ருதி ஸ்வரங்களைக்கொண்டு தன்னல் வகுக்கப் பட்ட 72 மேளங்களும் மேற்கண்ட சுத்த விக்ருதி ஸ்வரங்களை அறியும் பொருட்டும் மேல்படி மேள பிரஸ்தாரம் சித்திக்கும் பொருட்டும் ஏற்படுத்திய ர, ரி, ரு, முதலிய சங்கேதாக்ஷரங்களும்,

ஐந்தாவதான ராகப்பிரகரணத்தில் கிரகம். அம்சம், முதலிய பத்துலக்ஷணங்களும், அவைகளுக்குள் அக்காலத்துப் பூர்வாச்சாரியர்களால் ஒப்புக் கொள்ளப்

பட்ட கிரகம், நியாஸம், அம்சங்களோடு கூடிய பிரசித்தமான லக்ஷணங்களும்

ஆருவதான ஆலாபப் பிரகரணத்தில் ஆயித்தம், எடுப்பு, முக்தாயி, முதலான லக்ஷணங்களும்,

ஏழாவதான டாயப் பிரகரணத்தில் உத்கிராகம், மகரணி, முதலான லக்ஷணங்களும்.

எட்டாவதான கீதப்பிரகரணத்தில் சாளக சூடையின் லக்ஷணங்களும் மேல்படி சூளாதி மார்க்கங்களான ஏழுதாளங்களிற் செய்யப்பட்ட கீதங்களுக்கு உத்கிராகம், ஆபோகம் முதலான லக்ஷணங்களும்

ஒன்பதாவதான பிரபந்தப் பிரகரணத்தில், உத்கிராகம் முதலான நான்குதாதுக்கள். ஸ்வரம், பிருதம், பதம், தன்னகம், பாடம், தாளம், ஆகிய ஆறு அங்கங்கள், மேதினீ ஜாதி, ஆனத்தினீ ஜாதி தீபினீ, பாவனீ, தாராவளீ யாகிய ஜாதிகள் பிரபந்தப் பிரிவினைகள் ஆகிய இவைகளின் லக்ஷணங்களும்,

பத்தாவதான தாளப்பிரகரணத்தில் தாளத்திற்குரிய லக்ஷணங்களும் அடங்கியிருக்கின்றன.

இவரே ராகாங்க, உபாங்க, பாஷாங்கராகங்களுக்கு சுலோகரூபமாக லக்ஷணங்களும், கீத ரூபமாக லக்ஷியங்களும் செய்திருக்கிருர். லக்ஷியங்களான

ஒவ்வொரு கீதத்திலுமுள்ள தாதுவின் சமத்காரமும் சுத்த விக்ருதி ஸ்வரங்கள், இவை யென்று தெரிந்து கொள்வதற்கான சங்கேதாக்ஷரங்களையும் சக்கிரம், மேளம், இவற்றின் கணக்கு இன்னதென்றறிவதற் கான சங்கேதாக்ஷரங்களையும், ராகாங்ககீதமாதுவில் அமைத்துள்ள சமத்காரமும் இவர் செய்த கீதங்களைப் பார்த்தால் நன்கு விளங்கும். ஸ்ரீஜயதேவர் செய்த (அஷ்டபதி) கீதகோவிந்தம்போல ஸ்ரீ தியாகராஜ விஷயமாய் இருபத்திநான்கு அஷ்டபதி செய்திருப் பதாய் தெரியவருகிறது.

இவர் சேது யாத்திரை செய்தபோது திருடர் களால் உபாதிப்படுத்தப் பட்டவராய் லலிதராகத்தில் "அரே நிபிடகண்டக துஷ்பிரதேசா" என்னும் கீதத்தைப் பாடினவுடனே ஸ்ரீ ராமலக்ஷ்மணர்கள் கோதண்டபாணிகளாய் வந்து திருடர்களின் உபா தியைத் தீர்த்தார்களாம். இந்த கீதத்தை மாயாமாளவ கௌளை உபாங்கராக வரிசையில் பார்த்தால் தெரியும். ஒரு காலத்தில் விஜயராகவ பூபாலன் தன் தேசத்தவர் களெல்லோரும் சங்குசக்கர முத்திரையைப் பெற வேண்டுமென்று கட்டளையிட்டாராம்.

அப்பொழுது வேங்கடமகி மத்யார்ஜுன க்ஷேத் திரத்திலுள்ள "மகாலிங்க மூர்த்தியை" "சங்க சக்ராங் கனத்யாச ரே ரே" என்று ரீதிகௌளையில் ஒரு

கீதத்தைப்பாடி வேண்டினராம். உடனே அரசன் வயிற்று வலியால் அவஸ்தைப்பட்டு, வேங்கடமகியைப் பிரார்த்தித்து தன் தேசத்தவர்கள் அவரவர்களின் மதத்திலேயே இருக்கலாமென்று உத்தரவிட்டவுடனே அரசன் வயிற்றுவலி நீங்கி சௌக்கியமாயிருந்தாராம். இவ்விதமாக இவர் மகிமை அநேகம்.

சில கீதங்களில் "முத்து வேங்கடமகி" வேங்கட வைத்யநாதர் என்னும் முத்திரைகள் காணப் படுகின்றன. அப்பெரியார்கள் வேங்கடமகியின் வமிசத்தார்களென்று தோன்றுகின்றது.

7. கோவிந்தாமாத்யர்

இவர் ஆறுவேல நியோகி பிராமண குலத்தைச் சேர்ந்தவர். ஆபஸ்தம்ப ஸூத்திரர், கௌண்டின்ய கோத்திரர். ஓபாயாமாத்யரின் புதல்வர், ஸங்கீத சாஸ்திரத்தை தெலுங்கு பாஷையில் பத்ய காவ்ய மாக செய்திருக்கிறார். இந்நூலின் சிலபாகங்களை சார்ங்கதேவரின் ஸங்கீதரத்னகரத்தை அனுசரித் தும் மேளம், ராகம், இவைகளை ராமாமாத்யரின் ஸ்வரமேளகளா நிதியை அனுசரித்தும் சொல்லி யிருக்கிறார்.

இவர் ராமாமாத்யருக்கு பிந்தியும் வேங்கட மகிக்கு முன்னிருந்தவராகவும் தெரியவருகிறது.

8. ஸோமநாதர்

ஸோமநாதர் ஆந்திர தேசத்தைச் சேர்ந்த ஒரு பெரிய வித்வான். இவர் "ராகவிபோதம்" என்னும் கிரந்தத்தை கி. பி. 1609-ல் செய்து முடித்தார். இவர் ராமாமாத்யரை பின்பற்றி 23 மேளகர்த்தா ராகங்களை யும் அதனுடைய ஜன்யராகங்களையும் சொல்லியிருக் கிறார். இவருடைய கல்பனையால் 15 விக்ருதி ஸ்வரங் களையுடைய 96 மேளத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். தவிர வும் மீமாம்சகிரந்தத்திற்கு "ஸோமநாதீயம்" என்னும் வியாக்யானம் எழுதியிருக்கிறார். இவரால் செய்யப் பட்ட கிரந்தங்கள் சில இப்பொழுதும் இருக்கிறது.

9. ஸ்ரீ புரந்தரதாஸர்

பல்லாரி ஜில்லாவைச்சார்ந்த "புரந்தரகட" என் னும் ஊரில் மத்வபிராமணகுலத்தைச்சேர்ந்த "வரதப்ப நாயக்" என்னும் பிரபுவுக்கு புதல்வனாக கி.பி. 1484ம் ஷு ஸ்ரீ புரந்தரர் பிறந்தார். இவருக்கு ஸ்ரீநிவாஸன் என்ற பெயர் முதலில் ஏற்பட்டதென்றும், யாவரும் இவரை சீனப்ப என்று அழைத்து வந்ததாகவும் தெரி கிறது, இவரது தாயார் கமலாம்பாள். பக்த சிரோமணி.

தாஸரவர்கள் கன்னடத்திலும், ஸம்ஸ்கிருதத் திலும் நல்ல தேர்ச்சி அடைந்தார். இவரது 16-வது

வயதில் ஸரஸ்வதீபாய் என்னும் ஸ்த்ரீரத்னத்தை மணந்தார். தனது 20-வது வயதில் பெற்றேரை இழக்க நேர்ந்தது. அது முதல் தனது தந்தையார் நடத்தி வந்த வியாபாரத்தை மேற்கொண்டார். தொழிலில் நல்ல வருவாய் கிடைக்க வேண்டுமென முயற்சித்தாரேயன்றி, தர்மகார்யங்களெதிலும் ஈடுபடாதவராயிருந்தார்.

ஒரு ஸமயம் அந்தணர் ஒருவர் தன் புதல்வனின் உபநயனத்தின் பொருட்டு தாஸரைப் பன்முறை யாசித்தும் பயனில்லாதது கண்டு, அவர்தம் மனைவியாரைக் கண்டு யாசிக்க, அவ்வம்மையார் அளித்த வைர மூக்குத்தியை தாஸரிடமே விற்றுச் சென்ருர். தாஸரவர்கள் பின்னர் ஆபரணத்தின் அமைப்பைக் கண்டு ஸந்தேகப்பட்டுத் தன் மனைவியின் மூக்குத்தியை வாங்கிவரக் கட்டளையிடவும், அம்மையார் அஞ்சி கடவுளைத் துதிக்க ஈசனருளால் அதேபோல் ஒரு மூக்குத்தி கிடைக்க அதனைக் கொடுத்தனுப்பினர். தாஸர் ஒரேமாதிரி இரு ஆபரணமிருக்கக்கண்டு வியந்து உடனே தன் மனைவியிடம் சென்று நடந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்டு ஞானேதயம் அடைந்து தன் பொருளெல்லாம் தானம் செய்து க்ஷேத்திர யாத்திரை செய்துகொண்டு "பண்டரீபுரம்" வந்து சேர்ந்தார். ஞானேதயம் ஏற்பட்டவுடன் இவர்

பாடின பாட்டு "மோஸ ஹோதனல்லோ" என்ற பதம் அடாணு ராகம் ஆதி தாளம். இவருடைய 30-வது வயதில் ஞானோதயம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. வியாஸராய மடத்திலிருந்த "ஸத்யதர்மதீர்த்த ஸ்வாமிகளின்" தரிசனம் பெற்றபொழுது அம் மஹானால் "புரந்தரதாஸர்" என்னும் பட்டத்தை அளிக்கப் பெற்ருர். 1525-ம் ஆண்டில் வியாஸராய ஸ்வாமிகளிடத்தில் உபதேசம் பெற்ருர்.

தாஸர் அவர்களும் அவர் பத்னியும் கிருஷ்ண பக்தர்களாதலால் அடிக்கடி பகவானை நேரில் கண்டு களித்திருக்கின்றனர்.

ஸ்ரீ புரந்தரதாஸருக்கு ருக்மணிபாய் என்று ஒரே புத்திரியும், வரதப்ப, குருராய, அபிநவர், மத்பவதி என்னும் நான்கு குமாரர்களும் பிறந் தார்கள். வேதங்களின் உட்கருத்துக்கள் கொண்ட சுமார் ஐந்துலக்ஷம் பதங்கள் கன்னட பாஷையில் இவர் லோகோபகாரமாய் செய்திருக்கிருர். அவற்றில் இப்பொழுது அநேகம் கையெழுத்துப் பிரதிகளில் காணப்படுகின்றன. இப்பதங்கள் சொற் சுவை பொருட் சுவை இவற்றில் மிக மேம்பட்டிருக்கும்.

ஸங்கீத வித்தையை கற்க ஆரம்பிப்பவர்கள் முதலில் பயிலவேண்டிய அப்யாஸங்களான

ஸ்வராவளி, அலங்காரங்கள், ஸூளாதி கீதங்கள் முதலியவற்றை இவர் ஏற்படுத்தியதும் தவிர, மாயா மாளவகௌள ராகத்திலேயே முதலில் பழக வேண்டுமெனவும் நிர்ணயித்தார். "புரந்தரவிட்டல" என்பது இவருடைய அங்கித முத்திரை.

ஸப்த தாளங்களும் இவராலேதான் பிரசித்த மடைந்தன. தாஸரவர்கள் தன் அந்த்ய காலத்தில் சன்யாஸம் பெற்று கி பி. 1564 ஷு இவ்வுலகை நீத்தார்.

ஹம்பி நகரில் இவர் வெகு காலம் தங்கியிருந்த ஓர்மண்டபத்திற்கு புரந்தரதாஸர் மண்டபம் என்றும் பெயர் வழங்கி வருகிறது.

ஸ்ரீ தாஸர் அவர்களை "கர்னாடக ஸங்கீத பிதாமஹ" ரென்றும் ஆதி குரு வென்றும், இவர் பதங்களை தாஸர்வாள் பதங்கள், தேவ நாமாக்கள் என்று புகழ்ந்து கூறுவார்கள்.

10. புண்டரீக விட்டலர்

இவர் கர்னாட தேசத்தில் சிவகங்கை மலைக்கு ஸமீபமுள்ள ஸாதனூர்வ கிராமத்தில் வசித்து வந்தார். இவர் சக்ரவர்த்தி அக்பரின் ஸமஸ்தான வித்வானாக இருந்த தான்ஸேன் (தானஸேனர்) காலத்

திலும் துளஸீதாஸர் காலத்திலும் இருந்தவரென்று தெரியவருகிறது. இவர் ஆஸ்தான வித்வானுக இருந்த காலத்தில் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தைப் பற்றி ஷட்ராகசந்த்ரோதயம், ராகமாலா, ராகமஞ்ஜரி என்னும் மூன்று லக்ஷண கிரந்தங்களை இயற்றியிருக்கிருர். இவர் கி. பி. 1590ம்-ஆண்டில் மேற்படி கிரந்தங்களைப் பூர்த்தி செய்தார். இவர் செய்த "நர்த்தன நிர்ணயம்" என்ற நூல் இன்னும் அச்சிடப்படவில்லை.

11. லோசன கவி

இவர் பதினேழாம் நூற்ருண்டில் மிதிலா தேசத்திலிருந்தவர். இவரால் செய்யப்பட்ட ராகதரங்கிணியும், ராக ஸங்கீத ஸங்க்ரஹம் என்னும் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தைப் பற்றிய நூல்கள் இப்பொழுது அச்சிடப்பட்டிருக்கிறது. இந்நூலில் அவருடைய காலத்திலிருந்த 12 மேளங்களும், அதில் ஜன்யமான ராகங்களையும் மூர்ச்சனை, ஜாதி, இவைகளோடு கூடியது. 12 ஸ்வரத்தை வைத்துக்கொண்டு அதில் ராகங்களை கல்பித்திருக்கிருர். இவர் சொல்லியிருக்கிற ஸ்வரம், ராகம், இவைகள் யாவும் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தைச் சேர்ந்தவை. ராகாணும் கானகாலா: தும்புருநாடகே என்ற தும்புரு நாடகமென்னும் கிரந்தத்தில் ராகத்தினுடைய காலம்

இவைகளைப் பற்றி விவரித்திருக்கிறார். இவர் கி. பி. 1700ல் மேற்படி கிரந்தங்களைச் செய்து முடித்தார்.

12. பத்ராசலம் ராமதாஸர்

இவர் கஞ்சல்ல குலத்திலுதித்த நியோகி பிராமணர். கோபனுமாத்யரின் குமாரர். ஸங்கீத ஸாஹித்ய வித்யா நிபுணர், இவர் பத்ராசலம் தாலுகா தாசில்தாராக இருந்து சர்க்கார் சொத்தை யெல்லாம் எடுத்து பத்ராசலத்திலுள்ள ஸ்ரீ ராமபத்திரர் ஆலயத்தை ஜீர்ணோத்தாரண திருப்பணி செய்ததுமன்றி பாகவதர்களாகிய பிராணர்களுக்குத் திருப்தியாக தினந்தோறும் அறுசுவைகளோடு அன்னதானம்செய்து, ஸ்ரீ ராம விஷயமாய் அநேக கீர்த்தனங்கள் செய்து எப்போதும் பஜனை செய்து கொண்டும் தன்னை மறந்திருப்பார். இது தெரிந்து நவாப் இவரை சிறைச்சாலையில் வைத்து 12 வருஷம் நிர்பந்தப் படுத்தினன், அப்பொழுதும் இடை விடாமல் ஸ்ரீ ராமன் பேரில் கீர்த்தனங்கள் செய்து பஜித்துக்கொண்டுமிருப்பார். கருணா ஸமுத்ரனாகிய ராமபத்ரன் இரக்கம் கொண்டு லக்ஷ்மணனோடு சேவகவேஷம் போட்டுக் கொண்டு நடுநிசியில் வந்து உறங்கிக்கொண்டிருக்கும் நவாபை எழுப்பி செலுத்தவேண்டிய பணத்தை செலுத்தி

மறைந்தார், இதன் விஷயங்களை ராமதாஸரின் சரித்திரத்தால் தெரிந்துகொள்ளத்தக்கது, இவருடைய கீர்த்தனங்கள் தெலுங்கில் அநேகமிருக்கின்றன,

ராமதாஸ, பத்ராசலவாஸ, பத்ராத்ரி, பத்ரகிரி, பத்ரசைல என்று பஹு முத்திரைகள் இவர்க் ருதிகளில் காண்கின்றன.

13. தாளபாகம் சின்னய்யா

இவர் தெலுங்குப் பிராமண குலத்தைச் சேர்ந்தவர். வெங்கடாசலபதி பக்தர், திருப்பதியிலிருந்தவர். வெங்கடரமணன் விஷயமாய் பாகவத ஸம்பிரதாயமாக பழக்கத்திலுள்ள உத்ஸவ பத்ததியை ஏற்படுத்திய புண்ணியவான். அதில் தோடயம், மங்களம், சரணு ஹெச்சரிகை, கீர்த்தனங்கள் பவ்வளிம்பு, திவ்யநாம ஸங்கீர்த்தனம், வஸந்தோத் ஸவத்தின் கீர்த்தனங்கள், (மேலு கொலுபு) திருப் பள்ளி எழுச்சிக் கீர்த்தனங்கள் முதலியவை களும் அடங்கியிருக்கின்றன. இதுவுமன்றி தனிக் கீர்த்தனங்களும் உண்டு. இவருடைய பக்தியின் மகிமையால் அடிக்கடி வெங்கடரமணன் தரிசனம் கொடுத்துப் பேசினதாகப் பெரியோர்கள் சொல்லுவார்கள். பஜனைப் பத்ததிக்கு இவரே மூல புருஷர். இவர் ராமாமாத்யருக்கு முந்தியவரென்று தெரிய வருகிறது.

14. க்ஷேத்ரஜ்ஞர்

இவர் முவ்வபுரியைச் சேர்ந்த தெலுங்கு பிராமண குலத்தைச் சேர்ந்தவர். ஆந்திர பாஷையில்

மிகத் தேர்ச்சியுடையவர். ஸங்கீத ஸாஹித்ய ஞான முள்ள பெரிய பண்டிதர். இவர் இளமையில் ஒரு மஹா யோகியால் கோபால மந்திரம் உபதேசிக்கப் பெற்று முவ்வபுரியில் விளங்கும் கோபாலன் கோவிலி லிருந்து வெகுகாலம் பக்தியோடு ஜபித்துக்கொண் டிருக்கும்போது ஶ்ருங்கார ரஸாதி தேவதையாகிய கோபாலன் தரிசனம் கொடுத்து அனுக்ரஹித்த வுடனே "ஸ்ரீ பதி ஸுது பாரிகி நேநே பலேக நினுவேடிதே கோபால முவ்வ கோபாலா" என்று வாக்கேய ரூபமாக பதங்கள் சொல்ல ஆரம்பித்தார்.

இவரது பதங்களைப்போல் ஶ்ருங்கார ரஸம் ஒழுகும்படி கைசிகீ ரீதியாய் மிருது பதங்களையுடைய தாயும், நாயகீ நாயக லக்ஷணங்கள் பிசகாமலும், அர்த்தபுஷ்டியோடும் சந்தர்ப்பத்துக்குத் தக்க ரஸம் ராகங்களோடும் தாதுக்களோடும் இவருக்கு முன் பாவது பின்பாவது பதங்களைச் செய்யத்தக்கவர் யாருமில்லை யென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

இவரது பதங்களை பொருட்சுவையை செவ்வையா யறிந்து ரஸானுபவத்தோடு யார் (சௌகமாய்) விளம்பமாய்ப் பாடுகிறார்களோ அந்தப் பதங்கள் தான் இனிமையாயிருக்கும். தாதுக்களை எழுதிப் பார்த்தால் வந்ததே வருவதுபோலிருக்கும். இப்படி யிருப்பதுவே பதஸாஹித்யங்களின் நடை. தாதுக் கள் வந்தது வராமலிருப்பது கீர்த்தனங்களின் நடை.

இந்த க்ஷேத்ரஜ்ஞர் மதுரை, தஞ்சாவூர், கோல் கொண்டா, ஆகிய ஸமஸ்தாளுதிபதிகளின் சபை களில் இத்தனை இத்தனை பதங்கள் சொல்லியிருக்கிரு ரென்பதற்கு, தேசீய தேவகாந்தாரீ ராகத்தில் "வேடுகதோ நின்னுநடுசு கொன்ன விடராயடே" என்னும் ஒரு பதத்தில் சொல்லியிருக்கிருர். இது வல்லாமல் தஞ்சாவூர் விஜயராகவநாயக மகா ராஜாவின் வேண்டுகோளால் இந்த ராஜன் பேரில் "க்ஷேத்திரய பஞ்சரத்னம்" என்று ஐந்து பதங்கள் செய்திருக்கிருர். "முவ்வகோபால" இவருடைய அங் கித முத்திரை. சில பதங்கள் "கஞ்சிவரத" "செவ்வந்தி லிங்க" என்றிருந்தாலும் முவ்வகோபால முத்திரை யின்றி இரா. ரஸிகாக்ரேஸரளுகி விஜயராகவ மகா ராஜா இவருக்குச் செய்யும் வெகுமான முதலிய உபசாரங்களைப் பார்த்து பிரபந்தங்கள் செய்வதில் மேதாவிகளாகிய கவிகள் பொருமையால், மகாராஜ! இதென்ன? ஏரா, ராரா, போரா, என்று சொல்லும் க்ஷேத்திரயர் மேல் இவ்வவவு மோகமா? இவருக்கு இவ்வளவு பகுமானம் முதலிய உபசார கௌரவங் களா? என்று சொல்லும் சொற்களைக் கேட்டு க்ஷேத்திரய்யர் வந்தவுடனே வித்வான்கள் சொல்லிய சங்கதிகளை அரசன் சொல்லவே, க்ஷேத்திரய்யர் கேட்டு அவர்கள் சொல்வது சரிதான் என்ருர். பிறகு காம்போஜி ராகத்தில் 'பாமரோஸ குனமு

லடிகிதி முவ்வகோபாலுடு வச்சுனனி, காமிஞ்சி நாதுலகலயு செலுல ஜூசி கரகி சிந்த நொன்திதி' என்று இதுவரை செய்து இந்தச் சரணத்தின் கடைசி கண்டத்தை மட்டும் இவ்வித்வான்கள் பூர்த்தி செய்ய வேண்டுமென்று ராஜனிடத்தில் தெரியப் படுத்தி; ஸேதுயாத்திரை போய்வருகிறேனென்று போய்விட்டார். வித்வான்கள் சபைக்கு வந்தவுடனே அரசன் அவர்களிடம் அந்தப் பதத்தைக் கொடுத்து இந்தப் பதத்தின் மூன்ருவது கடைசிகண்டத்தை மாத்திரம் பூர்த்திசெய்யுங்கள் என்று உத்தரவு கொடுத்தார், அவ்வித்வான்கள் எல்லோரும் சேர்ந்து க்ஷேத்ரய்யர் திரும்பி வரும்வரை முயற்சி செய்தும் அந்தக் கடைசி கண்டத்துக்குத் தக்க ஸாஹித்யம் தோன்ருமல் விசாரப்பட்டுக்கொண்டிருந் தார்கள். க்ஷேத்ரய்யர் வந்தவுடனே வித்வான்கள் க்ஷேத்ரய்யரிடம் போய் பிரார்த்தித்துக்கொண்டார்கள். உடனே க்ஷேத்ரய்யர் "ராமராம ஈமேனிதோ வானிமோமு ஜூடவலெநா மொதடி பொந்தேசாலு" என்று பதத்தைப் பூர்த்திசெய்தார். இதைப்பார்த்து வித்வான்கள் எல்லோரும் க்ஷேத்ரஜ்ஞரைப் பார்த்து நீர் ஸாக்ஷாத் கோபாலனே! என்று புகழ்ந்து அரசனிடத்திற் போய் அந்த சங்கதியைச் சொல்லிப் புகழ்ந்தார்களாம். இவருடைய பதங்கள் அநேகம் இப்பொழுதும் ப்ரஸித்தமாய் பாடப்பட்டு வருகிறது.

15. ஸ்ரீனிவாஸுலு

இவர் திராவிட பிராமணர். தெலுங்கு, தமிழ் முதலிய பாஷைகளிலும், ஸங்கீதத்திலும் வல்லவர். இவர் மதுரை மீனாக்ஷி அம்மன் கோவில் பரிசாரகர். தன்னால் செய்யப்படும். பணிவிடைகளை அணுவளவும் அபராதமின்றி நடத்திக்கொண்டு வருவார்,

இப்படியிருக்குங்காலையில் மீனாக்ஷீ தேவியின் த்வஜ மண்டபத்தருகில் ஒரு தபசி ராஜமாதங்கீ தேவியின் மூலமந்திரத்தை வெகுகாலமாக ஜபித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் அர்தஜாம பூஜை நடந்தவுடனே மீனாக்ஷீதேவி அர்தஜாமாலங்கார அடையாளங்களோடும் வாய்நிறைந்த தாம்பூலத் தோடும் ஒரு கணிகை மாதைப்போல் வந்து அந்த தபசியை "அடே வாயைத்திற" என்று சொன்ன வுடனே பிரஷ்டே என்று திட்டினவுடனே அவ்விடத் திற்கு சமீபத்திற் படுத்து நித்திரை செய்து கொண்டிருக்கும் ஸ்ரீனிவாஸனிடத்திற்கு வந்து "அடே ஸ்ரீனிவாஸா! எழுந்திரு, வாயைத்திற" என்றவுடனே வாயைத்திறக்கவே ஸ்ரீனிவாஸன் வாயில் மீனாக்ஷியம்மன் தாம்பூலத்தை உமிழ்ந்தாள். அந்த மாதங்கியின் பரமானுக்ரஹத்தால் ஸங்கீத ஸாஹித்யத்தில் நல்ல தேர்ச்சி பெற்று கீர்த்தனங் களைச்செய்ய ஆரம்பித்தார். இவருடைய கீர்த்தனங்கள்

அநேகம் உண்டு. பொருட்சுவையும், பதச்சுவையும் வியவகாரங்களும் இவர் கீர்த்தனங்களில் நிறைந்திருக்கும். தமிழ் பாஷையில் பலவித, பதங்களும், கீர்த்தனங்களும் "விஜயகோபால" என்ற முத்திரையுடன் செய்திருக்கிருர். இவர் மதுரை திருச்சினப்பள்ளியை ஆண்ட விஜயரங்க சொக்க நாதநாயக மகாராஜாவின் காலத்திருந்தவராகத் தெரியவருகிறது.

16. ஜயதேவர்

இவர் வடதேசத்துப் பிராமணர். கோவர்த்தனுச்சாரியரின் சிஷ்யர். ஸ்ரீ கிருஷ்ணபகவானின் பாத கமலங்களின், தேனைப்பருகும் வண்டுக்களை யொத்த மனதை யுடையவர், ஸம்ஸ்கிருத பாஷையில் மிக வல்லவர், பிரஸன்ன ராகவ நாடகம் முதலிய அநேக கிரந்தங்களைச் செய்திருக்கிருர். ஸ்ரீ ராதா கிருஷ்ணன் விஷயமாய் ஶ்ருங்கார ரஸப்பிரதானமாக பன்னிரண்டு ஸர்க்கங்களோடு விளங்கும் "கீதகோவிந்தம்" (அஷ்டபதி) என்னும் பிரபந்தத்தை கான ரூபமாகச் செய்த மகாத்மா. இந்த அஷ்டபதி களுக்கு ஜயதேவரால் ஏற்படுத்தப்பட்ட ராகங்களும் கான பணிதிகளும், ஸங்கீத ரத்நாகரம் ராக விபோதாத்யாயத்திலுள்ள ராகங்களைப் போல் எப்படியோ வழக்கத்திலில்லாமல் போய்விட்டன.

300 வருஷங்களுக்கு முன்புள்ள தக்ஷிண தேசத்தர்களான ஸங்கீத வித்வான்கள் இருபத்திநான்கு அஷ்டபதிகளுக்கும் ராக தாளங்களும், அந்தந்த ராக தாளங்களை அனுசரித்து ஏற்படுத்தப்பட்ட கான பத்ததிகள் இப்போது வழக்கத்திலிருக்கின்றன. ஜயதேவகவி பத்தொன்பதாவது அஷ்டபதி எழுதிக் கொண்டிருக்கும்போது "ஸ்மரகரள கண்டனம்" மமஸிரஸி மண்டனம், தேஹி பதபல்லவ முதாரம்" என்று தோன்றினவுடனே அதை எழுதாமல் ஏட்டை தன் மனைவியாகிய பத்மாவதியிடம் கொடுத்து ஆற்றிற்குப்போனார். உடனே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா எண்ணெய் தேய்த்துக் கொண்ட ஜயதேவரின் ரூபத்தில் வந்து பத்மாவதியை அழைத்து ஏட்டையும் எழுத்தாணியையும்வாங்கி ஜயதேவருக்குத்தோன்றிய படியே ஸாஹித்யங்களை எழுதிக் கொடுத்து விட்டுப் போனார். பிறகு ஜயதேவர் வந்து ஏட்டைக் கேட்டவுடன் அவர் மனைவி இப்போதுதானே வந்து வாங்கி எழுதிக் கொடுத்து விட்டுப் போனீர்கள்! என்று சொல்லவே, ஓலையை வாங்கிப் பார்த்து ஆனந்தக் கடலில் முழுகினவராய் ஓ பத்மாவதி! பகவான் உனக்கு தரிசனம் கொடுத்தாரே உன் புண்யத்தை என்னவென்று சொல்வேன் என்று அந்த அஷ்டபதியின் எட்டாவது அடியில் "ஜயது பத்மாவதி ரமண ஜயதேவ கவி பணிதமிதி கீதம்"

என்று தன் பேருக்கு முந்தி அந்த அம்மாளுடைய பெயரை வைத்து, 21-வது அஷ்டபதியிலும் வைத்து செய்திருக்கிறார், ஜயதேவர் சார்ங்க தேவரின் காலத்தவராயிருக்கலாமென்று தோன்றுகிறது.

17. கனம் ஸீனய்யா

இவர் ஆத்ரேய கோத்ர பவித்திரர். ஆபஸ்தம்ப ஸூத்ரர். வைஷ்ணவர். வங்கல குலத்தில் உதித்தவர், வாதூல தேஶிகரின் கிருபைக் குரித்தானவர். ஶேஷ யஜ்வகுமாரர். ஸங்கீதம், ஸம்ஸ்கிருதம், ஆந்திரம் முதலிய எல்லா பாஷைகளிலும் வல்லவர். ஸ்ரீ விஜயரங்க சொக்கநாத மகாராஜாவின் மந்திரியாக இருந்தார். ஶ்ருங்கார ரஸாஸ்பதமான 'ஶஶாங்கவிஜயம்' என்ற தெலுங்கு பிரபந்தத்தை செய்து கீர்த்திபெற்றார். இவரது ஸங்கீத வித்யா வல்லமையைக் குறித்து, "ஶஶாங்க விஜயம்" என்ற தெலுங்குபத்ய காவ்யத்தில் ஒரு கவியால் புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கிறது, இந்த ஸீனய்யா என்பவர் "மன்னரு ரங்கமுத்திரையோடு" இனிமையான அநேக கீர்த்தனம், பதங்கள் முதலியனவைகளைச் செய்திருக்கிறார். இவர் க்ஷேத்ரஜ்ஞர் காலத்திலிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

18. மார்கதர்ஸி ஸேஷய்யங்கார்

இவர் வைஷ்ணவ பிராமணர், ஸங்கீதத்திலும், ஸம்ஸ்கிருதத்திலும் மிக பாண்டித்ய முடையவர். ஸ்ரீ ரங்கநாதருடைய பக்தர். அயோத்தியிலிருந்து ஸ்ரீரங்கத்துக்கு வந்து ஸம்ஸ்கிருதத்தில் இயலிசையாய் ரங்கநாதர்பேரில் அநேகக் கீர்த்தனங்கள் செய்திருக்கிறார், அயோத்தியிலிருந்து வந்தவராதலால் "கோஸல" என்ற முத்திரையுடன் தன்னால் செய்யப்பட்ட எல்லா உருப்படி வகைகளையும் ஒரு புஸ்தகமாக எழுதி, ரங்கநாதருடைய அர்தஜாம பூஜாஸமயத்தில், ரங்கநாதருடைய பாதத்தில் வைக்கும்படி அர்ச்சகர்களிடம் புஸ்தகத்தைக் கொடுத்து வந்தார்.

மறுநாள் ரங்கநாதருடைய கோவிலுக்குப் போய் புஸ்தகங்களை வாங்கிப் பார்த்தார். அப் புஸ்தகத்தில் அறுபது கீர்த்தனங்கள் மட்டுமிருந்தனவாம். மற்ற கீர்த்தனங்கள் யாவும் கறையான் பிடித்து கெட்டு போயினவாம். பகவான் அங்கீகாரம் பண்ணிக் கொண்ட அறுபது கீர்த்தனங்களும் பிரசித்தமாக இருக்கின்றன,

அக்காலத்து வித்வான்கள் ஸம்ஸ்கிருத ரூபமான இயலிசையின் நடையைப் பார்த்து இவரை மார்கதர்ஸி ஸேஷய்யங்கார் என்று புகழ்ந்தனர். இவர்

கனம் ஸீனய்யாவுக்கு முந்தியவரென்று சொல்லு கிறூர்கள்.

18. கிரி ராஜ கவி

இவர் தெலுங்கு பிராமணர். "ஜனனுத் கமலா லயே" என்று ஜனங்கள் புகழப்பட்ட திருவாரூரில் பிறந்தவர். ஸம்ஸ்கிருதம், தெலுங்கு பாஷைகளில் நல்ல தேர்ச்சிபெற்ற பண்டிதர். ஸங்கீதத்திலும் பெரிய வித்வான். இவர் தெலுங்கில் பக்தி ரஸமாயும் வேதாந்த விஷயமாயும் அநேகக் கீர்த்தனங்கள் செய்து, கீர்த்தியடைந்தவர். தஞ்சாவூரை அரசு புரிந்த மகாராஷ்டிரராஜர் காலத்தில் இரண்டாவது ராஜனுகிய சகாஜி மகாராஜாவினுல் மிகுந்த வெகுமதி களை அடைந்தவர். ஸ்ரீ ராம அனுக்கிரகத்தால் பக்திரஸமான அநேகக் கீர்த்தனங்கள் செய்திருக் கிறூர். த்ரிமூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுடைய பாட்டனுர். இவர் 238 வருஷங் களுக்கு முன்னிருந்தவராக தெரியவருகிறது.

20. சகாஜி மகாராஜா

இவர் தஞ்சாவூரை அரசாண்ட மகாராஷ்டிர ராஜ வமிசத்தில் இரண்டாவது அரசன், ஏகோஜி மகாராஜரின் புத்திரர். போஜ குலத்திலுத்தவர். ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, மகாராஷ்டிரம், ஹிந்துஸ் தானி முதலிய பாஷைகளில் மிக்வும் ஸமர்த்தர்.

ஸங்கீத ஸாஹித்ய வித்தையில் வல்லவர். தர்மத்தை நிலைநிறுத்திய சிரேஷ்டர். இவர் சாலிவாகன சகாப்தம் 1605 கி. பி. 1684 முதல் சகாப்தம் 1632 கி. பி. 1711 வரை சோழ மண்டலத்தை அரசாண்டார், இந்த ஸகாஜி மகாராஜா அநேக தேவதா விஷயங்களாக மேற்சொன்ன பாஷைகளில் அநேகக் கீர்த்தனங்கள் செய்திருக்கிறார். இதுவுமின்றி திருவாரூர் ஸ்ரீ வீதிவிடங்க தியாகராஜஸ்வாமியின் மேல் தெலுங்கில் "பல்லக்கு நாடகம்" என்னும் பல்லக்கு சேவைப் பிரபந்தம் இயலிசையாக செய்திருக்கிறார். சுக்ரவாரம் தோறும் பள்ளியறைக்குப் பல்லக்கில் புறப்படும்போது பல்லக்கு நாடகத்தைப் பாடி ஆடிக்கொண்டு வரும்படி செய்திருக்கிறார்கள். இன்றைக்கும் நடந்து வருகிறது. இவ்வாறு நடந்து வருவதற்காக ஸகாஜி மகாராஜா பத்து வேலி நிலம் சர்வமான்யம் விட்டிருக்கிறார்.

21. லக்ஷ்மீ காந்த மகாராஜா

இவர் க்ஷத்திரிய வமிசத்தைச் சேர்ந்தவர். ஸங்கீதம், ஸம்ஸ்கிருதங்களில், ஒப்பற்ற வல்லமையுடையார். இவரது கீர்த்தனங்கள், வர்ணங்கள், ஸங்கீத ஸம்ஸ்கிருத ஸாஹித்ய சமத்காரத்தோடு கூடியிருக்கின்றன. இவர் அஹோபலருக்குப் பின்னிருந்தவரென்று தோன்றுகிறது.

22 வீரபத்திரய்யா

இவர் தெலுங்கு பிராமணர். தெலுங்கு பாஷையில் நல்ல பண்டிதர். இவருடைய வாச ஸ்தலம் வடதேசம். ஸங்கீத ஸாஹித்யம் செய்வதில் மிக வல்லமையுடைவர். மகாராஷ்டிர அரசர்களில் நல்லுறவும் விதரணசாலியும், ரஸிக சிகாமணியும், உதாரகுணமுடையவரும், நீதி தவருமல் சோழ மண்டலந்தைப் பரிபாலித்தவரும், அநேக தேவாலயங் களுக்கு ஸர்வமான்யம் கொடுத்தவருமான பிரதாபசிம்ம மகாராஜன் சகாப்தம் 1662, கி. பி. 1741 முதல் சகாப்தம் 1686, கி. பி. 1765 வரை தஞ்சாவூரை அரசாக்ஷி செய்துவந்தார், இவரு டைய அரசாக்ஷியின் ஆரம்ப காலத்தில் வீரபத்திரய்யா வடதேசத்திலுருந்து வந்து அரசனது பேட்டிக்காக வெகுநாள் காத்திருந்தார் இந்த வீரபத்திரய்யாவுடைய யோக்யதை, கௌரவம் முதலியவைகளை வெகு ஜனங்களாற் கேள்வியுற் ஒரு நாள் அரசனே வீரபத்திரய்யா வீட்டுக்கு வந்து அவரது பாட்டைக்கேட்டு வெகுமானமளித்து தன்னு டன் அழைத்துக்கொண்டு, வந்து வசதியான ஜாகை ஏற்படுத்தி ஆதரித்து வந்தார், அதுமுதல் தஞ்சாவூர் அரண்மனையில் எழுந்தருளியிருக்கும் போஜவமிசத் தரசர்களின் குலதெய்வமாகிய பிராதாபராம முத்திரை யைக் கொண்டு அநேக கீர்த்தனங்கள் ரக்திராகங்

களிலும் வெகு தேசீய ராகங்களிலும், இசைக் கற்பனைகள் பிரகாசிக்கும்படி செய்தார். இதுவுமன்றி பிரதாப சிம்ம மகாராஜாவின்மேல் தரு, பதங்கள் தில்லானு முதலியவைகளும் இசைக் கற்பனையோடு செய்து வெகு கீர்த்தியை அடைந்தார். இந்த மகானுபாவராலேயே தென் தேசத்து இசை மார்க்கம் மிகவும் சீர்திருத்தமடையப்பெற்று இன்றைக்கும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

23. கவி மாத்ரு பூதமய்யா

இவர் தெலுங்கு பிராமணர், ஸங்கீதத்திலும் தெலுங்கு பாஷையிலும் பண்டிதர். திருசிரகிரி (திருச்சினுபள்ளி)யில் வசித்து வந்தவர். ஸ்ரீ ஸுகந்தி குந்தலாம்பா பக்தர். அம்பாள் அனுக்கிரகத் தால் பக்தி ரஸங்களுக்குள்ள அநேக கீர்த்தனங்கள், பதங்கள் செய்திருக்கிருர். பாரிஜாதாபஹரணம் என்னும் காந்தர்வ (இசை) ரூபமாக ஒரு நாடகம் செய்திருக்கிருர். இவருடைய அங்கித முத்திரை திரிசிரகிரி. இவருடைய உருப்படிகள் சொற்சுவை, பொருட்சுவை, இசைச்சுவைகளின் வியவகாரங் களோடு கூடியிருக்கும். இவர் வறுமையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒருநாள் அம்பாள் இவருக்கு தரிசனம் கொடுத்து, தஞ்சா வூரிலே எனது பக்தன் பிரதாபஸிம்மன் இருக்கிருன்

அவனிடத்திற்குப் புறப்பட்டுப் போ, உன் வறுமை தீரும் என்று சொல்லி மறைந்தாள். அன்றைய தினமே பிரதாப சிம்மனுடைய கனவில் தோன்றி "எனது பக்தனை உன்னிடத்திற்கு வரச் சொல்லி யிருக்கிறேன், அவர் வறுமையைத் தீர்" என்று சொன்னவுடனே அரசன் எழுந்திருந்து மாத்ரு பூதய்யாவினுடைய வரவை எதிர் பார்த்திருந்தார். இவர் வந்தது தெரிந்து மிக்க உபசாரம் செய்து பதினாயிரம் ரூபாய் கொடுத்து திருச்சினாப் பள்ளிக்கு அனுப்பினார். அவர் அவ்விடத்தில் சௌக்கியமாக தன் கீர்த்தனங்களால் ஸ்ரீ மாத்ரு பூதாரையும் ஸுகந்தி குந்தலாம்பாளையும் பூஜித்துக் கொண்டிருந்தார். அந்த நாளில் கையில் பணம் இல்லாமல் போனால் உடனே ஸ்வாமியிடம் முறையிடு வது வழக்கம். அதுபோல் மாத்ருபூதய்யா வறுமை யால் கஷ்டப்பட்டபொழுது "காஸிகப் பணமீவலநம்ம" என்றும் பாடியிருக்கிறார்.

24. (பச்சி மிரியம்) ஆதிப்பய்யா

இவர் மத்வ வமிசத்தைச் சேர்ந்த கர்னாடக பிராமணர். தெலுங்கிலும் ஸங்கீத வித்தையிலும் பெரிய வித்வான். இவர் (1741-1764) பிரதாப சிம்ம மகாராஜாவின் காலத்திலும் (1765-1787) துளஜா மகாராஜா காலத்திலுமிருந்தவர். ரக்தி

ராகங்களிலும், தேசீய ராகங்களிலும், "ஸ்ரீ வெங்கட ரமண" முத்திரையோடும் விசேஷ கமக ஜாதீயங்களோடும் அநேக கீர்த்தனைகள் செய்திருக்கிறார். இவர் வீரபத்திரய்யாவுடைய மார்க்கத்தையே அனுசரித்தவர். ராக ஆலாபனம், மத்தியமகாலம், பல்லவி முதலியவைகளின் நடைகள் இவராலேயே பிரசித்தமடைந்ததென்று சொல்லுவார்கள். பூர்வத்தில் அநேக வர்ணங்களிருந்தாலும், பைரவி ராகத்தில் இவரால் செய்யப்பட்ட "விரிபோணி" என்னும் தானவர்ணத்தைப் போல் பாடுவதற்காவது வீணையில் வாசிப்பதற்காவது வேறு வர்ணம் உண்டாவது மிகவும் கஷ்டம். இந்த ஆதிப்பய்யாவின் குமாரன் வீணைகிருஷ்ணய்யா. இவர் யாழ் வல்லவர். மைசூர், விஜயநகரம், புதுக்கோட்டை ஆகிய இந்த ஸமஸ்தானாதிபதிகளின் மேல் (பிரசித்தங்களாக இருக்கும் ஸப்ததாளங்களிலுள்ள, துருவ தாளத்திலேயே, மற்ற ஆறுதாளங்களும் அடங்கியிருக்கும்படிக்கும் பிரபந்தத்தை பாடி எடுக்கும்போது, எல்லாத்தாளங்களின் முதல் தட்டுகள் ஒருதட்டாக விழும்படியுமாயுள்ள) ஸப்த தாளேசுரம் என்று மூன்றுபிரபந்தங்கள் செய்திருக்கிறார்.

த்ருவதாளம் முப்பது ஆவர்த்தங்களானல் எடுப்பு எடுக்கும்போது, மற்ற ஆறு தாளங்களும்

ஒரே விதமாய் பிரபந்தத்தின் முதலெழுத்திலெடுக்கப் படும் இந்த வீணை கிருஷ்ணய்யாவின் குமாரர் வீணை சுப்புக்குட்டி ஐய்யா. இவரைப் போல் வீணை யில் ராகாலாபனம், மத்யமகாலம், பல்லவி, ஸ்வர கல்பனைகள் முதலியவைகள், கமகங்கள் பிரகாசிக்கும படிக்கும் வாசிப்பது யாருக்கும் சாத்தியமாகாது. இவர் வீணை வாசித்துக்கொண்டே எழுபது வருஷம் மிருந்தார்.

25. வெங்கட்ராமய்யா

இவர் தெலுங்கிலும் ஸங்கீதத்திலும் மிகத் தேர்ச்சி பெற்றவர். இவர் கீர்த்தனை ஜாதீயங்களை யறிந்து பாடுவதற்குக் கஷ்டமாக விருப்புதால் அக்காலத்து வித்வான்கள் இனுபசனிகெல' (இரும்புக் கடலை) வெங்கட்ராமய்யா என்று பெயரளித்தார்கள். இவர் போதேந்திர ஸ்வாமிகளின் மேல் "சதமனி" என்னும் தோடி கீர்த்தனம் முதலியனவும் மதுரா நல்லூர் முதல் சுவாமிகளின் மேல் சில கீர்த்தனங் களும், தேவதா விஷயங்களாய் சில கீர்த்தனங் களும் கோபாலகிருஷ்ண என்ற முத்திரையுடன் செய்திருக்கிருர். இவர் ஆதியப்பாவுடைய கடைசி காலத்திலிருந்ததாகத் தெரிய வருகிறது.

26. ஸொண்டி வெங்கடசுப்பய்யா

இவர் தெலுங்கிலும், ஸங்கீத வித்தையிலும் மிக சாமர்த்யமுள்ளவர், வேங்கடமகியால் சொல்லப்பட்ட ராகாங்காதி ராக ஸம்பிரதாயங்களை விசேஷமாய்த் தெரிந்தவர். இந்த வெங்கடசுப்பய்யா, ஆதிப்பய்யா இவ்விருவர்களும் ஸமகாலீயர்களா யிருந்தபோதிலும் இந்த வெங்கடசுப்பய்யா வயதில் இளையவரே. இவர் துளஜா மகாராஜாவின் மேல் பிலஹரி ராகத்தில் ஒரு வர்ணம் விசித்திர கற்பனைகளோடு செய்திருக்கிறார் ரஸிகாக்ரேஸனாய், உதார ஸ்வரூபனாய், கீர்த்தி யடைந்த மணலி சின்னய்யா முதலியார் ஸபையில் பஹுமானிக்கப்பட்டு, வெகு ஸாமர்த்யங்களோடு இவ ரால் செய்யப்பட்ட ஸங்கீத ஸாஹித்யங்கள் வெகுவா யுண்டு. இவருடைய புத்திரர் வெங்கடரமண அய்யா. ஸங்கீத ஸாஹித்ய மார்க்கத்திலும் இசை மார்க்கத் திலும் தன் தந்தையை அதிகரித்தவரென்று சொல்லு வார்கள்,

அவர் சரபோஜி மகாராஜாவின் காலத்தில் இருந்தவர், இவர்களுக்கு "ஸொண்டி" என்பது வீட்டுப் பெயர். ஸ்ரீ த்யாகராஜஸ்வாமிகள் இவருடைய மாணாக்கர்.

27. ராமஸ்வாமி தீக்ஷிதர்

இவர் சாலீவாகன சகாப்தம் 1657, கி. பி. 1735-ல் ஜனித்தவர். திராவிட வடம பிராமணர். காஶ்யப கோத்திரர், ஆபஸ்தம்ப ஸூத்ரர். இவருடைய தந்தை *வேங்கடேஶ்வர தீக்ஷிதர். தாயார் பாகீரதியம்மாள்.

இவரது ஏழாவது வயதில் ஒரு பெரிய கலகம் உண்டாகிஅதனுல் காஞ்சி மண்டலத்திலிருந்து வயது முதிர்ந்த தன் தாய், தந்தையர்களோடு புறப்பட்டு மத்யார்ஜுன க்ஷேத்திரமாகிய திருவிடைமருதூருக்கு அருகிலுள்ள கோவிந்தபுரத்திற்கு வந்து, கிரமாந்தம் அத்யயனம் செய்துகொண்டிருந்தார். பிறகு அவர் தாய் தந்தையர்கள் ஆறுமாதம் முன்பின்னுய் காலம் சென்ருர்கள்.

அவர் ஸம்ஸ்கிருத பாஷையில் நல்ல விற்பத்தியை அடைந்து தெலுங்கு பாஷையையும் கற்றுக் கொண்டார். இயற்கையாகவே தனக்கு நல்ல சாரீரம் வாய்த்திருந்ததினுல் கேள்வியால் இனிமையாய்ப் பாடக் கற்றுக்கொண்டார். பாட்டிலுள்ள பிரேமையினுல் தஞ்சாவூருக்குப் போய் வீரபத்திரய்யரிடம்

*சிலர் ராமஸ்வாமி தீக்ஷிதர் தகப்பனுரான வேங்கடேச்வர தீக்ஷிதரை வேங்கடமகி என்று நினைப்பது தவறு என்பதை தெரியப்படுத்துகிருேம்.

இரண்டு வருஷமிருந்து ரக்திராகத்திலும் தேசீய ராகத்திலும், அவரால் செய்யப்பட்ட கீர்த்தனங்களையும் ஸ்வரஜ்ஞானமுண்டாகும்படி அப்பியசித்து, ராகாலாபனம், பல்லவி ஸ்வரங்கள் ஆகிய இவைகளைக் கற்றுக்கொண்டு மாயூரத்திற்கு வந்திருக்கும்போது ஸங்கீதலக்ஷணம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அபேக்ஷையில் கவலையுற்றிருந்தார். ஒரு நாளில் ஒரு பெரியவர் வந்து மத்யார்ஜுனத்துக்குப் போ! உன் கவலை தீரும், லக்ஷணவித்வானுவாய் என்று அனுக்கிரகித்தமாத்திரத்தில் திருவிடைமருதூருக்கு புறப்பட்டுப்போய் நித்யாக்னிஹோத்ரியும், வேங்கடமகியின் மாமாவின்பேரனுமாகிய வெங்கடவைத்யநாத தீக்ஷிதரின் பரமானுக்கிரகத்தால் வீணையைஅப்பியசித்துபிறகு சதுர்தண்டிப்பிரகாசிகை ராகாங்கோபாங்க, பாஷாங்க ராக கீதங்கள் சகல ராக தாள லக்ஷணங்கள், முதலியவைகளை நன்ருய்த் தெரிந்துகொண்டு, தன் குருவின் கட்டளைப்படி தஞ்சாவூருக்குப் போய், அவ்விடத்திய ராஜசபையில், கொண்டாடப்பட்டு வெகு சன்மானங்களை அடைந்தார். பிறகு கனக சபேசனை தரிசிப்பதற்காக சிதம்பரம் போனுர். சபேசனை தரிசித்த பின்னர், ஆனந்த நடேசன் சன்னிதியில் வீணுகானம் செய்தார். அச்சமயம் தரிசனம் செய்துகொண்டிருந்த யதீந்திரரான சிதம்பரநாத ஸ்வாமிகள் இவர் கானத்தில் ஈடுபட்டு

இவர் பக்தியைக் கண்டு பரம்பரையாக ராஜ ராஜேஶ்வரி உபாசனையுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவ ராக விருக்கவேண்டுமென்றெண்ணி தீக்ஷிதரை ஆஶ்ரமத்துக்கு அழைத்துச் சென்று அவரது பரம் பரையை நன்கு தெரிந்துகொண்டு பாலாதீக்ஷையா யிருக்கும் தீக்ஷிதருக்கு ஸ்ரீ வித்யா தீக்ஷையையும் ஸ்ரீமஹாஷோடஶாக்ஷரீ மஹாமந்த்ர தீக்ஷையையும் பரம ப்ரேமையுடன் உபதேசம் செய்துவைத்து, பிறகு மாயூரம் வந்திருக்கும்போது ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி மஹோத்ஸவ தரிசனத்திற்காக திருவாரூருக்கு புறப்பட்டுப் போய் ஸ்ரீ கமலாம்பாள் தியாகராஜரை ஸேவித்து பஜித்துக்கொண்டிருந்தார். ஸ்வாமி தரிசனத்திற்காக திருவாரூருக்கு வந்தஅமரசிம்ம மகா ராஜா தீக்ஷிதரால் செய்யப்பட்ட ராகமாலிகையைக் கேட்டு வெகுமானித்து ஆதரித்தார். தீக்ஷிதரின் பக்தி மிகுதியால் ஸ்ரீ வீதிவிடங்க தியாகராஜ ஸ்வாமி கனவில் தோன்றி தரிசனம் கொடுத்துக் கட்டளை யிட்ட வண்ணமே, ஸ்வாமி வீதிக்கு எழுந்தருளும் சமயங்களில் த்வஜா மண்டபத்திலிருந்து புறப்பட்டு மறுபடியும் த்வஜாமண்டபத்திற்கு வரும்வரை, இன்ன இன்ன இடங்களில் இப்படி இப்படி வாசிக்கவேண்டு மென்று நாகஸ்வர வாத்யக்காரர்கள் முதலியவர் களுக்கு செய்த ஏற்பாட்டைப்போல் பரம்பரையாய் இப்போதும் வாசித்துக்கொண்டு வருகிறார்கள்.

ராமஸ்வாமி தீக்ஷிதருக்கு 40 வயது வரைக்கும் குழந்தைகளில்லாமலிருந்தபடியால், வைத்தீச்வரன் கோவிலுக்குப் போய், ஸ்ரீ முத்துக்குமார ஸ்வாமி ஸன்னதியில் ஒரு மண்டலம் பஜனமிருந்தார். பஜனை மத்தியில் அவர் மனைவி தன் மடியில் தேங்காய், பழம், மஞ்சள் முதலியன கட்டப்பட்டதாகக் கனவு கண்டாள். அதே ராத்திரி ராமஸ்வாமி தீக்ஷிதர் தனது கையில் முத்துமாலை யொன்றைத் தந்து அவர் வம்சத்திற்கு முக்தாபலமான புத்திர மணிகள் உண்டாவாரென்று அனுக்ரஹித்து மறைந்ததாகக் கனவு கண்டார்.

தம்பதிகள் ஸந்தோஷத்தோடு பஜனத்தை முடித்துக்கொண்டு திருவாரூர் போய்ச் சேர்ந்தார்கள். சில மாதங்களுக்குப் பிறகு தீக்ஷிதர் மனைவி சுப்பலக்ஷ்மிஅம்மாள் கர்ப்பவதியாய் கி. பி. 1775-ம்ஞு (மன்மதஞு) பங்குனிமீ, கார்த்திகை நக்ஷத்திரத்தில், சுப லக்னத்தில் உத்தமமான ஆண் குழந்தையை அடைந்தாள், அவர்தான் த்ரிமூர்த்திகளில் ஒருவராகிய சரித்திர பிரசித்திபெற்ற மஹான் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர். பிறகு இரண்டு வருஷங்களில் சின்னஸ்வாமி என்ற வெங்கட வைத்யநாத தீக்ஷிதரைப் பெற்றாள். மூன்றாவதாகப் பிறந்த பெண்ணுக்கு பாலாம்பாளென்றும், நான்காவதாகப் பிறந்த ஆண் குழந்தைக்குப் பாலஸ்வாமி தீக்ஷிதரென்றும் பெயரிட்டார்கள்.

அக்காலத்தில் ஸ்வாமி தரிசனத்திற்காக திருவாரூருக்கு வந்த மணலி முத்துகிருஷ்ண முதலியார் என்ற பெரிய பிரபு ராமஸ்வாமி தீக்ஷிதருடைய யோக்யதையைக் கவனித்து வெகுமானம் செய்ததுமன்றி குடும்பத்தோடு இவர்களை தன்னோடு அழைத்துக்கொண்டு மணலிக்குப்போய் கௌரவமாக ஆதரித்துக் கொண்டிருந்தார். பிறகு வெங்கட கிருஷ்ணன் என்னும் சின்னய்யா முதலியார், ராமஸ்வாமி தீக்ஷிதரால் செய்யப்பட்ட நாடகாதிவித்யல 108 ராகமாலிகையைக் கேட்டு கனகாபிஷேகம் செய்யப்பட்டார்.

அந்தக் காலத்தில் வேங்கடமகியின் பேரன் கோவிந்த தீக்ஷிதரை முதலியார் மிகவும் ஆதரித்து சதுர்தண்டி பிரகாசிகை முதலிய புஸ்தகங்களைப் பார்க்கவேண்டுமென்று கேட்டதற்கு நான் கொடுக்கும் மூர்ச்சனையை இன்ன ராகமென்று சொன்னால் புஸ்தகங்களை தருவேனென்று சொல்லி அவர் கொடுத்த மூர்ச்சனையை முதலியார் மூலமாய் ராமஸ்வாமி தீக்ஷிதர் பெற்றுக்கொண்டு, முதலியார் செய்ததைப்போல் "நன்னு பரீக்ஷிஞ்ச நேல" என்னும் பதத்தைச் செய்து கடைசி ஸ்வரத்தில் கோவிந்த தீக்ஷிதர் கொடுத்த மூர்ச்சனையை அமைத்து சின்னஸ்வாமி, பாலஸ்வாமி என்னும்

இருவர்களைக் கொண்டு பாடச்செய்ததைக் கேட்டு கோவிந்த தீக்ஷிதர் நான் கொடுத்த ராகந்தான், இவர் எங்கள் வெங்கடமகியின் சிஷ்யரென்று புகழ்ந்தார்.

சில காலத்திற்குப் பிறகு தன் இரண்டாவது குமாரராகிய சின்னஸ்வாமி தீக்ஷிதருக்கு கண்கள் தெரியாமல் போனதினால் மிக்கக் கவலையுற்றவராய்க் குடும்பத்தோடு திருப்பதிக்குப் போய் வெங்கடாசல பதியின்மேல் "மானஸாவேரி தருலதலசக" என்னும் 48 ராகங்களுள்ள ஒரு ராகமாலிகையும், "இங்காதயராகுன்னனு" என்னும் கீர்த்தனத்தை வேகவாஹினி ராகத்தில் செய்து 45 நாள் பஜித்துக் கொண்டிருக்கையில் கண்கள் தெரிந்து சின்ன ஸ்வாமி தீக்ஷிதர் தன் காலம்வரை ஸௌக்கியமாயிருந்தார். ராமஸ்வாமி தீக்ஷிதர் ஏகாதஶிதோறும் கீதகோவிந்த (அஷ்டபதி) 12 ஸர்க்கமும் தவறாமல் பாராயணம் செய்து விரதமிருப்பார்.

ஶ்ரீ மீனாக்ஷி தேவியின்மேல் 44 ராகங்களுள்ள ஒரு ராகமாலிகையும், ரீதிகௌளை, ஹிந்தோள வஸந்தம், மனோஹரி, பூர்ணச் சந்திரிகை முதலிய ராகங்களில் சௌக்க வர்ணங்களும், சங்கராபரண ராகத்தில் தானவர்ணமும், அநேக கீர்த்தனங்களும் "வெங்கட கிருஷ்ண" முத்திரையோடு செய்தது

மன்றி "ஹம்ஸத்வனி" என்னும் ராகத்தைக் கற்பித்து அந்த ராகத்தில் பிரபந்தம் செய்து ப்ரசித்தி அடைந்தார். தன் அந்திய காலத்தை யறிந்து ராமஸ்வாமி தீக்ஷிதர் குடும்பத்தோடு திருவாரூருக்கு வந்து சகம் 1739, கி. பி. 1817 தாதுவருஷம் மாசி மாதம் சிவராத்திரி புண்ய காலத்தில் பரமபதத்தை யடைந்தார். இவருக்கு காயக சிரேஷ்டரென்று கீர்த்திபெற்ற அலசூர் கிருஷ்ணய்யர் முக்கிய சிஷ்யரா யிருந்தார்.

28.. சியாமா சாஸ்திரிகள்

ஸ்ரீகாஞ்சீ காமாக்ஷீ தேவி உத்ஸவ மூர்த்தி யாகிய ஸுவர்ண விக்ரஹம் துஷ்டர்களாகிய முகம் மதியர்களுடைய கலகத்தால் அர்ச்சகர்களும், திராவிட பிராமணர்களில் வடமர்களாகிய சில ஸ்தானீகர் களும் புறப்பட்டு ஸ்ரீபுரம் என்னும் திருவாரூர் க்ஷேத்திரத்திற்கு வந்து சுமார் முப்பது வருஷங்கள் வரை தஞ்சை அரசர்களால் ஏற்படுத்தப்பட்ட பூஜோபசாரங்களை அங்கீகரித்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு புத்திரனில்லாமையால் மாதந்தோறும் கடைசி சனிவாரத்தில் வெங்கடாசலபதிக்குப் ப்ரீதி யாய் பிராமண ஸமாராதனை செய்யும் பொழுது, ஒருவர்மேல் வெங்கடாசலபதி ஆவேசித்து "ஓ தம்

பதிகளே, உங்களுக்கு ஒரு வருஷத்திற்குள் கீர்த்தி மானுகிய ஒரு புத்திரன் ஜனிப்பான்" என்று சொல்லியபடி சகாப்தம் 1685, கி. பி, 1762— சித்திரபானு வருஷம் சித்திரை மாதம் கிருத்திகை நக்ஷத்திரம் திங்கள் கிழமை 'மாலையில் பிறக்க முக்தியென்பதற்கேற்ப சியாமா சாஸ்திரிகள் திருவாரூரில் பிறந்தார். இவர் திராவிட பிராமணர் வடதேசத்து வடமாள் என்னும் வகுப்பைச் சேர்ந்தவர். கௌதம கோத்ரம், போதாயன ஸூத்திரத்தை உடையவர். கிருத்திகா நக்ஷத்திரத்தில் பிறந்ததினுல் இவர் வெங்கடசுப்பிரமண்ய சர்மா என்று பெயர் பெற்ருர். ஆனுல் செல்லப் பெயருடன் அழைப்பது எப்போதும் சியாமகிருஷ்ண என்று தான்.

இவர் பால்யத்திலேயே ஸம்ஸ்கிருதம், தெலுங்கு பாஷைகளில் மிக வல்லவராய் ஸுவர்ண விக்ரஹ மாகிய ஸ்ரீ காமாக்ஷியம்மனேடு தஞ்சாவூருக்கு வந்து சேர்ந்து, தன் பந்துக்களிலொருவரிடத்தில் ஸரளி முதல் ஸ்வரஜ்ஞானம் வரை கற்றுக் கொண்டார். அதற்குள் ஸ்ரீ வித்தையின் பரமானுக்கிரஹத்தையும் அடைந்தார்.

இவர் ஜன்மாந்திர விசேஷத்தால் வடதேசத்தி லிருந்து ஸங்கீத ஸ்வாமிகளென்று இசை

வல்லவராய் ஒரு யதிசிரேஷ்டர் வந்து இவரை மாணுக்கராய்க் கொண்டு மூன்று வருஷங்கள் வரை ஸங்கீத லக்ஷண லக்ஷியங்களின் ரகஸ்யங்கள் அனைத்தையும் முறையாக அப்யாசம் செய்வித்து, இவரது கான சாமர்த்தியங்களை யறிந்து மிகுந்த கீர்த்திமானுவாய் என்று அனுக்கிரஹித்து, ஆதிப் பய்யா பாட்டை சில காலம் கேட்டுக்கொண்டிரு என்று சொல்லி ஸங்கீத ஸ்வாமிகள் காசிக்குப் போய் விட்டார்.

சில காலத்திற்குப் பிறகு ஸ்ரீ காமாக்ஷி தேவி யின் அனுக்கிரஹத்தால் ஸாஹித்திய சமத்காரங் களும் ஸங்கீத கற்பனைகளும், தாள விஷயங்களும் பிரகாசிக்கும்படி சியாமகிருஷ்ண முத்திரையோடு வெகு கீர்த்தனங்கள், ஸ்வரஜதிகள், தானவர்ணங் கள் போன்ற உருப்படிகள் சுமார் 300 வரை செய் யப்பட்டதாக தெரிகின்றதாயினும் மிகச் சொற்ப உருப்படிகளே இப்பொழுது வழக்கத்திலிருக்கின் றன. சாஸ்திரிகள் மிகுந்த பக்தியோடு தேவியை பூஜித்து வந்தார். அடிக்கடி தேவியை எதிரில் கண்டு களித்திருக்கிருர். இவர் செய்த உருப்படி களில் நவரத்னமாலிகை என்னும் ஒன்பது கீர்த்தனங் களை மீனுக்ஷியம்மன் ஸன்னதியில் பாடியிருக் கிருர். அதில் ஸரோஜ தளநேத்ரி (சங்கராபரணம்)

மறிவேறகதி (ஆனந்தபைரவி) இவைகள் மேல் சொன்ன நவரத்னமாலிகையைச் சேர்ந்தது. கல்கடா, சிந்தாமணி போன்ற அபூர்வ ராகங்களுக்கு சாஸ்திரிகளின் கீர்த்தனங்களே சிறந்த லக்ஷ்யங்களாக விளங்குகின்றன. தவிரவும் அதீத, அனாகத எடுப்புகளில் தாளவிஷமங்களோடு கூடிய இவர் உருப்படிகளை நல்ல திறமை வாய்ந்தவர்கள்தான் பாடமுடியும்.

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள், தனது 64-வது வயதில் கி. பி 1827 மண்ணுலகைவிட்டு விண்ணுலகை அடைந்தார். இவருக்கு பஞ்சு சாஸ்திரி, ஸுப்பராய சாஸ்திரி என இரு புதல்வர்கள் உண்டு.

29. ஸுப்பராய சாஸ்திரிகள்

இவர் சியாமா சாஸ்திரிகளுடைய இரண்டாவது குமாரர். சகாப்தம் 1725, கி. பி. 1803 துந்துபி வருஷம் ஆவணிமாதம் இவர் தந்தையின் நக்ஷத்திரமாகிய கிருத்திகா நக்ஷத்திரத்தில் பிறந்தவர். இவர் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு பாஷைகளிலும், ஸங்கீதத்திலும் மிகச் சமர்த்தர்.

தெலுங்கில் குமார என்ற முத்திரையோடு கீர்த்தனங்கள், ஸ்வரஜதிகள், முதலிய உருப்படி வகைகளை செய்திருக்கிறார். இவருடைய உருப்படிகளெல்லாம்

ராகபாவத்தைக் கொடுக்கும் ஸங்கதிகளோடும், மத்யம கால ஸாஹித்யம், ஸ்வரஸாஹித்யம், சிட்டா ஸ்வரம் இவைகள் மிகுந்த வேலைப்பாடுடனிருக்கும்.

இவரும் முன்னோர்கள் ஆராதனை செய்த காமாக்ஷியை பூஜித்து ஸகல ஶ்ரேயஸ்ஸுகளையுமடைந்திருக்கிறார். இவர் கி. பி. 1862 கிருஷ்ண தசமியன்று இவ்வுலகைவிட்டு விண்ணுலகை அடைந்தார். இந்த ஸுப்பராய சாஸ்திரிகளுடைய தமயன் குமாரராகிய அண்ணுசாமி சாஸ்திரிகள் காவியம், நாடகம், அலங்காரம், வியாகரணம், தெலுங்கு, ஸங்கீதம் ஆகிய இவ்வித்தைகளை யறிந்த வித்வான். இவர் அநேகக் கீர்த்தனம், தரு, தானவர்ணங்கள் முதலியவற்றை செய்திருக்கிறார். இவர் பிடில் வாசிப்பதில் ஸமர்த்தர் இவர் சகாப்தம் 1749, கி. பி. 1827 விய வருஷம், பங்குனி மாதம் ஆயில்ய நக்ஷத்திரத்தில் ஜனித்து. சகாப்தம் 1822, கி. பி. 1900-ல் தன்னுடைய எழுபத்துமூன்றுவது வயதில் விகாரி வருஷம் மாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் திருவாதிரையில் ஸ்ரீபுரம் அடைந்தார்.

30. (பைடால) குருமூர்த்தி சாஸ்திரிகள்

இவர் முரிகிநாட்டு தெலுங்கு பிராமணர். திருநெல்வேலி ஜில்லா கைத்தார் என்னும் கிராமம்

இவரது ஜென்ம பூமி. சதுசாஸ்திர பண்டிதர், ஸங்கீதத்தில் மிக வல்லவர். இவரது இளமைப் பருவத்தில் சென்னபட்டணம் போய் மணலி சின்னய்யா முதலியாரால் வெகு சன்மானங்களை அடைந்த கீர்த்திமான். இவர் அனேக கீதங்களையும், பிரபந்தங்களையும், கீர்த்தனங்களையும், ஸம்ஸ்கிருத பாஷையில் தன்னுடைய பெயரையே முத்திரையாக வைத்து செய்தார்.

இவருடைய ஸஞ்சாரி கீதங்களும் லக்ஷண கீதங்களும் இப்பொழுதும் பாடப்பட்டு வருகின்றன. இவருடைய சகோதரர் சுப்பராய சாஸ்திரிகளும் ஒரு சிறந்த வித்வான். அனேக வர்ணங்களை செய்திருக்கிறார். பல கீர்த்தனைகளை செய்த காஞ்சீபுரத்துக் கூடால சேஷய்யரும் சோபானத்ரியென்ற வித்வானும் குருமூர்த்தி சாஸ்திரிகளின் பிரதான சிஷ்யர்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் விளங்கின சிறந்த லக்ஷணலக்ஷ்ய வித்வான்களில் இவர் ராமஸ்வாமி தீக்ஷதரின் ஸம காலஸ்தரா யிருந்த போதிலும் அவருக்கு இவர் வயதில் சிறியவரென்று தெரிகிறது.

31. வீணை பெருமாளய்யா

இவர் வீணையில் மிக்க பாண்டித்ய முள்ளவர். இவர் காளஹஸ்தி அய்யாவின் வமிசத்தார். தெலுங்கு

பிராமணர். பரம்பரையான யாழ் வல்லவர். தஞ்சாவூர் ஸமஸ்தானத்திய வித்துவான் வெகு ஸர்வமான்யங் களை அடைந்தவர். கனராகங்கள் வாசிப்பதில் வல்லவர். பைரவி முதலிய ஒவ்வொரு ராகத்தையும் ஒவ்வொரு இரவிலும் இரண்டு ஜாமம் வீதம் வந்தது வராமல் பத்துநாள் வரை முறையாய் வாசித்து பூர்த்தி செய்வார் இவ்வாறே வடதேச ஸமஸ்தானங் களிலும் வாசித்து வெண்குடை, வெண்சாமரம் பல்லக்குகள், இரத்தின மிழைத்த வீணை முதலிய அநேக ஸன்மானங்களை யடைந்து, புதுக் கோட்டைக்கு வந்து ரகுநாத (தொண்டமான்) மஹாராஜாவின் சபையில் ஒரு ராகத்தை இருபது நாள் முறையாய் வாசித்துப் பதினுயிரம் ரூபாய் சன்மானம் பெற்ருர்! இது வன்றி இவர் பெரியவர் களின் கீர்த்தனம் முதலிய ஸாஹித்யங்களில் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு ராகத்திலுள்ள வற்றையே வாசிப்பார்.

இவர் ஸௌராஷ்டிரத்திலும், சாவேரியிலும் அடதாளத்தில் இரண்டு தானவர்ணங்கள் செய்திருக் கிருர். அந்த இசைக் கற்பனையின் சாமர்த்யம் வேறெங்கும் வாய்ப்பது அரிது.

வீணையில் தாளத்தை விடாமல் வாசிப்பதில் மிக சமர்த்தர். இவர் இளைய ஸகோதரராகிய வீணை

நாராயணசாமி அய்யா இவரைப் போலவே யோக்யதையுடையவர். இவருடைய இரண்டாவது ஸஹோதரர் கொண்டய்யா. இவர் ஸாவேரி ராகத்தில் ஒரு ஸ்வரஜதி செய்திருக்கிறார்.

32. தியாகராஜர்

238 வருஷங்களுக்கு முன் திருவாரூரில் கிரிராஜ கவி என்று ஒரு பிராமணோத்தமரிருந்தார். அவருக்கு ஐந்து குமாரர்கள். அவர்களில் கடைசி குமாரருக்கு ராமப்பிரம்மமென்று பெயர்.

இவர் வேதஶாஸ்திரங்களில் மகா நிபுணர். இவருக்கு பஞ்சாபகேசன், இராமனுதன், தியாகராஜன் என்று மூன்று குமாரர்கள். ராமப்பிரம்மம் என்பவர் வறுமையினுல் மிகக் கஷ்டப்பட்டு தன் மனைவி மக்களோடு திருவாரூரை விட்டு திருவையாறென்ற பஞ்சநத க்ஷேத்திரத்திற்கு வந்து தன் உத்தம குண ஒழுங்குகளே உதவியாய்க் கொண்டு கால க்ஷேபம் செய்துகொண்டு வந்தார். இவருடைய குமாரர்களில் முந்திய இருவரும் லௌகீகத் தொழிலில் தேறினுர்கள். மூன்ருவது குமாரன் தந்தைக்கு அனுகூலமாயிருந்து கொண்டு வேதாத்யயனமும் ஸமஸ்கிருதமும் கற்றுக் கொண்டிருந்தார். இவரது பதிநான்காவது வயதில் தந்தையும் அடுத்த

வருஷத்தில் தாயும் காலம் சென்றூர்கள். இதற்குள் கிரமாந்தம் அத்யயனம், காவிய நாடகாலங்கார வித்பத்தியு மடைந்தார். பிறகு ஸங்கீதம் அப்யஸிக்க வேண்டுமென்ற அபேக்ஷையினுல் தான் வசித்துக் கொண்டிருந்த வீதியில் வசித்துக் கொண்டிருந்த அரண்மனை வித்வானுகிய ஸொண்டி வெங்கடரம ணய்யாவிடம் ஸங்கீதம் அப்யஸிக்கத் தொடங்கி, ஏகஸந்தக் கிராஹியாய் ஒரு வருஷத்துக்குள் ஸங்கீத லக்ஷணங்கள், ராகாலாபனம், பல்லவி, தாளம் முதலிய ஸங்கீத விஷயங்களில் இவருக்குச் சமானம் எங்குமில்லை யென்று விளங்கினுர்.

இவ்விதமிருக்கும்பொழுது காஞ்சிபுரத்திலிருந்து திருவையாற்றுக்கு வந்திருந்த ஒரு பாகவதோத்தம ரிடம் ஸ்ரீராம நாம மந்திரத்தை உபதேஸம் பெற்றூர். அந்த பாகவதோத்தமர் 96 கோடி நாமம் ஜபம் செய்பவர் ஜீவன் முக்தர்களாவார்கள் என்றும் நீ அவ்விதம் செய்தாயானுல் முக்தி பெறுவாய் என்று அனுக்ரஹித்தவண்ணமே ஒவ்வொரு நாளும் லக்ஷத்து இருபதாயிரம் நாமம் வீதம் இருபத்தோரு வருஷத்தில் 96 கோடி நாமங்களும் செய்து பூர்த்தி செய்தார்கள்.

இதன்பின் பகவானுகிய ஸ்ரீராமபிரான் மூன்று தடவை பிரஸன்னமாகி ஸாஹித்யங்கள் செய்யும்படி

யனுக்ரஹித்தார். ஒரு நாள் ஸ்ரீராம ஸன்னிதானத்தில் உட்கார்ந்து நாமங்கள் ஜபம் செய்துகொண்டிருக்கும்போது வாசற்கதவின் சத்தம் கேட்டவுடன் கவனித்துப் பார்க்கும்பொழுது,ஸ்ரீராகவன், லக்ஷ்மண ஸமேதராய் விசுவாமித்திரரோடு யாகரக்ஷணையின் பொருட்டு, புறப்பட்டு போகும் ஸமயமாய் தரிசனம் கொடுத்து, உடன் மறைந்துவிட்டார்.

உடனே "பாலகனகமய" என்னும் கீர்த்தன ரூபமாய் அடாணுராகத்தில் ஸ்ரீராமனைத் துதிக்கத் தொடங்கினர். இதுதான் இவருடைய முதல் ஸாஹித்யம். அடாணுராகத்தில் சமத்காரமாய் வர்ண மெட்டுக் கிரமமாய் அமைந்த இக்கீர்த்தனத்தை கேட்ட ஸங்கீத வித்வான்களும், பொருட்சுவையோடு அமைக்கப்பட்ட பதங்களின் நடைகளைக் கேட்ட ராமசேஷா ஶாஸ்திரிகள், பாஷ்யம் கிருஷ்ண ஶாஸ்திரிகள் முதலான ஸம்ஸ்கிருத பண்டிதர்களும் கந்தர்வனே! நாரத முனிவரோ! என்று பிரமித்து ஸ்தோத்திரம் செய்தார்கள். பிறகு "ராம நின்னே" என்று உசானிக் கீர்த்தனம் முதலான அநேக கீர்த்தனங்களை, தெலுங்கு ஸாஹித்யங்களாகச் செய்து கொண்டுவந்தார். இப்படி யிருக்கும்பொழுது ஒரு நாள் நாரதமுனிவர் ஸன்யாஸி வேஷம் பூண்டு விடியற்காலையில் இந்த தியாகராஜர் வீட்டிற்கு

வந்து இவரைப் பார்த்து தியாகராஜன் என்று யாரோ ஒரு சங்கீத வித்வானிருக்கிருராம், அவரது பாட்டைக் கேட்கவேண்டுமென்ற விருப்பம் எனக்கு உண்டாயிருக்கிறதென்று சொன்னவுடனே, எண்ணை தேய்த்துக்கொண்டிருந்த அந்த தியாகராஜர் ஸன்யாஸியை உபசரித்து நமஸ்காரம் செய்து நானே தியாகராஜன் என்று சொல்லி ஒரு முஹூர்த்தக் காலம் கந்தர்வ கானம் என்றெண்ணும்படி அம்முனிவர் முன் பாடினர்.

யதிசிரேஷ்டர் மனக் களிப்புற்று உனக்கு ஸமதையாய் கான ரஸத்தை யறிந்தவர் யாருமில்லை என்று சொல்லி, இந்த புஸ்தகம் உன்னிடத்தில் இருக்கட்டும் என்று ஒரு புஸ்தகத்தை கொடுத்து நித்ய கர்மானுஷ்டானத்தை முடித்துக்கொண்டு திரும்ப பிக்ஷைக்கு வருகிறேனென்று போய் மறைந்தார்.

பிறகு அந்த முனிவரை எவ்விடத்தில் தேடியும் காணுமல் சஞ்சலப்பட்டு சூரியாஸ்தமனம் வரை ஆகாரமில்லாமலிருந்து இராத்திரி பூஜை செய்து விட்டு நித்திரை செய்யும் பொழுது அவரது கனவில் 'பகலில் யதி வேஷத்தோடு தரிசனமளித்தேன்; நான் உனக்குக் கொடுத்த புஸ்தகம் ஸ்வரார்ணவம் என்ற ஸங்கீத லக்ஷண கிரந்தம்; இதுவரை

இவ்வுலகில் யாருமறியார்கள்; உன்னையன்றி மற்றெவரும் பார்க்கத் தக்கவரல்ல; உன் மூலமாய் ஸங்கீதம் இப்புவியில் பிரசித்தியடையவேண்டுமென்ற மனதோடு இந்த ஸ்வரார்ணவத்தை உனக்குக் கொடுத்தேன்; இனி உன் கவலை தீரும்' என்று சொல்லிமறைந்துவிட்டார் விடியற்காலையானவுடனே, எழுந்து தான் புஸ்தகத்தைப் பார்க்கவே கனவிற் கண்ட மாதிரியே இருக்க மிக ஆனந்த மடைந்து 'நாரத குருஸ்வாமி' என்ற தர்பார் கீர்த்தனத்தையும், 'ஸ்ரீ நாரத நாதஸரஸீருஹ' என்ற கீர்த்தனையை கானடா ராகத்திலும், 'நாரத கான லோலா' என்று அடாணா ராகத்திலொரு கீர்த்தனையையும் செய்தார்.

ஸ்வரார்ணவத்தை பார்க்க ஸங்கீதத்தின் அற்புதமான ராக கமகங்கள் யாவும் வெளிப்பட்டு அநேக அபூர்வ ராகங்களிலும், மேளகர்த்தா ராகங்களிலும், ஸங்கீத லக்ஷணம் தவறாமல் பக்தி மார்க்கங்களுக்கு ஆதாரமாக ஆயிரக்கணக்குள்ள கீர்த்தனங்களை செய்து பரமானந்தத்தை யடைந்தார்.

ஷட்காலம் கோவிந்த மாரார் கேரள தேசத்தைச் சேர்ந்த திருவனந்தபுரத்தில் ஜனித்தவர். மிகவும் பக்திமான். கான வித்தையில் ஆறு காலத்தில் மிக ஸுலபமாக ராகங்களையும் பல்லவியையும் பாடுவதில்

மிக வல்லவர். இவருடைய வித்வத் திறமையைப் பார்த்து கேரள தேசத்தரசன் இவர் தம்பூரில் ஒரு கொடியைக் கட்டி திக்விஜயம் செய்து வரும்படி கட்டளை யிட்டார். அதன்பேரில் கோவிந்த மாரார் யாத்திரை கிளம்பி போகும் வழியில் ஒரு கோவிலில் நித்திரை செய்யும்போது. 'பஞ்சநத க்ஷேத்திரத்தில் எனது பக்த சிரோமணியாகிய தியாகராஜன் கானமூர்த்தியாய் விளங்குகிறான். அவனிடத்தில் போய் அவனை தரிசித்து உனது கான வித்தையின் சாமர்த்தியத்தையும் பக்தி உண்மைகளையும் காண்பிக்கக் கடவாய்' என்று ஸ்ரீ ராமமூர்த்தி கனவில் வந்து கட்டளை யிட்டபடியே தியாகராஜரைத் தேடிக்கொண்டு திருவையார் வந்து தன் பாட்டைக் கேட்கும்படிச் செய்து அவருடைய பாட்டைக் கேட்டு பரமானந்தமடைந்தார். பிறகு கோவிந்த மாரார் பண்டரீபுரம் சென்று, பிறகு காசிக்குச் சென்றார்.

ஒரு காலத்தில் தஞ்சை சரபோஜி ராஜன் தியாகராஜ ஸ்வாமிகளை பார்ப்பதற்கு இசைந்து தூதர்களை அனுப்பினான். அதற்குட்படாமல் 'நீதி சால ஸுகமா' என்ற கீர்த்தனையைச் செய்து 'ராமா! இச்சுடநெல்ல நன்னன்யுலு ஹிம்ஸிம்சுக நனுக்ரஹிம்சதகத' என்னும் பொருளடங்கிய

கீர்த்தனையைச் செய்தார். ஸமயத்துக்குத் தகுந்த படியும் ஸ்ரீ ராமன் தனக்கு அனுக்கிரஹித்தபடியும், அநேகக் கீர்த்தனங்களைச் செய்திருக்கிறார்.

ஸ்ரீரங்கத்திற்கு போனபோது 'ஓ ரங்கஸாயி' என்றும் 'ராஜுவெடல ஜூதாமுராரரே' என்றும் ஸ்ரீ ரங்கநாதர் ஸ்தோத்திரமாக பாடினார். 'தெரதீயக ராதா' என்று திருப்பதியில் பாடினார். ஒருநாள் இவரது தமயன்மார்கள் இவரிடத்தில் கோபமடைந்து 'அரசர்கள் சொல்லியனுப்பினாலும் போகமாட்டேன் என்று சொல்லுகிறான்; வித்தை கற்றுக்கொண்டதால் பயனென்ன? பொருளில் ஆசையில்லாமல் ஒரு ராம பட்டாபிஷே விக்ரஹத்தைக் கட்டிக்கொண்டு திரிகிறான்; இவ்விக்கிரஹ மிருக்கிறது அவஸ்தையா யிருக்கிறது' என்று இவருக்குத் தெரியாமல் விக்கிரஹத்தை எடுத்து கிணற்றில் போட்டு விட்டார்கள். அது தெரிந்து "ஏபாபமுஜேஸிதிநோ" என்ற கீர்த்தனத்தைச் செய்தார். இப்படிப்பட்ட ஸகோதரர்கள் என்னுடன் பிறந்து பக்தி செய்ய விடாமல் கஷ்டப்படுத்துகிறார்களே என்று முறை யிட்டார். "எட்லா தொரிகிதிவோ" என்று வேறொரு கீர்த்தனரூபமாக 'ஸ்ரீராமா, சுற்றுக் காத தூரம் வரை என்னைச் சேர்ந்தவர்கள் பக்தி மார்கத்தை யறியாதவர்களா யிருக்க நீர் எனக்குக் கிடைத்தது

எப்படியோ' என்றும் "எந்தாரா நீதன கெந்த போனி, சிந்தவிடுவ சால ஸ்ரீ ராமா" என்றும் பலவாருகப் பாடினுர், இவ்விதம் இவருடைய வாழ்நாளெல்லாம் தினந்தோறும் தன்னுல் செய்யப்படுகிற ஸத்கர்ம அனுஷ்டானங்களும் பஜனேயும் பிரகாசிக்கும்படி "கொலுவ மரெகதா" என்ற கீர்த்தனமுஞ் செய்தார்.

ஒரு நாள் கனவில் வந்து ஸ்ரீ ராமன் தரிசனங் கொடுத்து நீ இன்னும் பத்து மாதங்கள் இப்பூமியி லிருப்பாயென்று சொன்னுராம். மறுநாள் விடியற் காலேயில் முதல் நாள் கனவில் தனக்கும் ஸ்ரீ ராமனுக்கும் நடந்த விஷயங்களேத் தெரியப்படுத்தி "கிரிபைநெலகொன்ன ராமுனி" என்று கீர்த்தனம் செய்தார். பத்து மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் கனவில் உனக்கு இன்னும் ஒரு ஜன்மம் இருக்கிற தென்று சொல்லவே அய்யரவர்கள் 'நான் இவ்வளவு காலம் உம்மை ஆராதித்துக் கொண்டிருந்து மறுஜன்ம மடைவதா?' என்றவுடனே ஸ்ரீ ரகுநாதன் கருணே கூர்ந்து அய்யரைப்பார்த்து அடுத்த மறுநாள் ஸன்யாஸாச்ரமம் பெற்றுக்கொள், அடுத்த மறுதினமே உன்னே ஐக்யம் செய்துகொள்கிறே னென்று வாக்களித்தார். இச்சங்கதியை யாவர்க்கும் தெரியப்படுத்தி பகவான் கட்டளே யிட்டவாறே மறு தினத்தில் அநேக வித்வான்கள், பக்தர்கள், ஸாதுக்கள் கூடியிருக்கும்போது பரமஹம்ஸாஶ்ரமம்

பெற்றுக்கொண்டார். மறுநாள் உதய காலத்தில் 'சியாமஸுந்தராங்க' என்ற கீர்த்தனம் செய்து பாடி தன் சிஷ்யர்கள், வித்வான்கள் பக்தர்கள் முதலிய எல்லாரிடத்திலும் அன்றைதினம் 12 மணிக்கு தான் நிர்வாணமடைவதாயும் அவ்வாறே பகவான் நியமித்திருக்கிறுரென்றும் தெரியப்படுத்தினுர். அப்போது திருவையாற்றுக்குச் சுற்றுப் பக்கத்திலும் தஞ்சாவூர் முதலிய இடங்களிலிருந்து இந்த வைபவத்தைப் பார்த்து ஆனந்திப்பதற்காக கணக்கற்ற ஜனங்கள் வந்து சேர்ந்தார்கள், தியாகராஜஸ்வாமிகள் தான் சொன்ன காலம் ஸமீபிக்கவே, அநேகர்களின் பாட்டுக்களும், வைதீகர்களின் வேத கோஷங்களும், அநேக பக்தர்களுடைய நாமாவளிகளும் நிறைந்திருக்கும் ஸமயத்தில் தன் வாயினுல் பகவான் நிர்ணயம் செய்த காலமிதுதான், தீபாராதனே செய்யுங்களென்று கட்டளையிட, அவ்வாறே பட்டாபிராமருக்கு தீபாராதனே செய்தார்கள். உடனே தன் வாக்கினுல் 'ஜானகீ காந்தஸ்மரணே' என்று அவர் நாமாவளி செய்யவே, ஸமஸ்த ஜனங்களும் "ஜய ஜய ராமா" என்று சொல்ல, அஞ்சலியஸ்தங்களோடு பகவானுக்கு முன்பு நமஸ்காரம் செய்தார்; பிறகு ஸகல ஜனங்களும் அருகில் போய் பார்க்கையில் உயிர் நீங்கியவராய் காணப்பட்டார். உடனே அநேக வைபவங்களோடு திருவையாற்று

ஸ்ரீ பாவாஸ்வாமி படித்துறையில் தியாகராஜஸ்வாமிகளின் புண்ய ஶரீரம் அடக்கம் செய்யப்பட்டது. இவர் 77-வது வயதில் தேக வியோகமானார். இவருக்கு புருஷ ஸந்ததி கிடையாது. இவரது 35-ஆவது வயதில் முதல் மனைவி புண்யலோகம் சென்றார். பிறகு விவாகம் செய்து கொண்ட இரண்டாவது மனைவி இவருடைய காலத்திற்கு முன்பே ஒரு பெண் குழந்தையை விட்டு விட்டு காலம் சென்றார். அந்தப் பெண்ணிற்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக் குழந்தை பெயர் தியாக ராஜன். அவர் 35-வது வயதில் காலம் சென்றார். இப்போது ஸந்ததி ஒருவருமில்லை. இவரால் செய்யப்பட்ட திவ்யநாம கீர்த்தனம், உத்ஸவ ஸம்பிர தாயக் கீர்த்தனம், பிரஹ்லாத பக்தி விஜயம், நௌகா சரித்திரம் முதலிய உருப்படிகள் யாவும் இப்போதும் பழக்கத்திலிருக்கின்றன. தவிரவும் அநேக அபூர்வ ராகங்களுண்டுபண்ணி அதிலும் கீர்த்தனைகள் செய்திருக்கிறார்.

33. தியாகராஜஸ்வாமிகளின் சிஷ்யர்கள்
(1) வீணை குப்பய்யர்

இவர் வடமர் வகுப்பைச் சேர்ந்த தமிழ் பிராமணர். ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகளின் சிஷ்யர்களில் மிக கீர்த்தி வாய்ந்தவர். இவருடைய வாஸ

ஸ்தலம் திருவொற்றியூர். சிறுவயதிலேயே ஸங்கீதத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் விசேஷ பாண்டித்யமடைந்து வீணை வாசிப்பதிலும் பிடில் வாசிப்பதிலும் சிறந்த வித்வானாக விளங்கினார். இவர் கோபாலதாஸ என்ற முத்திரையோடு வேங்கடேச்வர பஞ்சரத்னம், காளஹஸ்தீச பஞ்சரத்னம், சாமுண்டேச்வரி பஞ்சரத்னம், முதலிய உருப்படிகள் செய்திருக்கிறார். இவருடைய உருப்படிகள் யாவும் ராக புஷ்டியுடனும் அர்த்தபுஷ்டியுடனுமிருக்கும். இவருடையதிறமையைப் பார்த்து வித்வான்கள் இவருக்கு கான சக்ரவர்த்தி என்னும் பட்டத்தைச் சூட்டினார்கள். இவர் தன் புத்திரருக்கு தியாகய்யரென்று தன் ஆசிரியர் பெயரை வைத்தார். *திருவொற்றியூர் தியாகய்யர் ஸங்கீதத்திலும் தெலுங்கிலும் நல்ல தேர்ச்சியுடையவர் இவரும் தகப்பனாரைப் போல் அநேக தான வர்ணங்களையும் கீர்த்தனங்களையும் செய்திருக்கிறார் இவர் பல்லவி ஸ்வரகல்ப வல்லி என்னும் ஒரு புஸ்தகம் அச்சிட்டு பிரசித்தப்படுத்தியிருக்கிறார். இவர் பாட்டனார் பெயர் ஸாம்பமூர்த்தி சாஸ்திரிகள், இவர் வீணையில் மகா ஸமர்த்தர்: ஸாம்பன் வாசித்து ஸதாசிவனாகிய ஸாக்ஷாத் சிவபெருமான் கேட்க வேண்டுமென்று முன்னாளில் சொல்வார்கள்.

---

*திருவொற்றியூர் தியாகய்யர் அங்கித முத்திரை **கோபாலதாஸ.**

(2) ஸங்கீத வித்யா ஶிரோமணியாகிய வாலாஜாபேட்டை வேங்கடரமணபாகவதர். இவரால் அநேக ஸௌராஷ்டிரர்கள் ஸங்கீதத்தில் தேர்ந்தவர்களாய் தியாகராஜ க்ருதிகள் அநேகம் பாடம் செய்து கொண்டும் பிரகாசப் படுத்திக் கொண்டும் இருந்தார்கள்.

(3) அய்ய பாகவதர்: (4) சுப்பராம பாகவதர் (5) தில்லேஸ்தானம் ராமய்யங்கார் (6) உமையாள் புரம் கிருஷ்ண பாகவதர், (7) உமையாள்புரம் ஸுந்தர பாகவதர்:

34. கோவிந்தசாமி அய்யா

இவர் தெலுங்கு பிராமணர். தெலுங்கு பாஷையிலும் ஸங்கீதத்திலும் மிக்க வல்லமையுடையவர். இவரது தெலுங்கு பதங்களின் போக்குகள்மிகவும் கோர்வையாகவும் ஶ்ருங்கார ரஸப் பிரதானமாயுமிருக்கும். கார்வேட் நகரத்து ஸமஸ்தானுதிபதியின் மேல் மோஹனராகத்தில் ஒரு வர்ணமும். தேவதைகளின் மீது நவரோஜு, கேதாரகௌளை ராகங்களில் இவர் பார்த்த வர்ணங்களும், மிகவும் பிரசித்தமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த கோவிந்தசாமி அய்யா ஆதிப்ப அய்யாவுக்கு முன்னிருந்தவர். இவர் கார்வேட் நகரத்தில் வசித்து வந்தார்.

35. கூவனசாமி அய்யா

இவர் கோவிந்தசாமி அய்யாவுடைய சகோதரர். இவர் ஸங்கீதம், தெலுங்கு இவைகளில் தேர்ச்சி பெற்றவர். இவரால் நாட்டைக்குரஞ்சி ராகத்தில் செய்யப்பட்ட ஒரு தான வர்ணம் . மாத்திரம் பிரசித்தியாயிருக்கிறது. இவரும் கார்வேட் நகரத்தில் வசித்து வந்தவ ரென்று தெரிய வருகிறது.

36. வைகுண்ட சாஸ்திரிகள்

இவர் திராவிடப் பிராமணர். ஸம்ஸ்கிருத பாஷையில் காவிய, நாடகாலங்காரங்கள், வியாகரணம் முதலிய சாஸ்திரங்கள், ஸங்கீதம், இவ்வித்தைகளில் அசாதாரணமான மாக்ஷிமை யுடையவர். இவர் ஸம்ஸ்கிருதத்தில் இசை கற்பனையோடு ரக்திராக, தேசீய ராகங்களில் வெகு கீர்த்தனங்கள் செய்திருக்கிறார். இவர் சோழ தேசத்தாரென்றும் ராமசாமி தீக்ஷதரின் ஸமகாலத்தில் இருந்தவரென்றும் சொல்லுகிறார்கள். இவரது அங்கித முத்திரை வைகுண்ட.

37. விஜய கோபாலர்

இவர் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, ஸங்கீதம் இவைகளில் மிகச் சமர்த்தர். இவர் விஜயகோபால என்ற முத்திரையோடு அனேக கீர்த்தனங்கள்

செய்திருக்கிறார். இவர் சுமார் 250 வருஷங்களுக்கு முன் னிருந்தவ ரென்று தெரிய வருகிறது.

38. குப்புசாமி அய்யர்

இவர் திராவிடப் பிராமணர். தெலுங்கில் நல்ல ஞானமுடையவர், இவர் அமரசிம்ம மகாராஜாவின் காலத்திலும் சரபோஜி மகாராஜாவின் ஆரம்ப காலத்திலும் இருந்ததாய்ச சொல்லுகிறார்கள், இவரது கீர்த்தனங்கள் பக்திரஸ வியவகாரங்களோடு இருக்கும். ச்ருங்கார ரஸமாயும் சில பதங்கள் செய்திருக்கிறார். இவை இசைக்கற்பனை, பொருள் சுவையோடு கூடியவை. இவரது அங்கித முத்திரை வரத வெங்கட.

39. பல்லவி கோபாலய்யர்

இவர் வடமர், பிராமண குலத்தில் பிறந்தவர். ஸங்கீதத்திலும் தெலுங்கிலும் நல்ல பாண்டித்யம் உடைய இவர், பாடகர்களில் எந்த வித்வானுகிலும் அடிக்கடி புதிதாய் தோன்றக்கூடிய கல்பனு சாதுர்யத்தோடு பல்லவி பாடுவதில் இவருக்குச் சமானமாக ஆகாததினுல் இவர்பல்லவி கோபாலய்யர் என்று பிரசித்தியை அடைந்தார், இவரது ஸங்கீத கல்பனையின் வல்லமைகளை அடதாளத்தில் இவரால் செய்யப்பட்ட வனஜாக்ஷி என்னும் கல்யாணி

தான வர்ணத்தைக் கவனித்தால் தெரியும்; ஒரிகை முதலான கமகங்களும் ஸ்வர கற்பனைகளின் நடைகளும் இதில் தெளிவாக விளங்கும். இதுவுமன்றி காம்போஜி, தோடி ராகங்களில், அடதாளத்தில் தான வர்ணங்களும் சில ரக்தி ராகங்களில் கீர்த்தனங்களும் வெங்கட என்னும் முத்திரையுடன் செய்து கீர்த்தி பெற்றார். இவர் அமரஸிம்ம மகாராஜாவின் (1788-1799) காலத்திலும், சரபோஜி மகாராஜா (1800-1832) காலத்திலும் தஞ்ஜாவூர் ஸமஸ்தான வித்வானாக விளங்கி வந்தார்.

40. முத்துஸ்வாமி தீக்ஷிதர்

கி. பி. 1775 ஹு (மன்மத ஹு) பங்குனி மாதம் கார்த்திகை நக்ஷத்திரத்தோடு கூடிய சுபதினத்தில் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் திருவாரூரில் அவதரித்தார். இவர் தகப்பனார் பெயர் ராமஸ்வாமி தீக்ஷிதர். தாயார் பெயர் சுப்புலக்ஷ்மி அம்மாள். முத்துஸ்வாமி தீக்ஷிதர் 16-வது வயதிலேயே வேதாத்யயனம் செய்து, காவ்ய, நாடக, அலங்காராதி ஶாஸ்திரங்களும், வ்யாகரணமும் நன்றாய்ப் பயின்று, கானம் செய்வதிலும் வீணை வாசிப்பதிலும் தனக்கு நிகரற்றவராக விளங்கினார். தவிர ஜோதிடம், வைத்தியம், மாந்த்ரீகம், ஆகிய சாஸ்திரங்களிலும் நல்ல பாண்டித்ய மடைந்தார்.

இவருக்கு திருவாரூருக்குச் சமீபமுள்ள பொம்பூரில் விவாஹம் நடந்தது. இவர் தன் தகப்பனருடன் மணலியில் இருக்கும்போதும் ஸ்ரீ சிதம்பரநாத ஸ்வாமிகள் அவ்விடம் வந்து சேர்ந்தார். அக்காலங்களில் ஸ்வாமிகளுக்கு முத்துஸ்வாமி தீக்ஷதரே ஸகல தொண்டுகளையும் செய்தார். இவரது பக்திக்கு ஸந்தோஷித்து இவரை தன்கூட காசிக்கு அழைத்துச் சென்று மணிகர்ணிகை முதலிய புண்ணிய கட்டங்களில் ஸ்னனஞ்செய்த பின் சுபமுஹூர்த்தத்தில் ஸ்ரீ வித்யா மஹா ஷோடசாக்ஷரீ மஹா மந்த்ரத்தை உபதேசித்து கிரமமாய் ஐந்து வருஷம் வரை மந்த்ராவர்த்தி செய்வித்து ஸித்தியடைந்து அஷ்ட மஹா ஸித்திகளை யடையச்செய்து இவரை மஹா புருஷனகத் தெரிந்து தீக்ஷிதரை அழைத்து உன் மனேபீஷ்டம் போல் பரதேவதை உனக்கு வேண்டிய அனுக்கிரஹம் பண்ணுவாள். நீ மனைவிகளுடன் மணலிக்குப் போய் இஷ்ட தேவதா ப்ரீதி செய்து, பிறகு திருத்தணியில் திருமுருகன் ஸன்னிதி சென்று ஒரு மண்டலம்துதித்து வா, முருகன் உன் பக்திக்கு ப்ரஸன்னமாவார்' என்று சொன்னர். ஸ்வாமிகளை விட்டுப் பிரிய மனமில்லாமல் தயங்கினர். உடனே யோகிகள் தீக்ஷிதரைப் பார்த்து 'கங்கைக் கரையில் நின்று கொண்டு உனக்கு எதுவேண்டுமோ அதை

நினைத்து இஷ்ட தெய்வத்தை ப்ரார்த்தித்து இரண்டு கைகளால் தண்ணீரை எடு; அதில் நீ எது நினைக்கிருயோ அது தோன்றும்' என்று சொன்னவுடன் தீக்ஷிதர் வீணையை நினைத்துக்கொண்டு தீர்த்தத்தை இரு கைகளாலும் எடுத்ததும் இரண்டு விசேஷங்களோடு கூடின வீணையொன்று தோன்றிற்று. அவை என்னவென்ருல் வீணையின் யாளிமுகம் எதிர்முகமாகவும் வீணைப்பானையின் கழுத்தில் வடமொழியில் ஸ்ரீராம் என்றும் எழுதியிருந்தது. இதையெல்லாம் கண்ட தீக்ஷிதர் யோகியை விட்டுப்போக மனமில்லாமலிருந்து வரும்பொழுது ஸ்வாமிகள் ஸித்தி அடைந்தார்கள். தீக்ஷதர் யதிகளுக்கு செய்யவேண்டிய முறைப்படி யாவற்றையும் செய்துவிட்டு ஸ்வாமிகள் உத்திரவின்படி மணலிக்குத் திரும்பி வந்தார். சிதம்பரநாத ஸ்வாமிகளின் ஸமாதி காசியில் இப்பவும் ஹனுமந்த கட்டத்திலிருக்கிறது. மணலிக்கு வந்து தேவைகளின் திருப்திக்காக முறையே அந்தர்யாகம், பஹிர்யாகங்களை செய்து திருத்தணிக்ஷேத்திரத்துக்கு வந்தது ஸ்ன்னிதியில் ஸுப்ரம்மண்ய பஞ்சதஸாக்ஷரீமஹா மந்த்ரத்தை ஜபித்துக்கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் முருகப்பெருமான் கிழவேடத்தில் வந்து வாயைத் திறவென்று சொல்லி வாயில் ஒரு கற்கண்டுக்கட்டியைப் போட்டு மறைந்துவிட்டார். உடனே தீக்ஷிதர் மாயாமாளவ கௌள

ராகத்தில் முதல் வேற்றுமையை யீற்றுடையதாய் ஸ்ரீ நாதாதிகுருகுஹோ ஜயதி என்று முதல் முதல் ஸம்ஸ்கிருதத்தில் கீர்த்தனத்தைப் பாடினர். இது தவிர விழி வேற்றுமைகளிலும் ஏழு கீர்த்தனங்கள் குருகுஹ விஷயமாய் செய்தார். பிறகு காஞ்சீபுரம் வந்து தன் ஸஹோதரர்களோடு நான்கு வருஷம் வரை அவ்விடத்தில் வசித்து ஸ்ரீகாமாக்ஷி ஸன்னிதானத்தில் ஸ்ரீவித்யா உபாஸ்தி செய்து கொண்டு கஞ்ஜதளாயதாக்ஷி,ஏகாம்ரநாதம்பஜேஹம் முதலான கீர்த்தனங்கள் இசைக் கற்பனைகள் விளங்கும்படி செய்து தன் தம்பிகள் மூலமாய் பிரசித்தி செய்தார் உபநிஷத் பிரம்மத்தோடு வேதாந்த விசாரணை செய்து கொண்டு அவரால் செய்யப்பட்ட ரமாஷ்டபதிக்கு வர்ணக் கிரமங்களோடு ராக தாளங்களை யேற்படுத்தினர். பிறகு குடும்பத்தோடு திருவாரூருக்கு வந்து வசித்து வந்தார்.

குருகுஹ முத்திரையோடு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமியின்மேல் அநேகக் கீர்த்தனங்களும், ஆனந்தேஸ்வரர், ஸித்தீஸ்வரர், அசலேஸ்வரர், ஹாடகேஸ்வரர், வல்மீகேஸ்வரர் இவர்கள் பேரிலும் அந்த க்ஷேத்திரத்திலுள்ள ஷோடசகணபதிகள் பேரிலும் சோழ மண்டலத்தில் விளங்கும் சிவக்ஷேத்திர விஷ்ணு க்ஷேத்திரங்களிலுள்ள தெய்வங்கள் பேரிலும் பிருதிவி,

அப்பு, தேஜஸ், வாயு, ஆகாஶம் முதலிய பஞ்சலிங்கக் கீர்த்தனங்களும் நீலோத்பலாம்பாள் பேரில் அநேகக் கீர்த்தனங்களும், பாலாம்பிகை பேரில் அநேக கீர்த் தனங்களும், மதுரை மீனுக்ஷி பேரில் அநேக கீர்த் தனங்களும் அழகர் கோவில் பாண்டியதேஶ க்ஷேத்திர ஸ்வாமிகள்பேரிலும், காசி முதலான க்ஷேத்திரங்கள் பேரிலும் அஸாதாரணமான சொற்சுவையின் நடைகளோடும் அத்வைத பாவனேயோடும் வேங்கடமகி ஸம்பிரதாயங்களான ராகங்களே விடா மலும் கமகஜாதீயங்கள் அந்தந்த ராக ஜீவஸ்வரங் களும் ராகப்பெயர்களும் விளங்கும்படிக் கீர்த்தனங்கள் செய்ததுமன்றி சூளாதி ஏழு தாளங்களில் நவக்ரஹ கீர்த்தனங்களேயும் அநேக மணிப்பிரவாளக் கீர்த் தனங்களேயும், கமலாம்பாள் விஷயமாய் நவாவரண பூஜாக்கிரமமாய் ஒன்பது கீர்த்தனங்களும் செய்து தன் சிஷ்யர்களால் உலகப் பிரசித்தியாய் சந்திர சூரிய நக்ஷத்திரங்களுள்ளவரை பிரகாசிக்கும்படி செய்தார். தன் தம்பிமார்கள் தன்னிடமிருந்து கீர்த்தனங்களேப் பாடம் செய்துகொண்டிருக்கும் போது ரஸிகர்களான பிரபுக்களால் மதுரைக்கு வரும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் சின்னஸ்வாமி தீக்ஷிதர் தம்பி பாலுஸ்வாமி தீக்ஷிதருடன் மதுரை சென்று சில வருஷங்கள் இருந்துகொண்டிருக்கும் போது சின்னஸ்வாமி தீக்ஷிதர் காலமானுர்.

பாலுஸ்வாமி தீக்ஷிதர் ஸஹோதரரின் மரணத்தால் விரக்தியடைந்து ஹரி யென்ற ஶிஷ்யனை அழைத்துக் கொண்டு ஸேதுவுக்குப்போய் எட்டயபுரத்திற்குவந்து எட்டயபுரம் ஸமஸ்தானம் மகாராஜா அவர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தார்.

தீக்ஷிதர் தன் ஸஹோதர வியோகம் உலகத்தி னியல்பென்றுணர்ந்து தன்னிரு மனைவிகளுடன் ஶிஷ்யராகிய ஸுப்பிரமணிய அய்யரையும் அழைத்துக் கொண்டு, தன் இரண்டாவது இளைய ஸகோதரனை பார்க்க மதுரை மார்க்கமாய் சாத்தூருக்கு வந்து சாத்தூர் பெருமாள் கோவில் மண்டபத்தில் பூஜை செய்துகொண்டிருக்கும்போது சில வைஷ்ணவ பிராமணர்கள் எட்டயபுரத்தில் திருவாரூரிலிருந்து வந்திருக்கும் பாலுஸ்வாமி என்னும் ஒரு வித்வாம் சருக்கும் ராமேஶ்வரத்திலிருந்து அழைத்துவந்த பெண்ணிற்கும் நாளைக்கு விவாஹம் நடக்கப் போகிறது, நாமெல்லாம் போகலாம் வாருங்கள், என்று சொன்ன வார்த்தையைக் கேட்டு தீக்ஷித ரவர்கள் "வேங்கடேஶ்வர யாதவ பூபதி மாஶ்ரயே!' என்று மேகரஞ்ஜீ ராகத்தில் ஒரு கீர்த்தனம் செய்தார். பிறகு அங்கிருக்கும் வைஷ்ணவர்களைப் பார்த்து எட்டயபுரத்திற்கு எங்களையும் அழைத்துக் கொண்டு போங்கள் என்று சொல்லி அவர்களோடு

புறப்பட்டு எட்டயபுரத்திற்கு வந்துகொண்டிருக்கும் பொழுது வரும் வழியில் மழையில்லாமல் வாடுகிற பயிர்களைப் பார்த்து இரக்கங்கொண்டு அமிருதேஶ்வரியை தியானித்து அமிருதவர்ஷிணி ராகத்தில் 'ஆனந்தாம்ருத கர்ஷிணீ' அமிருதவர்ஷிணி என்னும் கீர்த்தனத்தைப் பாடுகையில் மாசற்றிருந்த ஆகாசத்தில் கறுத்த மேகம் ஒன்று தோற்றப்பட்டு வரவர அபிவிருத்தியடைந்து ஸகிக்கக்கூடாத மழை பெய்ததாம். கரிசல் மண் தரையானதால் வண்டி நடவாமல் நிற்கப்பட்டது. தன்னோடு வந்தவர்கள் அவஸ்தைப்பட்டுக்கொண்டு மெதுவாய் எட்டயபுரம் வந்து சேர்ந்தார்கள். தன் தம்பியைக் கண்டு ஸந்தோஷித்தார். மறுநாள் கல்யாணம் நடந்தது. தீக்ஷிதருடைய நிர்யாணகாலம் சமீபித்திருந்ததால் தீக்ஷதர் தம்பியிடம் வந்துசேர்ந்தார். சகாப்தம் 1757, கி. பி. 1835 மன்மத வருஷம் அற்பிசிமீ கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசியில் பூஜை செய்து கொண்டிருக்கும்போது "மீனலோசனி பாசமோசனீ" என்ற இடத்தை மறுமுறை பாடச்சொல்லி புகழுடம்பையுடையவராய் கந்தகிரியைச்சேர்ந்தார்கள். தீக்ஷிதர் ஸமாதி இப்பொழுதும் எட்டயபுரத்தில் இருக்கிறது.

விரிவு சரித்திரம் தெரிய வேண்டுமானல் ஸ்ரீ குருகுஹ காஞம்ருத வர்ஷிணி முதல் பாகத்தைப் பார்த்துத் தெரிந்துக்கொள்ளவும்.

41. முத்துஸ்வாமி தீக்ஷிதரவர்களின் சிஷ்யர்கள்

(1) ஸங்கீதத்திலும் தமிழ் பாஷையிலும் பண்டிதரான திருக்கடையூர் பாரதி, (2) ஆவடையார் கோயில் வீணை வெங்கட்ராமய்யர். (3) தேவூர் ஸுப்பிரமணிய அய்யர், (4) ஸங்கீதம் மிருதங்கம் இவைகளில் இலக்கிய இலக்கணங்களில் ஸமர்த்தரான திருவாரூர் சுத்த மத்தளம் தம்பியப்பன், (5) பரத ஶிரேஷ்டராகிய தஞ்சாவூர் பொன்னையா பிள்ளை. இவர் குருகுஹ ஸ்வாமிகி நேதாஸுடைதி என்ற முத்திரையுடன் அநேக கீர்த்தனங்கள் செய்திருக்கிறார்.

(6) வடிவேலு, (7) பரதலக்ஷண ஸமர்த்தரான கூறைநாடு ராமஸ்வாமி, (8) நாகஸ்வர வாத்யத்தில் மிகுந்த ஞானமுள்ள திருவாரூர் வில்வவனம். (9) வெகுதான வர்ணங்கள், பதங்கள் செய்த திருவாரூர் அய்யாஸ்வாமி, (10) நாட்டிய வித்தையிலும் மிக்க புகழ்படைத்த திருவாரூர் கமலம், (11) பாட்டில் மிகவும் ஸமர்த்தியான வள்ளலார்கோவில் அம்மணி.

42. சின்னஸ்வாமி தீக்ஷிதர்

இவர் முத்துஸ்வாமி தீக்ஷிதரின் இளைய ஸஹோதரர். ஸம்ஸ்க்ருதம் தெலுங்கு பாஷைகளில்

நல்ல கல்விமான். ஸங்கீத வித்தையில் அதிகப் பாண்டித்தியமுடையவர். யாழ்வல்லவர். ஜந்திர காத்திர முள்ளவர். மணலி சின்னய்யா முதலியார் ஸபையிலும் மற்ற ராஜ ஸபைகளிலும் அதிக கௌரவம் பெற்ற கீர்த்திமான். இவர் திருவாரூரில் குடும்பத்தாரோடு வஸித்துக்கொண்டிருக்கும்போது ரஸிகர்கள் வந்திருக்கும் ஸபையில் ஒரு நாளிரவில் நாகவராளி ராகத்தை ஆலாபித்துக்கொண்டிருக்கும் போது இவருக்கெதிரில் ஒரு பெரிய ஸர்ப்பம் மேற் கூரையிலிருந்து விழுந்து படமெடுத்து ஆடிக்கொண் டிருக்கும்போது ஜனங்கள் எல்லாரும் பயப்படவே, அவ்விடத்திலிருந்த தீக்ஷிதரவர்கள், 'பயப்படாதீர் கள்! வீணையை வாசித்துக்கொண்டிருக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டு வாசித்துக்கொண்டிருக்கும் பொழுது அந்த ஸர்ப்பம் ஒரு மாடம் உயரம் படமெடுத்தாடி சிரமப்பட்டு வரவர குறைத்துக் கொண்டு தரையோடு படத்தைச் சேர்த்ததைப் பார்த்து, 'எல்லோரும் நமஸ்காரம் செய்யுங்கள் என்று சொன்னவண்ணமே எல்லோரும் நமஸ் கரித்தார்கள். உடனே ஸர்ப்பம் போய்விட்டது. இவ்விஷயத்தை கண்ணாரக் கண்ட ஸுப்பிரமணிய அய்யர் முதலிய தீக்ஷிதரவர்களுடைய சிஷ்யர்கள் சொல்லுவார்கள்.

இவர் நாரதர்மேல் தோடிராகத்தில் கானலோல கருணாலவால என்றும், கல்யாணி ராகத்தில் நாரயணா ணந்த என்றும் இரண்டு கீர்த்தனங்கள் செய்திருக் கிறார். இவர் தன் தம்பியோடு மதுரைக்கு வந்து 45-வது வயதில் லோகாந்நரம் அடைந்தார்.

43. பாலுஸ்வாமி தீக்ஷிதர்

இவர் ராமஸ்வாமி தீக்ஷிதரின் மூன்றாவது குமாரராக சகாப்தம் 1708, கி. பி. 1786 பிரபவஞூ ஆனிமீ அசுவதி நக்ஷத்திரம் கன்யா லக்னத்தில் ஜனித்தார்.

முத்துஸ்வாமி தீக்ஷிதரின் இரண்டாவது ஸஹோதரர். பாலக்ருஷ்ண நாமத்தை யுடையவர். தெலுங்கில் நல்ல வித்வத்தை யுடையவர். ஸங்கீதத் திலும் மிக ஸமர்த்தர். வீணை, ஸ்வரபத், பிடில், ஸித்தார், மிருதங்கம் முதலான வாத்தியங்கள் வாசிப் பதில் மிகவும் ஸமர்த்தர். ஸங்கீத லக்ஷ்ய லக்ஷணங் களின் ரகஸ்யத்தை யறிந்தவர். இவரது இளமை யிலே மணலி சின்னய்யா முதலியார் பிடில் வாத்யத் தில் மிக ஸமர்த்தனான ஒரு ஆங்கிலேயரிடத்தில் முதல்முதல் பிடில் அப்யஸித்துக்கொள் என்று இவரை ஏற்படுத்தினார். மூன்று வருஷம் அப்யஸித்து ஆங்கிலேய ஸங்கீதமும், ஹிந்து ஸங்கீதத்தையும்

செவ்வையாய் வாசித்து மணலி முதலியார் முதலான ரஸிகர்களை திருப்தி அடையும்படி செய்தார். ஒரு நாள் முதலியார் சபையில் ஸொண்டி வெங்கட சுப்பையா டக்கா ராகத்தில் கீத, தானங்கள் வாசித்து முதலியாரைப் பார்த்து இந்த ராகம் எங்கள் வீட்டில் தானுண்டு என்று சொன்ன உடனே சிறு பிராயத்தோடு அந்த சபையிலிருந்த பாலுஸ்வாமி தீக்ஷிதர் முதலியாரைப் பார்த்து இந்த டக்கா ராகத்தை நானிதோ பாடுகிறேன் கேளுங்களென்று 'அரமஜ்ஜ அபராத' என்று பாடினவுடனே ஒரு முத்துக்கண்டியும், ஜோடி ஸால்வைகளும் கொடுத்து வெகுமானம் செய்தார்கள். கொஞ்ச காலத்திற்குப் பிறகு மகா பிரௌடர்களாகிய தன் தமையனர்களோடு காஞ்சி முதலான க்ஷேத்திரங்களில் வசித்து திருவாரூருக்கு வந்து அவ்விடத்தில் சில காலமிருந்து தன் தமையனரான சின்னஸ்வாமி தீக்ஷிதரோடு மதுரைக்கு வந்து சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது சின்னஸ்வாமி தீக்ஷிதர் காலமானர். அந்த துக்கம் தாங்க முடியாமல் ஹரி என்னும் சிஷ்யனோடு ஸேதுவுக்குப் போய் எட்டயபுரத்திற்கு வந்து மகாராஜாவைக் கண்டு அக்காலத்தில் புது வாத்யமாயிருந்த பிடிலை வாசிக்கவே மகாராஜா அவர்கள் சந்தோஷப்பட்டு வெகுமானித்து இவரது ஸங்கீத லக்ஷய லக்ஷணங்களின் ஸாமர்த்தியங்களை

யும், வீணை வாசிக்கும் மேன்மையையும் பார்த்து வீடு கட்டிக் கொடுத்து தன் ஸமஸ்தானத்தில் ஆஸ்தான பண்டிதராக நியமித்து கல்யாணமும் செய்து வைத்தார்.

அப்போதைய மகாராஜா அவர்களுடைய முதல் குமாரராகிய குமார எட்டப்ப மகாராஜா பாலுஸ்வாமி தீக்ஷிதரால் ஸங்கீத லக்ஷண லக்ஷயங்களை யறிந்தார். அந்த மகாராஜா அவர்களே பட்டாபிஷிக்தராகி ஸம்ஸ்கிருத பாஷையில் அநேக ராகங்களில் வர்ணக்கிரமங்களோடு செய்த கீர்த்தனங்களோடு வெகு சமத்கார கற்பனைகளுள்ள முக்தாயி ஸ்வரங்கள் மகாராஜா அவர்கள் ஸந்தோஷப்படும்படி இவரே செய்தார், தவிர கழுகுமலை கார்த்திகேய ஸ்வாமி விஷயமாக சாரங்கா, தர்பார், கன்னட, ருத்ரப்ரியா ராகங்களில் தெலுங்கில் கீர்த்தனங்கள் செய்தார். இவருக்கு அன்னபூரணி என்று ஒரு பெண் இருந்தாள். அந்த அம்மாளுடைய புத்திரர்தான் ஸுப்பராம தீக்ஷிதர். பாலுஸ்வாமி தீக்ஷிதருக்கு பிள்ளையில்லாததால் பேரனாகிய ஸுப்பராம தீக்ஷிதரை ஸ்வீகாரம் செய்துகொண்டார். இந்த ஸுப்பராம தீக்ஷிதருக்கு பிரம்மோபதேஸம் செய்து வைத்து வீணையை கற்பித்து, ஸங்கீத லக்ஷ்ய லக்ஷணங்கள் எல்லாவற்றையும் தெரியச் செய்தார்.

பாலுஸ்வாமி தீக்ஷிதர் மாகாராஜா பேரில் நாட்டை ராகத்தில் அடத் தாளத்தில் ஒரு தானவர்ணம் செய்து அந்த வர்ணந்திலுள்ள ஒவ்வொரு ஸ்வரமும் வெகு சமத்காரத்தோடிருக்கும்படிக்கும், கடைசி நாலாவர்த்தஸ்வரத்தில் நான்கு ஜாதிகளும் முறையாய் ஒவ்வொரு ஆவர்த்தத்திலும் அடங்கி இருக்கும்படிக்கும் ஸ்வரங்கள் அமைத்த தான வர்ணத்தை ராஜா அவர்கள் கேட்டு ஆயிரம் வராகன் விலையுள்ள சிகப்புக்கற்கள் இழைக்கப்பெற்றுசிங்கமும் வைத்த ஜோடி தோடாக்கள் பாலஸ்வாமி தீக்ஷிதரின் இரண்டு கைகளில் போட்டு ஜோடி ஸால்வைகள் கொடுத்து வெகுமதி அளித்தார்கள். அந்த ராஜாவுக் குப் பின் அவரது ஸஹோதரர் பட்டாபிஷிக்தராய் இவரிடத்திலேயே ஸங்கீத வித்தையைக் கற்றுக் கொண்டார். வெங்கடேஶ்வர எட்டப்ப மகாராஜாவின் மேல் ருத்ரப்ரியை, தர்பார், வஸந்த இந்த ராகங்களில் முத்தாயிஸ்வரங்களோடு செய்த தருக்களை மகாராஜா கேட்டு தருவொன்றுக்கு ஜோடி ஸால்வையும் ஆயிரம் வராகன்களும் கொடுத்து ஸம்மானித்து போஷித்து வந்தார், இவர் ஏகாதசி தவருமல் கீத கோவிந்தம் (அஷ்டபதி) பாடி பஜனை செய்து கொண்டிருப்பார். சகாப்தம் 1781, கி. பி. 1859 பிங்கள வருஷம் மாசி மாதம் சுக்லபக்ஷம் த்ருதீயையில் பரமபதம் அடைந்தார்.

44. சௌகம் சீனுவைய்யர்

இவர் திராவிட பிராமணர். ஸங்கீதத்தில் மிக வல்லவர். இவரைப்போல் சௌகமாய் (விளம்பமாய்) ராகாலாபனம் முதலியவை பாடுவது இன்னொரு பாடகரால் முடியாது, ஆதலால் அக்காலத்து பிரபுக்கள், பண்டிதர்கள், இவரை சௌகம் சீனுவைய்யர் என்று புகழ்ந்தார்கள். இவர் சரபோஜி ராஜா காலத்திலும் சிவாஜி ராஜா ஆரம்பகாலத்திலும் இருந்தவர்.

45. துரைசாமி அய்யர்

இவர் திராவிட பிராமணர். ஸங்கீதத்திலும் தெலுங்கிலும் பண்டிதர். இவர் "ஸுப்பிரமண்ய" முத்திரையுடன் எளிய நடையில் இனிமையாய் அநேக கீர்த்தனங்கள் செய்திருக்கிறார். சரபோஜி ராஜா காலத்திலும் சிவாஜிராஜா ஆரம்ப காலத்திலும் இருந்தவர்.

46. மத்யார்ஜுனம் பிரதாபசிம்ம மகாராஜா

இவர் தஞ்சையை அரசாண்ட அமரசிம்ம மகாராஜாவின் குமாரர். ஸம்ஸ்கிருதம், மஹாராஷ்டிரம் முதலில் பாஷைகளில் தேர்ந்தவர். ஸங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றவர். மிருதங்க வாத்யத்தில் மிக வல்லவர்.

இவர் மகாராஷ்டிர பாஷையில் வர்ணக்கிரமங்கள் விளங்கும்படி "நவரத்னமாலிகை" என்னும் ராகதாளமாலிகை யொன்று ஸ்வரகற்பனையோடு செய்திருக்கிறார். இவர் சிவாஜி ராஜாவுக்கு சில வருஷங்களுக்கு முன் காலம் சென்றார்.

47. ஸ்வாதித் திருநாள்

இந்த கிரீடபதி திருவனந்தபுரம் ஸமஸ்தானத்தை பரிபாலித்த மகாராஜா. ஸங்கீதத்தில் விசேஷ பக்தியுடையவர். இந்தக் கேரள தேசாதிபதி ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, ஆங்கிலம், கேரளம், ஹிந்துஸ்தானி முதலிய அநேக பாஷைகளைக் கற்ற சமர்த்தர். அநேக ரக்திராக, தேசீய ராகங்களில் இசைக் கற்பனையோடு ஸம்ஸ்கிருத ரூபங்களாக சௌகவர்ணங்கள் கணக்கற்ற கீர்த்தனங்கள் பத்மநாப, பங்கஜநாப போன்ற பர்யாய முத்திரைகளோடுசெய்திருக்கிறார்.ஸம்ஸ்கிருதபாஷையில் வெகு காவியங்கள் செய்திருக்கிறார். கேரள பாஷையிலும் வெகு உருப்படிகள் செய்திருக்கிறார். தெலுங்கில் சௌகவர்ணம் செய்திருக்கிறார். இந்த பத்மநாப தாசர் ஸ்ரீபத்மநாப பாதாரவிந்தத்தில் ஐக்கியமாய் சுமார் 103 வருஷமாகிறது.

48. வெங்கு பாகவதர்

இவர் திராவிட பிராமணர். தெலுங்கிலும், ஸங்கீதத்திலும் மிகுந்த வித்பத்தியுடைய இவர் திரு

நெல்வேலி ஜில்லாவில் வசித்து வந்தார். இவருக்கு அனேக கீர்த்தனங்கள் பாடங்கள் உண்டு. ராகாலாபனம் பல்லவி ஸ்வரங்கள் பாடுவதில் மிக திறமையுடையவர். இவர் தரு, கீர்த்தனம், தானவர்ணங்கள் அனேகம் செய்திருக்கிறார். இவர் தன்னுடைய எழுபது வயதுவரை ஜீவித்திருந்து கடைசியில் ஸ்ரீபுரம் அடைந்தார்.

49. சேஷாசல பாகவதர்

இவர் புதுக்கோட்டை ஸமஸ்தானத்து ஸங்கீத வித்வான். சாமா சாஸ்திரிகளுடைய சிஷ்யர். பாட்டில் மிக வல்லமையுள்ளவர். தெலுங்கில் இசை ரூபமாக கீர்த்தனங்கள் செய்திருக்கிறார். இவருடைய சஹோதரரான ராமதாஸர் என்பவர் ஸங்கீத ஸாஹித்ய வித்யா விசாரதர். தெலுங்கில் இசைக் கற்பனைகள் விளங்க ராம முத்ரையோடு அனேக கீர்த்தனங்கள் செய்திருக்கிறார் இவரதுகுமாரர் மாதுருபூதய்யர். இவர்ஸங்கீதவித்யாஸம்பன்னர். இவருடைய குமாரர் கோபாலசாமி அய்யர். இவர் ஸங்கீத லக்ஷண லக்ஷியங்களை அறிந்த காயகோத்தமர். இவர் புதுக்கோட்டை சமஸ்தான ஸங்கீத வித்வானாகயிருந்தார். ஸங்கீதம் தெரிந்தவர்களில் பழைய காலத்து பாணியாய் பல்லவி பாடும் முறையை நன்கு அறிந்து ஜீவஸ்தானங்கள் பிரகாசிக்கும்படியும் பாடுகிறவர்களில் இவரொருவர்.

50. ராமானந்த யதீந்தரர்

இவர் ஸமஸ்கிருதம் இவைகளில் சமர்த்தர். இவரால் செய்யப்பட்ட கௌரீ ராகப்ரபந்தத்தைக் கவனித்தால் இவருடைய பாண்டித்தியம் தெளிவாகும் இவர் அஹோபல பண்டிதருக்கு பிந்தியவரென தோன்றுகிறது.

51. நாராயண தீர்த்த யதீந்திரர்.

இவர் கிருஷ்ண ஜில்லாவில் பிறந்தவர்.தெலுங்கு பிராமணர். சிறுவயதிலேயே ஸகல சாஸ்திரங் களிலும் சங்கீதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவர் இவர் தமது இளமைப் பருவத்தில் தமது மாமியார் வீட்டுக்குப் புறப்பட்டார். வழியில் பூரண பிரவாஹத் துடன் ஓடிக்கொண்டிருந்த ஒரு நதியைக் கடந்து செல்ல வேண்டி வந்தது. தம் மனைவியிடமுள்ள வாஞ்சையினுல் அந்த பிரவாஹத்தையும் லக்ஷயம் செய்யாமல் நீந்திப் போவோமென்று ஆற்றில் இறங்கிவிட்டார். ஒரு பெருஞ்சுழியில் அகப்பட்டுக் கொண்டு, இனி தான் உயிர்பெற்றிருக்க மாட்டோம் என்று நினைத்து, தனக்கு இந்த துர்மரணம் வேண்டாம்; ஆபத்ஸன்யாஸத்துடனுவது மரிப்போம் என்று நினைத்து தனக்குத்தானே ஸன்யாஸம் பெற்றுக்கொண்டார். ஆனுல் அவர் சாகாமல்

எப்படியோ நதியைக் கடந்து விட்டார். அப்போது அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. நாம் ஸன்யாஸம் வாங்கிக்கொண்டது யாருக்குத் தெரியும் நமக்குத்தானே தெரியும். என்று தைரியமாய் மாமியார் வீட்டை அடைந்தார். ராத்திரி சயனக் கிரஹத்தை யடைந்தார். அப்போது இவருடைய மாமனாரும் மாமியாரும் தங்கள் பெண்ணை சயனக் கிரஹத்திற்கு அனுப்பிவைத்தார்கள். அவள் உள்ளே போன வுடனே பயந்துகொண்டு வெளியே வந்து விட்டாள். மாப்பிள்ளைக் கோபித்துக் கொண்டார். பெற்றோர்கள் இரண்டாவது முறை அனுப்பிய போதும் அப்படியே பயந்து வந்தாள். மறுபடியும் நிர்ப்பந்தப்படுத்தி யனுப்பவே அந்தப் பெண் அலறிக் கொண்டு வெளியில் வந்து, "அங்கு ஒரு சன்யாஸி யல்லவா உட்கார்ந்திருக்கிறார், அங்கு போகச் சொல் கிறீர்களே" என்று கதறினாள். என்ன சொல்லுகிறா ளென்று மருமகன் வெளியில் வந்து கேட்டார். உடனே பெண் சொன்னதைச் சொன்னார்கள். அவருக்கு இடி விழுந்தது போல் ஆயிற்று. உடனே பகவானை ஸ்மரித்தார். தாம் செய்த அபராதத்தை மன்னிக்கும்படி கதறினார். நான் மகா பாதகத்தைச் செய்ய மனம் கொண்டாலும் இம் மகாபாதகனையும் ஆட்கொண்டு நல்வழி படுத்திய உன் கருணையே கருணையென்று கதறினார். இனி பகவானை புகழ்ந்து

பாடுவதே பணியெனக் கொண்டார். பகவான், நீ செய்த மகா பாதகத்திற்கு இந்த ஜன்மத்திலேயே பலனை அனுபவித்துவிடு; அந்த அநுபவத்திற்கும் கடைசியில் முடிவைக் கொடுக்கிறேனென்று அசரீரி வாக்கருளினர் அதுமுதல் அவருக்கு கடுமையான வயிற்றுவலி ஆரம்பமாயிற்று. ஆந்த்ர தேசத்தி லிருந்து கிளம்பி திவ்ய க்ஷேத்திர யாத்திரை செய்து கொண்டு நடுக் காவேரியை அடைந்தார். அங்கு கோவிலில் தூங்கிக் கொண்டிருக்கையில் கண்ண பிரான் அவர் முன் தோன்றி பக்தா! வருந்த வேண்டாம்; உனது இந்நோய் விரைவில் நீங்கும்; அதிகாலையில் நீ விழித்துக் கொண்டவுடன் உன் கண்ணில் படும் உருவத்தைப் பின் தொடர்ந்து செல்; அவ்வுருவம் எங்கு மறைகிறதோ, அவ்விடம் நான் உனக்கு அருள்புரிவேன்' என்று கூறி மறைந்தார்,

காலையில் கண் விழித்ததும் ஸ்வாமி முன்பு கிழக்கு திசையிலிருந்து பெரிய (பன்றி) வராஹ மொன்று உறுமிக்கொண்டு வந்தது. ஸ்வாமிகள் அதைத் தொடர்ந்து சென்றார். அதுவும் பூபதி ராஜபுரம் கிராமத்தின் வழியாய் அதன் நடுவிலுள்ள வரத வெங்கடேசப் பெருமாள் கோயிலுள் நுழைந்து மறைந்தது. ஸன்யாஸியும் கோவிலுள் பார்க்க

வராஹ ரூபமெடுத்த வெங்கடேசப் பெருமாள் இருந்தாரே தவிர கூட வந்த வராஹத்தைக் காண வில்லை. ஸன்யாஸியின் நோய் நீங்கிற்று. உடனே அங்குள்ளவர் ஸன்யாஸியை ஆதரித்து வந்தனம் செய்தனர். ஸ்வாமியும் நடந்த விஷயங்களை விவரமாய் தெரியப்படுத்தினர், பகவான் வராஹ ரூபத்துடன் அவரை அவ்வூருக்கு அழைத்து வந்த தால் அது முதல் வராஹபுரம் என்ற பெயருடன் விளங்கிற்று. தற்காலத்தில் வரஹூர் என்று அழைத்து வருகிறார்கள். இந்த தீர்த்த நாராயண யதீந்திரர் ஸதா பஜனை செய்துவந்தார். ஒருநாள் பகவான் கனவில் தோன்றி "பக்தா! நாம் கிருஷ்ணவ தாரத்தில் செய்த லீலைகளை அமைத்து ஒரு கிரந்த மாகச் செய்து அதை என ஸன்னதியில் அரங்கேற்றி இங்குள்ள பக்தர்களைக் கொண்டு அக்கதையை பஜனை செய்து அபிநயிக்கச் செய்ய வேண்டும்" என்றருளி மறைந்தனர், அவ்விதமே சில தினத்தில் "கிருஷ்ணலீலா தாரங்கிணி" என்ற கிரந்தத்தைச் செய்து வெங்கடேசப் பெருமாள் சன்னிதியில் அரங்கேற்றி, பக்தர்களைக் கொண்டு தான் செய்த கிருஷ்ணலீலாப் பாடல்கள் முழுவதும் பகவானுல் ஒத்துக்கொள்ளப்பட்டதா? அதில் ஏதேனும் பிழைகள் இருக்குமா? என்று ஸ்ந்தேசித்து கடைசியில் ஒரு வகையாக சோதிக்க எண்ணி, தாம் பூஜித்து

வந்த ஸ்ரீனிவாசப்பெருமாளை சுற்றிலும் திரையால் மூடி, தாம் வெளியிலிருந்து பாடல்களைப் பாடி பஜிக்கவே திரையினுள் ப க வா ன் நர்த்தன பாடல் வேண்டும், அப்போது அச்சதங்கைச் சத்தம் தம் காதில் படவேண்டும், என்பதை மனதிற்கொண்டு அவ்விதமே பகவானை மறைத்து தரங்கங்களைப் பாடி பஜிக்கவே திரையினுள் பகவான் நர்த்தனமாடும் சதங்கை சத்தம் எந்தப் பாடல்களுக்குக் கேட்டதோ அந்தப் பாடல்களைமட்டும் எடுத்துக் கொண்டு மற்றவைகளை நீக்கி அன்பர்களுடன் ஆனந்தத்தில் மூழ்கினார்கள். கிருஷ்ண லீலாதரங்கிணீ என்னும் இந்நூல் அச்சிடப்பெற்று எங்கும் இப்பொழுது பரவியுள்ளது. இதைத் தவிர ஹரிபக்திஸுதார்ணவம் என்ற ஒரு காவ்யமும்; சாண்டில்ய மகரிஷி செய்த பக்தி மீமாம்ஸா என்ற பக்தி நூலுக்கு மேல் ஒரு பாஷ்யமும் இயற்றியிருப்பதாயும் தெரிகிறது. இவை அச்சுக்கு வரவில்லை. ஸ்வாமிகள் நித்திரையில் வந்து ஒரு நாள் கனவில் தோன்றி "கீழ்த்திசையிருக்கும் திருப்பூந்துருத்தி நகருக்கு செல்வாயாக; நீ ஜீவ ஸமாதியடையுமிட மதுவே; சுக்லபாக்ஷம் அஷ்டமிதிதி கார்த்திகை நக்ஷத்திரம் குருவாரம் கூடிய நன்னாளில் எமது பாதாரவிந்தமடைவாய், அவ்விடத்தில் நின் தெய்வீக சக்தி கற்ப கோடி காலம் வரையில் ஜோதி வடிவமாய் நின்றருளிரும்" என்று கூறி மறைந்தார்.

கனவு கண்ட மறுதினமே ஸ்வாமிகள் வரஹூரை விட்டு திருப்பூந்துருத்தியை அடைந்து புதர்களால் சூழப்பட்ட ஒரு மாமரத்தடியில் அமர்ந்து நிஷ்டையிலிருந்த சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு ஜோதி தோன்றக்கண்டார்களே யன்றி ஸ்வாமிகளைக் காணவில்லை. இவ்விதம் ஸ்வாமிகள் ஸமாதியடைந்த பிறகு அவரது ஸிஷ்யர்கள் குருபூஜை செய்தார்கள். இந்த குருபூஜை இப்பொழுதும் வருஷந்தோறும் நடைபெற்று வருகிறது. ஸ்ரீ தீர்த்த நாராயணய தீந்திரர் அஷ்டபதி, தரங்கம் என்று உலகில் பிரசித்தி பெற்ற கீதங்களில் தரங்கத்தை இயற்றி, திருக்காட்டுப் பள்ளிக் கடுத்த திருப்பூந்துருத்தி என்னும் சிவ க்ஷேத்திரத்தில் பகவானுடைய ஆணையால் தம் கடைசி காலத்தில் வசித்து, ஓர் ஏழையின் ஆட்டையும் உயிர்ப்பித்து ஈசனது கருணையால் அவ்விடத்திலேயே நிர்விகல்ப ஸமாதியடைந்தார். சிவனுடைய ஸன்னிதியில் நந்தியிருப்பதுபோல், இவருடைய ஸமாதியின் ஸன்னிதியில் ஒரு ஆடு சிலாரூபமாக இன்றும் விளங்குகிறது.

52. ஸ்ரீ ஸதாசிவப் பிரம்மேந்திரர்

ஸ்ரீ சதாசிவப் பிரம்மமென்று பிரக்யாதி யடைந்த ஸதாசிவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஒரு அவதூதர்.

இவர் சுமார் 225 வருஷங்களுக்கு முன்னர் காவிரி யாற்றங்கரையில் ஸஞ்சாரம் செய்தவர்.

இவர் திருவிசை நல்லூர் என்னும் கிராமத்தில் கல்வி பயின்றவர். ராமபத்திர தீக்ஷிதரும், அய்யா வாளென்று பிரஸித்திபெற்ற வெங்கேடசரும், மஹாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரியாரும் இவருடைய ஸஹபாடிகள்.

ஸதாசிவேந்திரர் தமது ஸஹாபாடிகளைக் காட்டி லும் மிக்க நுண்ணறிவுடையாவராய் விளங்கினர். வித்யாப்யாஸம் முடியுங் காலத்தில் ஒரு நாள் இவருடைய பத்தினி பருவமடைந்ததாகக் கேள்விப் பட்ட இவரது தாயார், அன்று விசேஷ போஜனம் சமைத்தனர். சமையல் முடிய நேரமாயிற்று. அன்று வழக்கம்போல் ஸதாசிவப் பிரம்மம் வீட்டுக்கு வந்து பார்க்கச் சமையல் முடியாமல் இருப்பதையும், அதற்குக் காரணத்தையும் தெரிந்துகொண்டு பின் வருமாறு யோசித்தார். ஸம்ஸார முளை கிளம்புவதற்கு முன்னரே போஜன காலந் தாழ்ந்தது. முளைத்தால் அதனல் எவ்வளவு துன்பங்கள் அனுபவிக்க வேண்டுமோ! ஆஹா பெருந் துன்பமானது ஸம்ஸாரம்!'' என்று நன்கு ஆராய்ந்து உடனே வீட்டை விட்டு வெளிக் கிளம்பி ஞானசார்யனை யடையப் புறப்பட்டார்.

அன்றுமுதல் உலகத்திற் சிறிதும் இன்பமில்லையென்ற நிச்சயமுடையவராய் விஷயங்களை வெறுத்து, மைத்ரீ கருணை முதலிய நற்குணங்களுடன் ஜாதிமத பேதமின்றி ஸமதர்ஶியாய்ப் பசிக்கு எது கிடைத்தாலும் அதை வாங்கி உண்பவராய் விளங்கினர். இப்படிப்பட்ட மகாத்மாவை அறியாதார் இவரைப் பைத்தியம் என்று தீர்மானித்தனர்.

இவர்பரம அனுக்கிரஹத்தினல்ஸ்ரீ பரமசிவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளை குருவாக அடைந்து யோகத்திலும் ஆத்ம அபரோக்ஷத்திலும் சித்தியடைந்தார். ஸ்ரீ ஸதாசிவேந்திரர் தமக்குள்ள சாஸ்திர பாண்டித்யத்தினல் தமது குருவினிடம வருபவரையெல்லாம் பற்பல கேள்விகளைக் கேட்டு அவமானப் படுத்திக்கொண்டிருந்தார்.

இதை பரமசிவேந்திரர் அறிந்து "ஸதாஶிவ! எப்பொழுது உன் வாய் மூடுமோ!" என்று கோபத்துடன் கூறியருளினர். உடனே ஸதாஶிவப் பிரம்மம் தமது விவேகமின்மையை உற்றுநோக்கி அன்றுமுதல் மௌன விரதத்தை மேற்கொண்டு தமது குருவை வணங்கித் தமது குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு ஸத்குருவின் உத்தரவு பெற்றுப் பரதேசியாய்க் கோயம்புத்தூர் ஜில்லாவில் அமராவதி நதீ தீரத்தில் ஸஞ்சரிப்பவராயினர்.

இவர் காவிரி நதீதீரத்தில் ஸமாதி பயின்று வரும் பொழுது ஒருநாள் திடீரென்று காவிரியில் வெள்ளம்வர அங்கு ஸமாதி புரிந்திருந்த பிரிம்மேந்திரரை வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டதே யென்று அங்கிருந்த ஜனங்கள் மிகவும் மனம் வருந்தி வீடு திரும்பினர்கள். சுமார் மூன்று மாதத்திற்குப் பிறகு நதிக் கால்வாயை வெட்டுகையில் ஸ்வாமிகள் ஸமாதி கலைந்து ஒன்று அறியாதவர் போல் போவாராயினர்.

இப்படி இவருடைய திருவிளையாடல் அநேகம். இவர் கண்டன யோகத்திற் சித்திபெற்றவர். இராக் காலங்களில் இவரது எல்லா அவயவங்களும் தனித் தனியா யிருக்கப் பலர் கண்டிருக்கின்றன ரென்று தெரிகின்றது. 1730-வது௵ முதல் 1769-வது௵ வரையில் புதுக்கோட்டையை ஆண்டிருந்த சிவ ஞானபுரம் துரையென்று வழங்கும் விஜயரகுநாத தொண்டமானென்பவர், 1738-வது ௵த்தில் புதுக் கோட்டைக்கு அருகே ஸதாஶிவப்பிரம்மத்தை தரிசித்தார். இவர் ஸ்வாமிகளை 8-வருஷம் பின்தொடர்ந்து சென்று சடைசியில் ஸ்வாமிகள் அனுக்கிரஹம அடைந்தார்.

பிரம்மேந்திரர் மௌனியாதலினல் தொண்டமானுக்கு மணலில் எழுதி உபதேஶித்தனர்.

அன்றியும் மற்றும் தெரிந்துகொள்ள தமது ஸஹ பாடி மஹாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரிகளைக் கேட்டு தெரிந்துக் கொள்ளுமாறும் ஆக்ஞாபித்தனர். அங்ஙனமே தொண்டமான் மேற்படி சாஸ்திரிகளிடத்தில் விஷயங்களைத் தெரிந்துகொண்டு நவராத்திரிப் பூஜை, தக்ஷிணாமூர்த்தி உத்ஸவம் முதலியன ஸ்வாமிகளின் உத்தரவுபடி நடத்தி வந்து பெரும்புகழ் பெற்றார்.

பிரம்மேந்திரர் எழுதி உபதேசித்த விடத்திலுள்ள மணல் இன்றும் புதுக்கோட்டையில் பூஜையிலிருக்கின்றது. உலர்ந்த சருகு காற்றில் சலிப்பது போலப் பிரம்மேந்திரர் யதேச்சையாய் தேசமெங்கும் ஸஞ்சரித்துக் கொண்டு நெரூரை அடைந்தார். ஒருநாள் அங்குள்ளவர்களுடன் ஸ்வாமிகள் "யான் மிதுனரவி ஜ்யேஷ்ட சுத்த பஞ்சமியன்று பரிபூர்ண நிலையை யடைவேன். அன்று காசியிலிருந்து ஒரு பிராமணர் பாண லிங்கமொன்று கொண்டு வருவார். அதை எனது ஸமாதிக்கருகே பிரதிஷ்டை செய்யுங்களென்று திருவாய் மலர்ந்தருளினர். அங்ஙனமே நெரூரிலுள்ள பிராமணோத்தமர்கள் செய்து முடித்தனர். இன்றும் இச்சமாதிக்கும் ஷை கோயிலுக்கும் பூஜை முதலிய வைபவங்கள் நடைபெறுகின்றன, ஸ்ரீ ஶ்ருங்கேரி ஶாரதா பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த ஶிவாபினவ நரஸிம்ஹ

பாரதீ ஸ்வாமிகள் அவர்கள் தம்முடைய ஸஞ்சார மார்க்கத்தில் நெரூரை யடைந்து அதிஷ்டானத்திற் குள் சென்று பூஜித்து, நெடுநேரம் ஸமாதியிலிருந்து ஸ்ரீபிரம்மேந்திரரை மனமுருகித் துதித்து 'ஸ்ரீஸதா ஶிவேந்திரஸ்துதி' என்னும் ஒரு நூலையும்இயற்றி யருளினர்.

ஸ்ரீ ஸதாஶிவப்பிரம்மேந்திரர் இயற்றிய நூல்கள் ப்ரம்மஸூத்ர வ்ருத்தி, யோகஸூத்ர வ்ருத்தி 12 உபநிஷத்துகளுக்கு தீபிகை, ஆத்ம வித்யா விலாஸம், அத்வைத ரஸ மஞ்சரி, ஸித்தாந்த கல்பவல்லி, ஸூதஸம்ஹிதாஸாரம். இவர் பரமஹம்ஸ முத்திரையோடு அநேக அத்வைத வேதாந்த கீர்த்தனைகள் செய்திருக்கிறார். இவர் அருளின உருப்படிகள் ஸங்கீத உலகில் மிகப் பிரஸித்தியோடு பாடப்பட்டு வருகின்றன.

53. அக்கிள் ஸ்வாமிகள்

இந்த யதீந்திரர் நூறு வருஷங்களுக்கு முன் னிருந்தவராக சொல்லுகிறார்கள். இவர் கிருஷ்ண பக்தர். இவர் சிதம்பரத்திற்கு ஸமீபத்தில் கொள்ளிடமென்னும் காவேரி தீரத்திலுள்ள ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். தனது ஜன்மாந்திர கர்ம வசத்தால் சரீரமெங்கும் வெடித்து உபாதியால் மிக்க கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது ஒரு

நாள் தன் சிஷ்யர்களைப் பார்த்து விடியற்காலையில் என்னைக் கொண்டு போய் கொள்ளிட ஆற்று மணல் திட்டில் விட்டு விட்டு சாயந்திரம் வந்து என்னைப் பாருங்கள் என்று சொல்ல, அவ்விதமே சிஷ்யர்கள் விட்டு விட்டு வந்தார்கள். அந்த யதிகள் மனதில் ஸ்ரீ கிருஷ்ண பகவானை தியானித்து “தாவககரகமலே” என்னும் கீர்த்தனத்தைப் பாடினுர். பகவானுடைய கருணையால் வெய்யில் குறைந்து வருவதைப் போல் இவர் உபாதி தீர்ந்த சரீரத்தோடு இருப்பதைக் கண்டு சிஷ்யர்கள் சந்தோஷித்து நமஸ்காரம் செய்து தங்கள் அக்கிரகாரத்துக்கு அழைத்துக்கொண்டு போனுர்கள், பிறகு அக்கிள் ஸ்வாமி வெகுகாலம் பகவானை பஜித்துக் கொண்டிருந்து ஸித்தியடைந்தார்.

54. ஸ்வயம்பிரகாச யதீந்திரர்

இவர் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு முதலிய பாஷைகளில் பாண்டித்யம் உடையவர். ஸங்கீதத்திலும் மிகச் சமர்த்தர். இவரால் செய்யப்பட்ட கீர்த்தனங்களால் இவரது இயலிசை புலமையின் செய்கை தெளிவாகும். 90 வருஷங்களுக்கு முன் மாயூர க்ஷேத்திரத்தில் வசித்திருந்ததாகத் தெரிகிறது.

55 சிவராமாச்சிரமாள்

இந்த யதிசிரேஷ்டர் ராமநாதபுரத்தின் சிற்றூர் ஆகிய லக்ஷ்மீபுரத்தில் தெலுங்கு பிராமணர் குலத்தில் உதித்து மருதாநெல்லூர் ஸ்வாமிகளுடைய சிஷ்யராய் பக்திமார்க்கக் கீர்த்தனைகள், உத்ஸவ ஸ்ம்பிரதாயக் கீர்த்தனைகள், அஷ்டபதி தமிழ் ராமாயணக் கீர்த்தனைகள், ஸம்ஸ்கிருத காவ்யங்கள் முதலியவை களைப் பயின்று இருபது வயதுக்குள் யதிகளாய் ஸகல க்ஷேத்திரங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூருக்கு வந்து தியாகராஜர் பேரிலுள்ள பக்தியின் மிகுதியால் யஜ்ஞேஸ்வர கட்டத்தில் வஸித்துக்கொண்டு ஸம்ஸ்கிருதத்திலும் தெலுங்கி லும் கீாத்தனங்களைச் செய்தது மன்றி, காந்தர்வ (இசை) ரூபமாக "நிஜபஜனஸுக பத்ததி" என்னும் ஒரு புஸ்தகம் இயற்றி சென்னையில் அச்சிட்டு பிரசித்தப்படுத்தி திருவாரூரிலேயே கி. பி. 1897-ல் சித்தியடைந்தார். இவர் எழுபது வயதுவரை இருந்தார்.

56. யுவரங்க பதங்கள்

இவை துளஜா மகாராஜாவின் காலத்தில் ரஸிகாக்ரேஸரனுய், விதரணசாலியாய், உடையார் பாளையம் ஸம்ஸ்தானுதிபதியாய் விளங்கின. யுவ ரங்கேந்திரன்மேல் இசைக்கற்பனையோடு

தெலுங்கில் அநேக பதங்கள் இயலிசைப் புலவர்களால் பாடப்பட்டது. இப்பதங்களை யுவரங்க பதங்களென்று சொல்லுவார்கள்,

57. பரிமளரங்கன்

பரிமளரங்க முத்திரையோடு இசைக்கற்பனைகள் விளங்க தெலுங்கில் யெதுகை மோனையோடு பதங்கள் செய்த பெரிய வித்வான். இவர் சென்னைக்கு வடதேசத்தியரென்றும் 250 வருஷம் முன்பு இருந்தவரென்றும் தெரிகிறது.

58. சாரங்கபாணி

இவரது பதங்கள் ஶ்ருங்கார ரஸமாயும் ஹாஸ்ய ரஸமாயும் அநேகங்கள் உள்ளன. இவர் வடதேசத்து தெலுங்கு பிராமணர். இவருடைய அங்கித முத்திரை வேணுகோபால'. சுமார் 250 வருஷங்களுக்கு முன்னிருந்தவரென்று தெரிய வருகிறது.

59. மெரட்டூர் வெங்கட்ராம சாஸ்திரிகள்

இவர் தெலுங்குப் பிராமணர். தஞ்சாவூருக்கு சமீபத்திலுள்ள மெரட்டூரில் வசித்து வந்தார். இவர் சரபோஜி மகாராஜா காலத்திலும், சிவாஜி மகாராஜா காலத்திலும் சில வருஷங்களுமிருந்தவர். தெலுங்கு பாஷையில் ஒப்பற்ற பாண்டித்யமுடையவர். இவரது

பதங்கள் கைசிகீ ரீதியாயும சொற்களினழகு வாய்ந்ததும் ஶ்ருங்கார ரஸ பூர்த்தியாயும் இருக்கும்.

60. சங்கராபரணம் நரஸய்யர்

சங்கராபரணராகம் பாடுவதில் மிக வல்லவரான இவர் தமிழில் இசைக் கற்பனையோடு அநேக பதங்கள் இயற்றியிருக்கிறார். இவர் சரபோஜி மகாராஜாவின் காலத்திலிருந்தவர்,

61. தெலுங்கில் ஶ்ருங்கார ரஸ பதங்கள் செய்த கவிகள்

(1) கடபல்லியார்	கைலாஸபதி	முத்திரை
(2) பொல்லபுராத்தார்	பொல்லவர	,,
(3) ஜடபல்லியார்	ஜடபல்லி கோபால	,,
(4) சோபனகிரியார்	சோபனகிரி	,,
(5) இனுகொண்டர்	இனுகொண்ட விஜயராம	முத்திரை
(6) சிவராம புரத்தார்	சிவராமபுரம் நாமபுர	,,
(7) வேணங்கியர்	வேணங்கி	,,
(8) மல்லிகர்ஜுனன்	மல்லிகார்ஜுன	,,

இவர்கள் தெலுங்கு தேசத்தியரும் தெலுங்கு பிராமணர்களுமாவர். சுமார் 250 வருஷங்களுக்கு உட்பட்டவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

62. தோடி ஸீதாராமய்யர்

தோடி ராகம் இவரது சொத்தாம். தோடி ராகத்தை வட்டிக்கு ஈடுவைத்து பணம் வாங்கி செலவு செய்வார். இவரிடத்தில் பாட்டுக் கேட்க ஆசைப்பட்ட அரசர்கள் பிரபுக்கள் முதலானவர்கள் அடகு வைத்த தோடி ராகத்தை வட்டியோடு முதலையும் கொடுத்து மேல்படி தோடி ராகத்தைப் பாடச் சொல்லிக் கேட்டு ஸம்மானிப்பார்கள். இவரால் இசைக் கற்பனைகள் நிறைந்த சில உருப்படிகள் செய்திருப்பதாக சொல்லுவதுண்டு. இவர் சரபோஜி மகாராஜாவின் ஆரம்ப காலத்தில் இருந்தவரென்று தெரியவருகிறது.

63. தச்சூர் சிங்காரசார்யுலு

இவர் தெலுங்கு வைஷ்ணவ பிராமணர். சாமா சாஸ்த்ரிகளின் குமாரரான சுப்பராய சாஸ்திரிகளின் சிஷ்யர். ஸம்ஸ்கிருதம், தெலுங்கு இவைகளில் நல்ல பாண்டியத்தோடு ஸங்கீதத்திலும் வல்லவர். லக்ஷணலக்ஷ்ய வித்வான். இசைக் கற்பனை விளங்க ஸம்ஸ்கிருதத்தில் இவரால் செய்யப்பட்ட சில கீர்த்தனங்கள் உள. பிடில் வாசிப்பதிலும் மிகசமர்த்தர். இவரும் பிடில்வாத்யத்தில் மிக வல்லவரானதச்சூர் சின்ன சிங்கராச்சாரியாரோடு ஸங்கீத லக்ஷ்ய லக்ஷணங்களுடன் பெரியோர்கள் செய்த கீதம், வர்ணம், கீர்த்தனம் பதங்களில் அனேகங்களும் தெலுங்கில் அச்சிட்டு

வெளியிட்டிருக்கிறார்கள். இவர்கள் வெளியிட்ட சில புஸ்தகங்களின் பெயர்கள் பின்வருமாறு:— (1) ஸ்வரமஞ்ஜரி, (2) காயக பாரிஜாதம், (3) ஸங்கீத கலாநிதி, (4) காயக லோசனம், (5) காயக ஸித்தாஞ்ஜனம்.

64. முத்துத் தாண்டவர்

இவர் தமிழிலும் ஸங்கீதத்திலும் பண்டிதர். சிவபக்தர்களில் மிக சிரேஷ்டர். ஸ்ரீ சபாபதியின் மேல் பக்தி ரஸமாயும் ஶ்ருங்கார ரஸமாயும் அநேக க்ருதிகளை செய்திருக்கிறார். இவர் அருணாசலக் கவிக்கு முன்பு இருந்தவரென்று தெரிய வருகிறது.

65. பாபவினாச முதலியார்

இவர் ஸங்கீதத்திலும் தமிழிலும் நல்ல பாண்டித்தியமுடையவர். பாபவினாச முத்திரையோடு நிந்தாஸ்துதியாக வெகு பதங்கள் செய்திருக்கிறார். இவர் துளஜா மஹாராஜா காலத்திலிருந்தவர்.

66. கனம் கிருஷ்ணய்யர்

இவர் ஸங்கீதத்திலும் தமிழ் பாஷையிலும் நல்ல தேர்ச்சியுற்றவர். பல்லவி பாடுவதில் மிக சமர்த்தர். இவருடைய பதங்கள் ஶ்ருங்கார ரஸமும் கடினமான வர்ண கிராமங்களும் ஒரிகை முதலிய

கடகங்களும் சேர்ந்துள்ளன. இவர் அரியல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திருக்குன்னத்தில் பிறந்தவர். இவருடைய தகப்பனுர் தஞ்சை ஸமஸ்தானம் வித்வான். புப்புலிக் கேசவய்யா தஞ்ஜைக்கு வந்த பொழுது இவர் தகப்பனுரான ராமஸ்வாமி அய்யரிட மிருந்து அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டு இருக்கிருர். அப்பொழுது கிருஷ்ணய்யரும் தஞ்சை ராஜாவால் ஆதரிக்கப்பட்டு வந்தார். பிறகு உடையார் பாளையம் வந்து வசித்துவந்தார். அந்தவூர் ஜெமீந் தாரான யுவரங்க பூபதி இவரை அன்போடு உபசரித்து வந்தார். இவரும் அப்த பூபதிமேல் அநேக பதங்களை செய்திருக்கிருர். இவர் தியாகராஜ ஸ்வாமிகள் காலத்திலிருந்தவர்.

67. மைசூர் ஸதாசிவ ராவ்

இவர் மஹாராஷ்டிர பிராமண குலத்தில் உதித்தவர். இவர் வாலாஜாப்பேட்டை வெங்கட்ராம பாகவதரின் சிஷ்யர். இவர் மைசூர் ஸமஸ்தானம் வித்வாஞக இருக்கையில் அனேக வர்ணம் கீர்த்தனம் தில்லாஞ முதலியவனுறை இயற்றி இருக்கிருர். இருவடைய உருப்படிகள் இப்பொழுது எல்லா வித்வான்களாலும் கையாளப்பட்டு வருகின்றன. இவருடைய அங்கித முத்திரை "ஸதாசிவ".

68. குன்னக்குடி கிருஷ்ணையர்

இவர் ராமனாதபுரம் ஸமஸ்தான வித்வான். தன்னுடைய பெயரை முத்திரையாக வைத்துக் கொண்டு அனேக வர்ணங்கள், க்ருதிகள், தில்லானா முதலியவற்றை இயற்றி இருக்கிறார். இவர் ஸங்கீதத்தில் லக்ஷண லக்ஷ்யங்களை நன்கு அறிந்தவர்,

69. வைத்தீச்வரன்கோவில் ஸுப்பராமய்யர்

இவர் தமிழிலும் ஸங்கீதத்திலும் வல்லவர். ராகச் சுவையோடு அநேக பதங்களை தமிழில் இயற்றியிருக்கிறார். "முத்துக்குமர" முத்திரையோடு இவர் செய்த பதங்கள் இப்பொழுதும் ப்ரஸித்தமாக பாடப்பட்டு வருகின்றன.

70. சின்னி கிருஷ்ணதாஸர்

இவர் தன்னுடைய பெயரை முத்திரையாக வைத்துக்கொண்டு தெலுங்கில் அநேக ஸ்வரஜதிகளும் க்ருதிகளும் செய்திருக்கிறார். இவர் செய்த உருப்படிகள் இப்பொழுதும் பாடப்பட்டு வருகின்றன

71. செங்கல்வராய சாஸ்திரி

இவர் செய்யூரைச் சேர்ந்தவர். செங்கல்வரய முத்திரையோடு அநேகக் கீர்த்தனம் செய்திருக்கிறார்.

இவர் மைசூர் ஸமஸ்தான வித்வான். லக்ஷண லக்ஷியத்தில் தேர்ச்சி பெற்றவர்.

72. பல்லவி சேஷய்யர்

இவர் முரிகநாடு வகுப்பைச் சேர்ந்த தெலுங்கு பிராமணர். தெலுங்கில் நல்ல பண்டிதர். ஸங்கீத லக்ஷண, லக்ஷ்யமறிந்த சிறந்த வித்வான். சேலம் ஜில்லாவிலுள்ள நெய்க்காரப்பட்டி கிராமத்தில் பிறந்ததால் இவரை நெய்க்காரப்பட்டி சேஷய்யர் என்றும் சொல்வதுண்டு. பல்லவி பாடுவதில் மிக சமர்த்தர்.

வெகு நெரடான (கஷ்டமான) பல்லவிகளையும் ஸர்வஸாதாரணமாகப் பாடி வித்வான்களை ப்ரமிக்கும் படி செய்திருக்கிறார். இவர் தன்னுடைய பெயரை முத்திரையாகக் கொண்டு அநேக க்ருதிகள், வர்ணங்கள், தில்லானக்கள் முதலிய உருப்படிகள் செய்திருக்கிறார். தவிரவும் அநேக அபூர்வ ராகங்களில் க்ருதிகளை செய்திருக்கிறார். அநேக ஸமஸ்தானங்களிற்குச் சென்று வித்வத்திறமையைக் காட்டி ஸன்மானங்களைப் பெற்றிருக்கிறார்.

இவர் கடைசிக்காலத்தில் சென்னையில் வசித்து வந்தார். இவருடைய முக்கிய சிஷ்யர்களில் மணத்தட்டை தொரஸாமி அய்யரொருவர். இவர் ஸாவேரி

ராகத்தை பாடுவதில் மிக சமர்த்தர். அதோடு பல்லவி பாடுவதிலும் சிறந்த வித்வான்.

73. பெத்த தாஸரி

இவர் நரஸிம்மஸ்வாமி பக்தர். அநேக பதங்களை செய்திருக்கிறார். தஞ்ஜையை ஆண்ட நாய்க்கர் மகாராஜா ஒரு ஸமயம் தாஸரி அவர்களை தன் பெயரில் ஒரு பதம் செய்யச் சொன்னபோது, நரஸிம்மனை ஸ்தோத்திரம் செய்த நாக்கால் நாய்க்கனை ஸ்தோத்திரம் செய்ய முடியாதென்று உறுதியாகச் சொல்லி விட்டார்.

74. கவிகுஞ்ஜர பாரதி

இவர் ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த பெருங்கரை கிராமத்தில் கி, பி. 1810-ம் வருஷத்தில் ஜனித்தார். ஸம்ஸ்கிருதம், தமிழ், ஸங்கீதம் இவைகளில் நல்ல தேர்ச்சி பெற்றார். தமிழில் இசை ரூபமாக அநேக பாடல்களை இயற்றி பிரஸித்தி யடைந்தார்; இவர் சிவகங்கை ஸமஸ்தான வித்வானாக யிருந்தார், பிறகு ராமநாதபுரம் சமஸ்தான வித்வானாக இருந்து அவ்விடத்து அரசனுடைய தம்பி பொன்னுஸ்வாமி தேவருடைய வேண்டுகோளுக்கிணங்கி அருணாசலக் கவி செய்த ராமநாடகத்தைப்போல் ஸ்கந்த புராணத்தைக் கீர்த்தன ரூபமாக இயற்ற 1865-ம் வரு

ஷத்தில் ஸ்கந்த புராணக் கீர்த்தனங்களைச் செய்து முடித்தார். இவர் செய்த உருப்படிகள் யாவும் இப்போது பழக்கத்தில் இருக்கின்றன. இவர் 86-வது வயதில் கி, பி 1896-ம் வருஷத்தில் ஸ்ரீபுரமடைந்தார்.

75. அருணாசலக்கவி

இவர் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த தில்லையாடி கிராமத்தில் கி. பி. 1711-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் தகப்பனார் பெயர் நல்லதம்பியாப் பிள்ளை. இவர் தாயார் பெயர் வள்ளியம்மை. இவர் தன்னுடைய சிறு வயதிலேயே தருமபுரம் மடத்து அம்பலவாணக் கவிராயரிடம் தமிழின் ஐந்து இலக்கணங்களும் கற்றுக்கொண்டார். கம்ப ராமாயணத்துக்கு பொருள் சொல்லி பிரசங்கம் செய்வதில் சமர்த்தர். ஸ்ரீராமாயணத்தை கதா ஸந்தர்ப்பங்கள் விடாமல் அந்தந்த ரஸங்களுக்குத் தகுந்த ராகங்களோடு வர்ணக் கிரமங்கள் பிரகாசிக்கும்படி ஆறு காண்டங்களையும் தமிழ்க் கீர்த்தனங்களாகச் செய்த ராம நாடகம் கி. பி. 1771 ல் முடிவடைந்தது. முதலில் ஸ்ரீரங்கனுதருடைய ஸன்னிதியில் அரங்கேற்றினர். பிறகு மணலி முத்துகிருஷ்ண முதலியார் சபையில் பாடி கனகாபிஷேகம் செய்யப்பெற்று கீர்த்தியடைந்தார். இவர் துளஜா மகாராஜா காலத்தில் இருந்தவர். இவரால் செய்யப்பட்ட சீர்காழி கோவை, சீர்காழி

ஸ்தல புராணம், ஹனுமார் பிள்ளைத் தமிழ், அயோமுகி நாடகம் முதலிய கிரந்தங்கள் இப்போதும் பிரசித்தமா யிருக்கிறது. இவர் கி. பி. 1778ல் காலமானார். தமிழ் பாஷையில் கீர்த்தன ரூபமாகச் செய்யப்பட்ட இவர் நூல். தென்னிந்தியாவில் பிரபல மடைந்திருக்கிறது.

76. கோபாலகிருஷ்ண பாரதி

இவர் தஞ்சை ஜில்லா திருவாரூர் ஸமீபமுள்ள நரிமணம் கிராமத்தில் கி. பி, 1811ஷூல் பிறந்தார். இவர் தன்னுடைய சிறு வயதிலேயே கோவிந்தயதி யிடம் வேதங்களைப் பயின்று, சங்கீதத்திலும், யோகம் செய்வதிலும் நல்ல தேர்ச்சி யடைந்தார், சிறு வயதிலேயே தாய் தந்தையர்களை இழந்தார். தன்னுடைய 24-வது வயதில் ஆனதாண்டவபுரம் சென்று அண்ணுவைய்யர் என்ற மிராசுதாரின் ஆதரவில் இருந்தார். கதா காலக்ஷேபம் செய்வதில் நிபுணரான இவர் அதன் மூலம் கிடைக்கும் பொருள் களையெல்லாம் தர்ம காரியங்களுக்குச் செலவு செய்தார். இவர் பிரம்மச்சாரியாகவே காலம் கழித்தார், கோபாலகிருஷ்ண முத்திரையுடன் அநேகக கீர்த்தனங்கள் தமிழில் செய்திருக்கிறார். இவர் நந்தனர் சரித்திரத்தை நாடக ரூபமாகக் கீர்த்தனைகளும், விருத்தங்களும், நிறைந்ததாகச் செய்ததோடு நூ'தன மெட்டுக்களாக

இரு சொல்லலங்காரம், நொண்டிச் சிந்து போன்ற வற்றிலும் பலவற்றை செய்திருக்கிருர், பாடல் களெல்லாம் ஸந்தர்ப்பங்களுக்கேற்றவாறு ராகதாளப் பொருத்தமும் பதச்சேர்க்கையும நன்கு பொருந்தி யிருக்கும். இதைத் தவிர இயற்பகை நாயனுர், திருநீலகண்ட நாயனுர், காரைக்காலம்மையார் சரித்திரம் ஸ்ரீ தேவநாயகம் பிள்ளை இவருடைய முக்கிய ஶிஷ்யராவார். கி.பி. 1881-வது வருஷத்தில் சிவராத்திரியன்று பரமபதமடைந்தார்.

77. வேதநாயகம் பிள்ளை

இவர் மாயவரத்தில் கி.பி. 1824ஹு முதல் கி.பி. 1889ஹு வரை ஜில்லா முன்சீப்பாக யிருந்தார். இவரால் செய்யப்பட்ட "பிரதாப முதலியார் சரித்திரமும்[3] ஸர்வஸமயக் கீர்த்தனங்களும் இப்போதும் மிகப் பிரசித்தமாகப் பாடப்பட்டு வருகின்றன, இவர் கோபால கிருஷ்ண பாரதியாகிய தன்குருவின் வழியைப் பின்பற்றி செய்திருக்கிருர், இவர் அங்கித முத்திரை வேதநாயக' இவருடைய உருப்படிகளில் சொற்சுவை, பொருட்சுவை, இசைச் சவை மிகமேன்மைப் பட்டிருக்கும்,

78. எட்டயபுரம் அரசர்கள்

1. வெங்கடேச்வர எட்டப்ப மகாராஜா கி. பி. 1816ஹு முதல் கி.பி. 1839ஹுவரை அரசாட்சி

செய்தார். இவர் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ், ஸங்கீதம் ஆகிய இவ்வித்தைகளில் சமர்த்தர். வைணிகர். இவர் முகாரி ராகத்தில் 'சிவகுரு நாதனே' என்னும் தமிழ்க் கீர்த்தனமும் அநேக தமிழ் விருத்தங்களும் செய்திருக்கிறார்.

இவருக்கு ஐந்து குமாரர்கள் 1. குமார எட்டப்ப அய்யன் அவர்கள் 2. வெங்கடேச்வர எட்டப்பர், 3. முத்துஸ்வாமி பாண்டியன் அவர்கள், 4. குமார முத்து பாண்டியன் அவர்கள், 5. ராமஸ்வாமிப் பாண்டியன் அவர்கள். இந்த ராஜ குடும்பத்திலுள்ள மகாராஜாக்கள் யாவரும் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் ஸங்கீதம் முதலிய வித்தைகளில் சமர்த்தர்களாயிருந்தார்கள். அதில்,

1. குமார எட்டப்ப நாயக்கர் அய்யன் அவர்கள் கார்த்திகேய முத்திரையோடு அநேகக் கீர்த்தனங்கள் செய்திருக்கிறார். அதோடு பல வித்வான்களை ஆதரித்து வந்திருக்கிறார்.
2. வெங்கடேச்வர எட்டப்ப நாயக்கர் அய்யன் அவர்கள் வீணை, ஸித்தார், ஜலதரங்கம், மிருதங்கம். கடம், முதலியவைகளில் தேற்சியுடையவர்.
3. முத்துஸ்வாமி எட்டப்ப மகாராஜா அவர்கள்

இவரும் இவருடைய சஹோதரர்களும் அநேக வித்வான்களை ஆதரித்து வந்தார்கள்: கடைசியாக இந்தப் பரம்பரையைச் சேர்ந்த வேங்கடேச்வர மகா ராஜா அவர்கள் கி. பி. 1899-வது வருஷத்தில் பட்டத்துக்கு வந்தார்: இவரும் தெலுங்கு, தமிழ் முதலிய பாஷைகளை கற்றுக் கொண்டு கழுகுமலை ஸுப்ரமண்யஸ்வாமி பேரில் கமாஸ் ராகத்தில் 'முருகா தருகிலையா' யென்றும் பைரவி ராகத்தில் 'வாவா நீ வள்ளிமணாளா' என்றும் இரண்டு கீர்த்தனங்கள் செய்திருக்கிறார் சுமார் கி. பி. 1885வருஷம் முதல் ஹிந்து ஸங்கீதத்தை ஒரு பாஷையைப் போல் ஸங்கீத மறிந்தவர்கள் பார்த்த மாத்திரத்தில் தெரிந்து பாடும்படி செய்ய வேண்டுமென்று அபிப்பிராயத்தோடு A. M. சின்ன சாமி முதலியார் M A., வாலாஜிப்பேட்டை கிருஷ்ண் பாகவதர்களிடம் ஸ்ரீ தியாகராஜருடைய 800 கீர்த்தனங்களை தானே (நொட்டேஷனோடு) எழுதி அதில் 40 கீர்த்தனங்கள் வரை ஸ்டாப் நொட்டே ஷனில் அச்சிடவித்தது மன்றி, சில சில்லரை கீர்த்தனங்களை அவரவர்கள் சொல்லும் லக்ஷணங் களோடு எழுதி அச்சியற்றினர், பிறகு ஸுப்பராம தீக்ஷிதரைத் தெரிந்து வரவழைத்து வேங்கடமகி ஸ்ம்பிரதாயத்திலுள்ள ராகாங்க உபாங்க பாஷாங்க கீதங்களும், தீக்ஷிதரவர்கள் கீர்த்தனங்களும்,

ஸ்டாப் நொட்டேஷனில் எழுதி அச்சிட வேண்டு மென்று சொன்னார். கமக ஸ்வரூபங்கள் தெரியாமல் கீர்த்தனம் முதலியவைகளை எவ்வாறு பாடவேண்டு மென்று சொன்னது முதல் நான்கு வருஷங்கள் வரை ஸுப்பராம தீக்ஷிதரிடம் கமக ஸ்வரூபங் களையும் லக்ஷ்ய லக்ஷணங்களோடு தெரிந்துக் கொண்டு, கமக அடையாளங்கள் ஏற்படுத்தி அவற்றை யந்திர ரூபமாக வார்த்துக் கொண்டிருக் கையில் பல இடையூறுகள் வந்தன. அதை பொருட் படுத்தாமல் முதலியார் ராஜாவை தெலுங்கிலாவது கிரந்தத்தைப் பூர்த்தி செய்து தரவேண்டு மென்று சொன்னதின் பேரில், அதற்கிணங்கி தெலுங்கு அச்சுக்களை வரவழித்து ஸுப்பராம தீக்ஷிதரால் "ஸங்கீத ஸம்பிரதாயப் பிரதர்சினி"யை அச்சிட்டுப் பூர்த்தியாகும்வரை சுமார் பதினாயிரம் ரூபாய்க்கு மேல் செலவாயிற்று என்று சொல்லலாம். மேல்படி கிரந்தம் கி. பி. 1904-ல் வெளிவந்தது. இவ்விதத்தில் உதவிசெய்து எட்டயபுரம் அரசர்கள் கீர்த்தி பெற்றார்கள்.

79. ஸுப்பராம தீக்ஷிதர்

இவர் கி. பி. 1839 விளம்பி ஸு ஐப்பிசி மீ ஹஸ்த நக்ஷத்திரத்தில் சிவராமய்யருக்கு இரண்டா வது குமாரராய் திருவாரூரில் ஜனித்தார். இவர்

தாயார் பெயர் அன்னபூர்ணி அம்மாள். இந்த அம்மாள் பாலஸ்வாமி தீக்ஷிதருடைய இளைய குமாரத்தி. பாலஸ்வாமி தீக்ஷிதர் ஸுப்பராம தீக்ஷிதரை ஐந்து வயதில் எட்டையபுரத்துக்கு அழைத்து வந்து ஸமஸ்கிருதம், தெலுங்கு, ஸங்கீதம், இவ்வித்தைகளை கற்பித்தார். அதோடு ஜோதிடத்திலும் பயிற்சி யளித்தார். பிறகு இவரை ஸ்வீகாரம் செய்து கொண்டு ஸ்ரீ வித்யா உபதேசம் செய்து வைத்தார. ஸுப்பராம தீக்ஷிதர் ஸகல ஶாஸ்த்திரங்களிலும் தேர்ச்சிபெற்றார். பிறகு வீணையைப்பயின்று ஸங்கீத லக்ஷண லக்ஷ்யங்களின் ரகஸ்யங்களையும் விவரமாய்த் தெரிந்து கொண்டு, 17 வது வயதில் தர்பார் ராகத்தில் அடதாளத்தில் ஒரு வர்ணம் செய்தார். ராஜாவால் அநேக ஸன்மானங்களைப் பெற்றார். காசிராமக்ரியா ராகத்தில் ஒரு தானவர்ணமும், சங்கராபரணத்தில் "சங்கராசார்யம்" என்னும் ஒரு கீர்த்தனமும் செய்து கும்பகோணம் ஜகத்குரு அவர்களை தரிசித்தார். இவரால் செய்யப்பட்ட அநேக உருப்படிகள் "ஸங்கீத ஸம்பிரதாய பிரதர்ஶினியில் அச்சிடப் பட்டுள்ளன. இதைத் தவிர இவர் எழுதிய பழைய காலத்து இயலிசைப் புலவர்களின் சரித்திரங்களும் இப் புத்தகத்தில் தெலுங்கு பாஷையிலிருக்கின்றன. இவரால் பிரசுரிக்கப்பட்ட ஸங்கீத ஸம்பிரதாய பிரதர்ஶினி கி. பி. 1904ல் வெளிவந்துள்ளது.

இவருக்கு ஸங்கீதவித்தையில் ஸாமர்த்யவானுகை. முத்துஸ்வாமி என்று ஒரு குமாரன் இருந்தார். இவர் கி. பி. 1906-ல் ஸ்ரீபுரமடைந்தார்.

80 அம்பி தீக்ஷிதர் (முத்துஸ்வாமி தீக்ஷியர்)

இவர் ஸுப்பராம தீக்ஷிதருடைய புதல்வர். இவருக்கும் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு முதலிய பாஷைகளில் நல்ல ஞானமுண்டு, ஸங்கீத லக்ஷண லக்ஷயமறிந்த எட்டயபுரம் ஆஸ்தான வித்வான். ஸ்ரீ வித்யா உபாஸகர். தீக்ஷித பரம்பரையில் கடைசியில் ப்ரக்யாதியாக இருந்தவர். இவர் தன்னுடைய 77-வது வயதில் ஸித்தியடைந்தார். இவருடைய புதல்வர்களில் பாலுஸ்வாமி என்றவர் இப்பொழுது திருச்சியிலிருக்கிருர். இவருடைய முக்கியமான சிஷ்யர்களிருவர். அவரில் அனந்தக்ருஷ்ணய்யர் வைணிக வித்வான். கல்கத்தாவில் தீக்ஷித கீர்த்தன பிரசாரம் செய்துகொண்டிருக்கிருர் அவருடைய தம்பி வைணிக வித்வான் ஸுந்தரமய்யர் அநேக அச்சிடாத பெரியார்களுடைய க்ருதிகளை தீக்ஷித கீர்த்தன மாலை என்று பல பாகங்களாகப் போட்டுக்கொண்டு பிரசாரப்படுத்திக் கொண்டுமிருக்கிருர்.

81. ராமஸ்வாமி சிவன்

இவர் மஹாவைத்யநாதய்யருடைய மூத்த ஸஹோதரர். இவர் தமிழ், தெலுங்கு, ஸங்கீதம் முதலியவைகளில் சமர்த்தர். ஸ்வராக்ஷரத்தை யுடைய 'பங்கஜாக்ஷிபை' என்னும் காம்போஜி வர்ணம் செய்திருக்கிறார். குஹதாஸ முத்திரையோடு அநேகத் தமிழ்க் கீர்த்தனங்களும் செய்திருக்கிறார். இவைகள் இப்பொழுதும் பிரஸித்தமாகப் பாடப்பட்டு வருகின்றன. இவரால் செய்யப்பட்ட பெரிய புராணக் கீர்த்தனங்களும் இருக்கின்றன.

82. மஹா வைத்யநாதய்யர்

இவர் கி. பி. 1844 முதல் கி. பி. 1893 வரை இருந்தார். இவர் ஸங்கீதத்தில் வல்லவர், அதோடு கதை பண்ணுவதிலும் சமர்த்தர். இவர் மானம்புச்சாவடி வெங்கட்ரரமய்யரிடம் ஸங்கீதம் பயின்றார். நல்ல துரித காலத்தில் பாடக்கூடிய சாரீரத்தை யுடையவர். 6 காலத்தில் மிக ஸுலபமாய் பாடுவார். பல ஸமஸ்தானபதிகளால் ஸன்மானிக்கப் பட்டவர். இவர் 72 மேள கர்த்தா ராகமாலிகை செய்திருக்கிறார். இவர் 49 வயதில் பரமபதடைந்தார்.

83. தர்மபுரி ஸுப்பராயர்-பட்டாபிராமய்யர்

தர்மபுரிஸுப்பராயர்-தர்மபுரி என்ற முத்திரை யோடும், பட்டாபிராமய்யா தாளவனேச முத்திரை யோடும் அழகாகஅநேகம் ஜாவளிகளை செய்திருக்கிறார்.

84. கர்பபுரியார்

கர்பபுரி முத்திரையோடு கரூர் தக்ஷிணாமூர்த்தி அய்யரும் தேவுடு ஐய்யரும் அநேக கீர்த்தனங்களை செய்திருக்கிறார்கள். தக்ஷிணாமூர்த்தி ஐய்யருக்கு தேவுடு ஐயர் ஒன்று விட்ட ஸஹோதரரென்று தெரிகிறது.

85. பட்டணம் ஸுப்ரமண்யய்யர்

இவர் (அஷ்டஸஹஸ்ரம்) பிராமண குலத்தில் பிறந்தவர். இவர் தன்னுடைய சிறு வயதில் மெலாட்டூர் கணபதி சாஸ்திரிகளிடம் ஸங்கீத ப்ரதமாப்யாஸம் செய்து பிறகு மானம்புச்சாவடி வெங்கடஸுப்பய்யரிடம் ஸங்கீதத்தை பயின்று வந்தார். சாதக முயற்சியால் ஸங்கீத உலகில் ப்ரகாசித்தார். இவர் அநேக தானவர்ணங்கள், க்ருதிகள், தில்லாணா, ஜாவாளிகள் முதலிய உருப் படிகளை ஸம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளில் இயற்றியிருக்கிறார். இவர் கிருதிகள்யாவும்தியாகராஜ ஸ்வாமிகளின்கிருதிகளைப் பின்பற்றியிருக்கும். இவருடைய அங்கித முத்திரை

"வெங்கடேஶ்வர" இவர் தன்னுடைய 32-வது வயதில் கல்யாணம் செய்து கொண்டு திருவையாரில் வஸித்து வந்தார். பிறகு ஜமீந்தார் ஆதரவில் சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தார். நாளடைவில் இவர் இங்கே வஸித்து வந்ததினுல் பட்டணம் ஸுப்ரமண்யய்யர் என்ற பெயர் வந்தது. இவர் பேகடாகம் பாடுவதில் மிக ஸமர்த்தர். இவர் 108 தாளத்தில், ஸிம்ஹனந்தன தாளத்தில் 1 ஆவர்த்தத்திற்கு 128 அக்ஷரகாலத்தையுடைய பல்லவியை செய்திருக்கிருர். இவருடைய சிஷ்யர்கள் அநேகம். அதில் முக்யமாக ராமநாதபுரம் (பூச்சி) ஸ்ரீனிவாச அய்யங்காரை யாரும் அறியாமலிருக்க முடியாது.

86. ராமனுதபுரம் ஸ்ரீனிவாச ஐய்யங்கார்

(பூச்சி ஐய்யங்கார்) இவர் பட்டணம் ஸுப்ரமண்யய்யரிடம் ஸங்கீதத்தை அப்யசித்து ராமனுதபுரம் ஸமஸ்தான வித்வானுக விளங்கி வந்தார். பல்லவி பாடுவதில் மிகவும் சமர்த்தர். இவர் சில தானவர்ணங்கள், கீர்த்தனங்கள், ஜாவளிகள், தில்லானு முதலியவைகள் ஸ்ரீநிவாஸ முத்திரையோடு செய்திருக்கிருர். இவர் செய்த உருப்படிகள் யாவும் இப்பொழுது பிரசித்தமாய் பாடப்பட்டு வருகின்றன. இவருடைய முக்கிய சிஷ்யர் அரியக்குடி ராமாநுஜய்யங்கார்.

87. ப்ரஸித்த நூல்கள் செய்தவர்கள்

(1) பரதரால் செய்யப்பட்ட நூல் நாட்யஶாஸ்திரம்
(2) நாரதரால் செய்யப்பட்ட நூல் ஸங்கீத மகரந்தம்,
(3) மதங்கரால் செய்யப்பட்ட நூல் ப்ருஹத்தேஶி,
(4) துளஜா மகாராஜாவால் செய்யப்பட்ட நூல் ஸங்கீதஸாராம்ருதம்.

88. ஆனை .அய்யா

இவர் இரு ஸஹோதரர்; ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, தமிழ், முதலிய பாஷைகளில் நல்ல பாண்டித்யமுடையவர். ஸங்கீதத்திலும் சிறந்த வித்வான் உமாதாஸ என்ற முத்திரையோடு தமிழிலும், தெலுங்கிலும், அநேக கீர்த்தனங்களைச் சேர்ந்து செய்திருக்கிறார்கள். இவர்கள் சரபோஜி மகாராஜாவின் காலத்தில் தஞ்சை ஆஸ்தானத்து வித்வானாக இருந்தார்கள்.

89. ப்ரபல ப்ராசீன வித்துவான்கள்

19-வது நூற்றாண்டு பாதிக்கு மேலும் 20-வது நூற்றாண்டிலிருந்த சில வித்வான்கள்.

1. கமாஸ்மாதவருவ், 2. அண்டனூர்ஸுப்பய்யர், 3. கோயம்புத்தூர் ராகவய்யர், 4. இரட்டை பல்லவி சிவராமய்யர், 5. பல்லவி தலைஞாயர் சோமுபாகவதர், 6. ப்ரும்மாண்ட வைத்தி, 7. பெரிய வைத்தி. 8. சின்ன

வைத்தி, 9. பிக்ஷாண்டார் கோயில் ஸுப்பராயர், 10. சாத்தனூர் பஞ்ஜுவைய்யர், 11. ப்ரதாப ராமஸ்வாமி பாகவதர், 12. ஸுப்பராமய்யர் (ஸங்கீத கௌமதி), 13. கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யர், 14. பிடாரம கிருஷ்ணப்பா, 15. நாமக்கல் நரஸிம்ம அய்யங்கார்.

இதர வாத்திய வித்துவான்கள்

1. வீணை சேஷண்ணு, 2. ஸ்ரீனிவாஸ நாயுடு (பாலஸரஸ்வதி), 3 (ஸ்வரபத்து) கிருஷ்ணய்யர். 4. (கோட்டு வாத்யம்) ஸ்ரீனிவாஸராவ், 5 (ஜல தரங்கம்) ஸுப்பய்யர், 6. (தசவாத்யம்) கிருஷ்ணய்யர் 7 (பிடில்) கோவிந்தஸ்வாமி பிள்ளை, 8. திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், 9 (புல்லாங்குழல்) சரபசாஸ்திரிகள், 10 (பாலசரஸ்வதி) ஜகன்னுத பட்கோஸ்வாமி.

மிருதங்க வித்வான்கள்

1. நாராயணஸ்வாமியப்பா, 2. மாமுண்டியா பிள்ளை, 3. டோலக்கு நன்னுமியா, 4. கடம் கிருஷ்ணய்யர், தக்ஷிணுமூர்த்திப் பிள்ளை.

90. C. S. கிருஷ்ணஸ்வாமி

இவர் திருநெல்வேலி ஜில்லாவில் வஸித்து வந்தார். ஸ்ரீஸுப்பராம தீக்ஷிதரிடம் இவர் ஸங்கீதம்

அப்யாசம் செய்து, தமிழ், தெலுங்கு, முதலான பாஷைகளில் அநேக, கீர்த்தனங்கள், ராகமாலிகை முதலிய உருப்படிகள், தன்னுடைய பெயரை முத்திரையாக வைத்து செய்திருக்கிறார். இவர் செய்த உருப்படிகள் தெலுங்குப் பதிப்பிலிருக்கின்றன.

91. கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதர்

இவர் தன் பெயரை முத்திரையாக வைத்துக் கொண்டு அநேகக் கீர்த்தனங்கள் தமிழிலும், தெலுங்கிலும் செய்திருக்கிறார். இவர் பல்லவி பாடுவதிலும், கதா காலக்ஷேபம் செய்வதிலும் மிக ஸமர்த்தர். இவர் "ஸங்கீத தத்வ ப்ரதர்ஶினி" என்ற ஒரு புஸ்தகம் பிரசுரித்திருக்கிறார். அதில் பல்லவியும் இவரால் செய்யப்பட்ட சில கீர்த்தனங்களும், தியாகராஜர், தீக்ஷிதர் இவர்களுடைய கீர்த்தனங்களும். சேர்ந்துள்ளன. இவர் ஒரு சிறந்த ஸ்ரீ வித்யா உபாஸகர், இவருடைய கடைசிக் காலத்தில் ஸன்யாஸம் பெற்று ஸித்தியடைந்தார்,

92. ஹரிகேஸநல்லூர் முத்தைய்யா பாகவதர்

இவர் மைசூர் ஸமஸ்தான வித்வானுகயிருந்து அநேக தானவர்ணங்கள், க்ருதிகள், முதலிய உருப்படிகளை தமிழ், தெலுங்கு, கன்னடம், முதலிய பாஷைகளில் ஹரிகேஶ முத்திரையோடு செய்து கீர்த்தி பெற்றார்.

93. மைஸூர் வாஸுதேவாசார்யார்

இவர் மைஸூர் ஆஸ்தானம் வித்வான் தெலுங்கிலும், கன்னடம், ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் கீர்த்தனங்கள் செய்து அச்சிட்டு பிரஸித்தபடுத்தியிருக்கிறார். இவருடைய முத்திரை வாஸுதேவ.

94. நெரூர் ஸ்ரீனிவாஸாசார்யார்

இவர் தன் பெயரை முத்திரையாகக் கொண்டு அநேக தமிழ்க் கீர்த்தனங்கள் இயற்றிருக்கிறார்.

95. வீணை கிருஷ்ணமாசார்யார்

இவர் அநேக வர்ணங்களும் க்ருதிகளும் இயற்றியிருக்கிறார். ஸ்ரீ டைகர் வரதாசார்யாரின் ஸஹோதரர்.

96. பாபநாசம் சிவன்

இவர் ராமதாஸ முத்திரையோடு அநேகத் தமிழ்க் கீர்த்தனங்கள் செய்திருக்கிறார். ஸம்ஸ்கிருதத்திலும் சில உருப்படிகள் செய்திருக்கிறார், இவருடைய உருப்படிகள் இப்பொழுது ரொம்பவும் பிரசாரத்தில் இருக்கிறது.

97. திருவனந்தபுரம் லக்ஷ்மணப்பிள்ளை

இந்த தமிழ் செல்வர் அநேக க்ருதி, கீர்த்தனங்கள் செய்து அதை ஒரு புஸ்தகமாக வெளியிட்டுக் கீர்த்தி பெற்றார்.

98. கோடீஸ்வரய்யர்

இவர் கவிகுஞ்ஜர பாரதியின் வம்சம் மஹா வைத்யநாதய்யர் செய்த மேளகர்த்தா ராகங்களைப் போல் கந்தகானமிருதம் என்னும் இரண்டு பாகங்களில் மேல்படி முதல்மேளத்திலிருந்து 72 மேளம் வரை கவிகுஞ்ஜரதாஸன் முத்திரையோடு தமிழில் பேரின்பக் கீர்த்தனங்களாகச் செய்திருக்கிறார். இவருடைய தமிழ் ஸாஹித்யங்கள், வர்ணக்கிரமங்கள் மிகவும் அழகோடு இப்பவும் பிரசாரத்திலிருக்கிறது. அவரும் தீக்ஷிதர் ஸித்தியடைந்த நரகசதுர்தசியில் சிவபுரமடைந்தார்:

99. மாயூரம் விஸ்வநாத சாஸ்திரிகள்

இவர் முருகனிடத்தில் பக்தியுள்ளவர். முருகன் மதுர கீர்த்தனை யென்று புஸ்தகம் பிரசுரித்திருக்கிறார்: இந்த புஸ்தகத்தில் இவரால் செய்யப்பட்ட தமிழ்க் கீர்த்தனங்கள் இருக்கின்றன. இவருடைய உருப்படி களும் இப்பொழுது பிரசாரத்திலிருக்கின்றன. இவர் தன் பெயரை முத்திரையாக வைத்திருக்கிறார்.

100. பரமேஸ்வர பாகவதர் [1815-1892.]

தன்னுடைய இளமைப் பருவத்தில் ப்ரஸித்தி பெற்று திருவனந்தபுரம் ஆஸ்தான வித்வானாக விளங்கினார். இவருக்கு இயற்கையாகவே நல்ல

ஶாரீர வஸதி உண்டு. இவரும் சில உருப்படிகள் செய்திருக்கிறார். இவருடைய சிறந்த சிஷ்யர் கோயம்புத்தூர் ராகவய்யர்.

101. பக்திரஸப் பாடல்கள் இயற்றிய மஹான்கள்

1. திருஞான ஸம்பந்தர். 2. திருநாவுகரசு ஸ்வாமிகள், 3. அப்பர் ஸ்வாமிகள், 4. ஸுந்தரர், 5. மாணிக்க வாசகர் (திருவாசகம்), 6. தாயுமானவர் 7. அருணகிரிநாதர் (திருப்புகழ்), 8. ராமலிங்க ஸ்வாமிகள்.

102. தமிழ்க் கீர்த்தனம் செய்த சில கவிகள்

மாரிமுத்தாப்பிள்ளை, அச்சுத தாஸர், மதுரகவி, மாம்பழக் கவிராயர், மூக்குப் புலவர், கடிகை நமசிவாயப் புலவர், முத்துக் குமாரப் புலவர்.

103. ஸம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் பக்திரஸப் பாடல்களை இயற்றிய சில கவிகள்

ராமசந்திர யதீந்திரர், கிரியப்பா, அல்லூரி வெங்கடாத்ரி ஸ்வாமிகள், நரஸிம்மதாஸர், ராமானுஜதாஸர், துளசிதாஸர், பாரங்குஶதாஸர், வெங்கட விட்டல தாஸர், மதுஸூதனதாஸர், மாம்பலம் ஆதிநாராயணதாஸர், வெங்கடவரததாஸர்.

சுபம் சுபம் சுபம்

வாக்கேயகாரர்களின் சரித்திரம் முற்றிற்று.